# ஞானம்பாள்

## இது ஒரு திவ்ய சரித்திரம்

திரிசிரபுரம்

திரு. அ. சிவாநந்தசாகர யோகீசுவரர்

கனிஷ்ட புத்திரி

**கஜாம்பிகையம்மாள்**

இயற்றியது.

நான்காவது பதிப்பு

சென்னை, திருவல்லிக்கேணி,

ஸ். ஜி. அய்யர் அண்டு கம்பெனியார்

வெளியிட்டது.

December 1920

ghts Reserved]

[விலை அணா 1

PRINTED AT THE
TATA PRINTING WO
5, THAMBU CHETTY ST

4

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# ஞானம்பாள்

பூர்வம் சோழநாட்டுக்கு இராஜதானியாயிருந்த உறையூருக்குப்பக்கத்தில் விருபாட்சிபுரமென்றொரு சிறிய கிராமமிருக்கின்றது. அவ்வூர் தனவந்தர்களிற் சிறந்த விசுவநாத ஐயரென்பவர் தன் பத்தினியாகிய சுந்தரியம்மாளோடு கூடி இல்லறம் நடத்திவரும் நாளில், அவரது பூர்வ புண்யவசத்தால் ஒரு சற்புத்திரன் ஜனித்தனன். அந்தக் குழந்தைக்கு முறைப்படி ஜாத கர்மாதிகளைச் செய்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துப் பாலசுந்தரமென்று பேரிட்டு மகிழ்ந்திருந்தார். புத்திரனுக்கு ஏழுவயதானதும் முறைப்படி உபநயனமுஞ் செய்வித்துக் காலத்திற் கல்விபயிற்றுவிக்கும்பொருட்டுப் பாடசாலைக்கனுப்பினர். ஒரு வருஷத்துக்குள் விசுவநாத ஐயருக்கு நீங்காத வியாதிகண்டதனால், தாம் பிழைப்பதரிதென்று கண்டு தமக்குள்ள திரண்ட சொத்துக்களையெல்லாம் தன் பத்தினி வசத்தில் ஒப்புவித்துவிட்டுப் புத்திரனைக் காப்பாற்றும் விஷயத்துக்குப் புத்திமதிகளைக் கூறிவிட்டுப் பரகதியடைந்தார். அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்துத்

தங்களுடைய காணி பூமிகளெல்லாம் வயலூரிலிருக்கிறபடியால் அவ்வூரிலேயே குடியாயிருந்துவிட்டாள். அங்கிருந்த பாடசாலைக்குப் புத்திரனை யனுப்பி வந்தாள். பாலசுந்தரம் மிகவும் புத்திசாலியானதால் நன்றாய்ப் படித்து, நாளுக்குநாள் கல்வியி லபிவிருத்தியாய்க்கொண்டே வந்தான். அவனுக்குப் பத்துவயதானதும் சமீபத்திலுள்ள திரிசிரபுரம் காலேஜில் சேர்ந்து படிந்து வருவஃந்தோறும் பரீட்சையில் தவறாமல்தேறி இனும்வாங்கி, உபாத்தியாயர்கட்கெல்லாந் திருப்தியுண்டாகும் படி நடந்துகொண்டு வந்து, பதினாலாம் வயதில் மெட்ரிகுலேஷன் கிளாவில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தான். ஆனால் பி.ஏ., எம்.ஏ. முதலிய வித்தியாபட்டம் பெறுவதிலவனுக்குப் பிரியமில்லை. ஏனென்றால் தனக்குத் திரண்ட ஆஸ்தியிருப்பதினால் படித்து உத்தியோகஞ்செய்து தான் சம்பாதிக்க வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லாமையால் மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணிவிட்டு குடும்பகாரியங்களைப் பார்த்துக்கொண்டு சுதேசக் கல்வியை ஏராளமாகக் கற்கவேண்டு மென்பது அவனது கருத்து. அவன் தாயாருக்கும் அப்படியே அபிப்பிராய மிருந்தது. அந்தக் காலம் சமீபித்துவிட்டதென்று மகிழ்ந்திருந்தான். அன்றியும் தமிழிலும் ஸமஸ்கிருதபாஷையிலுங் கூடியவரையில் விற்பத்திசெய்துகொண்டே வந்தான். கோடைகாலத்துக்காக ஸ்கூல் சாத்தப்பட்டபடியால் வயலூருக்குப்போய்ச் சுகமாய் காலங்கழித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் சாயந்திரம் திண்ணையிலுட்கார்ந்திருக்கும்போது யாரோ இரண்டு பிராமணர்கள் வந்து அவனை நோக்கி, "விருபாட்சிபுரம் விசுவநாதஐயர் வீடு இது தானோ?" என்றார்கள். அவன் ஆம் என்றவுடன் உள்ளே நுழைந்து சுந்தரியம்மாளைக் கண்டு வார்த்தையாடினபின் கீழ்வருமாறு பேசத்தொடங்கினார்கள்.

குருசாமி ஐயர் சுந்தரியம்மாளைநோக்கி, "அத்தங்கா! உன் குமாரனுக்கு விவாகமஹோற்சவங் கூடியிருக்கிறது. நீ என்ன சொல்கிறாய்," என்றார். அந்தம்மாள் தான் அனாதையா யிருப்பதால் தன் புத்திரன் விவாக விஷயத்தை எவர் மேற்போட்டுக்கொண்டு நடத்தப்போகிறார்களென்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தவளாதலால், இந்தவார்த்தை அமிர்தம் போலக் காதிற் பட்டவுடன் பரமாநந்தங் கொண்டு, "அதென்ன! அத்தான்! சவிஸ்தாரமாய்ச் சொல்லு" என்றாள். அவர், "சீர்காழி வக்கீல் இரத்தினமையரிருக்கிறாரே அவருக்கு ஞானம்பாள் என்றொரு குமாரத்தி யிருக்கிறாள். அவளுக்கு வயது பத்தாகிப் பதினொன்றாவது நடக்கிறது. ஆகையால் சீக்கிரத்தில் விவாகஞ் செய்யவேண்டுமென்பது ஐயர் கருத்து. அதைப்பற்றி விசாரித்து வரும்படி எங்களை யனுப்பினார். உன் புத்திரனுக்கே கொடுக்கவேண்டுமென்று வெகுநாளாய் நினைத்துக்கொண்டிருந்தார். அது இப்போது நிறைவேறுங் காலம் நேரிட்டது. அவர் பெண் நல்ல அழகும், அழகுக்கேற்ற குணமும், குணத்துக்கேற்ற ஒழுக்கமு முடையவள். நன்றாய்ப் படித்து மிருக்கிறாள். அவளுக்கு இங்கிலீஷ்கூட நன்றாய்ப் பேசவுந்தெரியும். இப்படிப்பட்ட பெண் கிடைப்பது துர்லபம். உன்னுடைய அதிர்ஷ்டந்தான் உனக்குக் கூட்டுவிக்கிறது. மறுத்துப்பேசாதே. நீ என் வார்த்தையைத் தட்டமாட்டாயென்று தெரிந்து நானே எல்லாவற்றையும் பேசி முடித்து விட்டேன். வரும் வெள்ளிக்கிழமை ஜாமத்துக்குமேல் பதினைந்து நாழிகைக்குள் முகூர்த்தம் வைத்திருக்கிறேன். உன் உடன்பாடு பெற்றுக் கொண்டு நாங்களிப்பொழுதே புறப்பட்டு திரிசிரபுரம் போய் ரயிலேறவேண்டும்," என்றார். தன் புத்திரனுடைய விவாக மஹோற்சவம் நாலு நாளுக்குள்ளிருக்கிறதென்றும், தான்

கண்குளிரப் பார்க்கலாமென்றும், நினைக்க நினைக்க அவள் உள்ளம் பூரித்தது. அடங்கா மகிழ்ச்சிகொண்டு, "நீ சொன்னால் சரி; எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆனால் பையனுடைய மனதை யறியவேண்டும்," என்று சொல்லி, பாலசுந்தரம் என்றவுடன், அவன் எதிரே வந்து, "ஏனம்மா! கூப்பிட்டாய்," என்றான். சமாசாரத்தை சொன்னவுடன் சற்றுத்தயங்கினான். ஆயினும் தாய் வார்த்தை தட்டப்படாதென்று நினைத்து, "அம்மா! என்னைக் கேட்பானேன்; உன்னிஷ்டம்போல நடத்திக்கொள்ளலாமே; நானுன் மனதுக்கு மாறுபடுவேனே!" என்றான். உடனே சுந்தரியம்மாள், "சரி! முகூர்த்தம் நடக்கட்டும்," என்றாள். குருசாமி ஐயர் சந்தோஷப்பட்டுக்கொண்டு, "நல்லது! அப்படியானால் நானிப்பொழுதே புறப்பட்டுப்போய் ஐயரவர்களுக்குத் தெரிவித்துவிட்டு, மீண்டும் உங்களையழைக்க வருகிறேன்," என்று சொல்லி, உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார். சுந்தரியம்மாள் வெகுபரபரப்புடன் கல்யாண நாளை யெதிர்நோக்கி ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்து, செலவுக்கு வேண்டிய பணம் முதலியவை சேகரித்துத் தயாராகக் காத்திருந்தாள். குருசாமி ஐயர் தாம் சொன்ன பிரகாரமே அவர்களைச் சீர்காழிக்கு அழைத்துக்கொண்டு போனார். விவாகமும் யாதொரு குறைவுமின்றி சந்தோஷகரமாக நிறைவேறியது. சுந்தரியம்மாள் தன் மருமகளுடைய குணத்தையும் அழகையுங்கண்டு மனமகிழ்ந்து, சில நாளங்கே தங்கியிருந்து, பாடசாலைதிறக்குங்காலம் சமீபித்ததனால் தன் புத்திரனையு மழைத்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தாள். பாலசுந்தரம் ஸ்கூலுக்குப் போய் கிரமமாய்ப் படித்துவந்தான். ஒரு மாசத்துக்குப்பின் சுந்தரியம்மாளும் பரலோகஞ்சேர்ந்தாள். பாலசுந்தரம் தாய்க்குச் செய்யவேண்

டிய கடன்களை முடித்துவிட்டு, மிகத் துக்கங் கொண்டிருந்தான். இந்த விசனத்தினாலும், குடும்பபாரஞ் சுமந்துவிட்டபடியாலும் படிப்பை கவனிக்க முடியாமற் போயிற்று. அவனுக்கு மேற்பார்க்க ஒருவருமில்லை. தானே தலைவனானன். அவனுடைய தந்தையார் காலத்திற் பரிசாரகஞ்செய்த சங்கரையனுடைய குமாரனே யிப்பொழுது பரிசாரகனாயிருந்தான். நற்குணமுடையவன். சுவாமிகாரிய துரந்தான். பொய் பேசவறியான். சோம்பல் கொள்ளான். எஜமானன் மனதுக்கு மாறுபடான். அவனுடைய கஷ்ட நஷ்டங்களைக் தன்னுடையதாகவே கருதி வீட்டுக் காரியங்களைப் பொறுத்து நடத்திவந்தான். இப்பேறபட்ட குணசாலி கிடைத்தது பாலசுந்தரத்தின் அதிர்ஷ்டந்தான். பாலசுந்தரமும் அவனை மிக நேசித்து வேலைக்காரனாகப் பாராமல் தோழனைப்போல பாவித்து வந்தான். நல்லசமயத்தில் அவனை தன்சொத்துக்களுக்கு மேன்பார்வை பார்த்து வரும்படி நியமித்துத் தான் படித்து வந்தான்.

இப்படி நடந்து வருகையில் ஒருநாள் சாயந்திரம் பாலசுந்தரம் மிக வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறதை வயல் சுற்றிப் பார்க்கப்போய்வந்த சுந்தரம் பார்த்து, "அப்பா! பாலசுந்தரம்! உனக்கென்ன மனவருத்தம் நேரிட்டது? நான் யாதொரு தப்பிதமுஞ் செய்யவில்லையே! வீட்டு வேலைக் காரர்கள் எதாவது தப்பிதஞ் செய்தார்களா? அப்படியிருந்தால் அவர்களை யிப்பொழுதே துரத்திவிட்டு வேறு தகுந்த மனிதரை நியமிக்கிறேன். என் மனம் வருந்துகின்றது. சீக்கிரம் சொல்," என்றான். அதற்கு அவன், "ஐயா! ஒருவரு மெனக்கு மனவருத்தமுண்டாக்கவில்லை; தெய்வமே யுண்டாக்கிற்று. மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தவறிப்போனேன். மத்தியானம் தான் கெஜட்டில் பார்த்தேன். அது

முதல் வருத்தமாயிருக்கிறது,'' என்றான். சுந்தரம் "நன்றா யிருக்கிறது; இதற்குத்தானா இவ்வளவு வருத்தம். இனி யந்த வருத்தத்தை யொழி. உனக்குப் போதுமான படிப் பையே கடவுள் கொடுத்தார்; நன்றாய்ப் படிக்கவும் எழுதவும் பேசவுந் தெரிந்தால் போதாதா! வித்தியாபட்ட முனக்கென் னத்துக்கு? அநேகம் வேலையாட்களை வைத்துக்கொண்டு நடத்தும்படியான உனது காணி பூமிகளை யோசித்துப்பார். அது எவ்வளவு பெரிது. அதைப் பாதுகாத்து மகாராஜனைப் போல வீற்றிருக்கும்படியான அந்தஸ்தில் உன்னை வைத் திருக்குங் கடவுளுக்கு வந்தனம் செய். இனி படிப்பை நிறுத்திவிடு. நீ பரீட்சையில் தேறினாலும் தேறாவிட்டாலும் இந்த வருஷத்தோடு படிப்பை நிறுத்திவிட வேண்டுமென்பது என்னபிப்பிராயம். நாளை என்கூடவந்து உனது பூமியைச் சுற்றிப்பார். பின் யோசித்துக்கொள்வோம். மன்க்கவலை யொழிந் தெழுந்திருந்து சந்தியாவந்தனம் செய்துவிட்டுப் போஜனஞ்செய்து படுத்துக்கொண்டு கவலையற்றுந் தூங்கு,'' என்றான். பாலசுந்தரம் சற்றுக் கவலையொழிந்து எல்லா வற்றையும் முடித்துக்கொண்டு போஜனம் செய்து நித்திரை போனான்.

மறுநாள் விடியற்கால மெழுந்திருந்து சுந்தரத்தோடு கூடத் தன் வயல் முதலியவற்றைப் பார்க்கச் சென்றான். வயல் வெளிக்குப் போனவுடன் சுந்தரம், பாலசுந்தரத்தைப் பார்த்துச் "சற்று நிமிர்ந்து பார். அதோ தெரிகிற தோட்டங் களும், தோப்புகளும், நன்செய் புன்செய்களும் இவையெல்லா முன்னுடையது தான். அதோ வேலைசெய்கிறவர்களெல்லா ரும் உன்னுடைய வேலைக்காரர்களேயாம். நன்செயில் நானூறு ஏக்கரும், புன்செயில் எண்ணூறு ஏக்கரும் ஆக ஆயிரத்திரு நூறு ஏக்கர்களிருக்கின்றன. அளவில்லாத மா, புளி, பலா,

நெல்லி முதலான விருட்சங்களுமிருக்கின்றன. அதோ இருக்கிற மூங்கிற் புதர்களைப் பார்; மேகமண்டலம்வரை நீண்டுயர்ந்து தழைந்திருக்கின்றன. அந்தக் கருவைக்காட்டைப் பார். எவ்வளவு தூரம் பரந்திருக்கிறது!'' என்று காட்டி, "இவற்றைச்சரியாய்ப் பார்த்துப் பயிர்செய்துவந்தால் அளவற்ற ஐசுவரியம் சம்பாதிக்கலாம். ஆகையால் படிப்பை நிறுத்திவிட்டுச் சொந்த வேலையைப் பார்த்தால் மிக நல்லது. "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு'' எனவும், "மேழிச்செல்வங் கோழைபடாது'' எனவும், ஆன்றோர் கூறிய வாக்கியத்தின் பிரகாரம் இந்தத் தொழிலுக்குச் சமானமில்லை,'' என்று கூறினான். அதுமுதலாகப் பாலசுந்தரத்துக்கு மனக்கவலை சிறிதுசிறிதாக ஒழிந்துபோகத் தானே பயிரிடுந்தொழிலிற் பிரவேசித்தான். சுந்தர மவனுக்கு மனமொத்த தோழனாகவும், மதிபுகட்டும் மந்திரியாகவுமிருந்து, எல்லாக்காரியங்களையும் நடத்தி வந்தான். பாலசுந்தரம் பண்ணை வேலைகளைக் கவனித்து ஒழுங்காய் நடத்தி வந்தபடியால் திரண்ட செல்வஞ் சேர்த்து பெரிய தனவந்தனாய் விட்டான். ஒழிந்த நேரங்களிலெல்லாம் தமிழ் பாஷையும் ஸம்ஸ்கிருதமும் பயின்று வந்தான். அக்காலத்திற் சிறந்த வித்துவானாகிய திருநெல்வேலி சபாபதி பிள்ளையவர்களும், சதுர்சாஸ்திர வல்லவராகிய சிந்தாமணி சாமி சாஸ்திரிகளும், அவனுக்கு உபாத்தியாயராய்க் கல்வி கற்பித்து வந்தார்கள். இப்படியாக அவன் கல்வியும் செல்வமும் நிரம்பப்பெற்றுக் கீர்த்தியோடு வாழ்ந்து வந்தான்.

பாலசுந்திரத்தின் மனைவி ஞானம்பாள் நற்குணமுடையவளாயினும் பெற்றோருக்கு அவள் ஒரே குழந்தையானமையால் அவர்கள் அவளை மிகச்செல்வமாக வளர்த்து வந்தார்கள். அதனால் அவளுக்குப் பிடிவாதமும் முரட்டுத்தன

மும் மிகுந்திருந்தன. இவள் அவ்வூரிலுள்ள கிறிஸ்துவப் பாடசாலையிற் படித்து வந்தபடியால் அவர்களுடைய நடவடிக்கையேபடிந்து வந்தது. கிறிஸ்துவர்களைப்போலப் பாவாடை தாவணி அணிதலும், மஞ்சளுக்குப் பதிலாகச் சோப்பு என்கிற சுண்ணும்பு பூசிக்கொள்வதும், பாழ்நெற்றியாகத் திரிவதும் சிறந்த பழக்கங்களாயின. சிவ விஷ்ணு நாமங்களைக் காதாலே கேட்டால் உடனே பரிகாசம் பண்ணத் தொடங்குவாள். கிறிஸ்துவ உபாத்திச்சி வார்த்தையே அவளுக்கு வேதவாக்கியம். அவள் வார்த்தையை மீறி நடப்பதில்லை. அந்த உபாத்திச்சியும் எப்படியாவது இவளைக் கிறிஸ்துவ வலைக்குட் சிக்கவைக்க வேண்டுமென்று கருதி யிருந்தாள். அதற்குத் தக்க உபாயங்களெல்லாம் தேடிக்கொண்டு வந்தாள். ஞானம்பாளுக்குத் தான் கிறிஸ்துவச்சியாயிருப்பதில் மிகச் சந்தோஷந்தான். தாய் தந்தையரைப் பிரியுங் கஷ்டமொன்றிருந்தது. அதனுல் கொஞ்சந் தடைப்பட்டிருந்தாள். கிறிஸ்துவப் பாடசாலையிற் படித்து வந்தபடியால் அவளுடைய நடையுடை பாவனைகளெல்லாம் மாறிப்போய்விட்டன. உபாத்திச்சியுபதேசத்தால் இறுமாப்பும், கல்விக்கருவமும், அடங்காக் குணமும் உண்டாயின. தாய் தந்தையர் இதை யறிந்தும் அவளுக்குச் சரியான வயசு வந்தால் நல்லவழிக்கு வருவாளென்றும், இப்பொழுது குழந்தை யாகையால், அறியாத் தனத்தாலப்படியெல்லாம் நடந்துவருகிறுளென்று மெண்ணி, அவளுடைய நடவடிக்கைகளை யலட்சியம் பண்ணி வந்தார்கள். ஞானம்பாள் லோயர் ஸெகண்டரி பரீட்சையில் தேறியிருந்தாள். இங்கிலீஷிலும் தமிழிலும் சிறிது தேர்ச்சியிருந்தது. இதனுல் தான் படித்து பாஸ்பண்ணி விட்டோமென்றும் தன்னுயகன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தவறிப்போய் விட்டதும், மறுபடியும் படியாமல் விட்டுவிட்டதும்

அவளுக்குத் தீராத வருத்தமாயிருந்தது. தனது இறுமாப்பினாலும், கல்விச் செருக்கினாலும், உபதேச மகிமையாலும், கல்வியில்லாதவனும், உத்தியோகஞ் செய்யாமலும் வயல் வேலைகளைக் கவனித்து ஈனத்தொழிலைச் செய்து ஜீவிப்பவனுமாகிய ஒரு புருஷனோடு கூடி வாழ்வது தனக்குக் குறைவாகவே கருதினாள். அவனோடு கூடி வாழ்வதைவிடக் கணவனில்லாமல் தனித்திருப்பதே நலமென்று நிச்சயம் பண்ணிக்கொண்டாள். ஆயினு மவள் புத்திசாலியானதால், இதையொருவரோடுஞ் சொல்லாமல் தன் மனதிலே யடக்கி வைத்திருந்தாள். இப்பொழுதவளுக்கு வயது பதின்மூன்றாயிற்று. புஷ்பவதியாய் வீட்டை விட்டு வெளியிற் புறப்படாமலிருந்தாள். ஆனால் அடிக்கடி கிறிஸ்துவ உபாத்திச்சி மாத்திரம் காலை மாலை இருவேளையும் வீட்டுக்கு வந்து அவளோடு பேசிப்போவாள்.

இது நிற்க, ஞானம்பாள் புஷ்பவதியானதும் அவளுடைய மாதா பிதாக்கள் தேசாசாரப்படி பாலசுந்தரத்துக்குச் சோபனம் சொல்லி யனுப்பினார்கள். பாலசுந்தரத்துக்கு அது மிக மகிழ்ச்சியாயிருந்தது. "நல்ல ஞாலமும் வானமும் பெறினு, மெல்லாமில்லை யில்லில்லோர்க்கே" என்றபடி, தனக்குள்ள ஐசுவரிய முதலிய வெல்லாம் ஞானம்பாளில்லாமல் தான் தனித்து வாழும்வரை சிறப்புப்பெறா தெனவும், அவளோடு கூடி வாழ்வதே யிந்த ஐசுவரியத்துக்குப் பயனாமெனவுங் கருதியிருந்தானாகையால், சோபன ஸமாசாரங் கேட்டதும் உள்ளுக்குள்ளே யடங்கா மகிழ்ச்சி கொண்டான். தான் ஞானம்பாளோடு கூடி யில்லற மியற்றுங்காலம் சமீபத்தில் வந்து விட்டதென்று குதூகலங்கொண்டான். பல சொல்லிப் பயனில்லை; ஞானம்பாள் அவனை யெவ்வளவு அலட்சியஞ் செய்தாளோ. அதைவிட மூன்றுமடங் கதிகமாக அவனை

நேசித்து ஆசை கொண்டான். இது முதலாக ஞானம்பாள் தன் வீடு வந்தபின் அவளுடுத்துக்கொள்வதற்காக விதம் விதமான பட்டாடைகளும், ஆபரணங்களும், விநோதமான படங்களும், பால் நெய் தயிருக்கும் குறைவில்லாதிருக்கும் படி பல பசுக்களும், இன்னும் வேண்டுவனபலவும் சேகரித்து வைத்தான். ஞானம்பாளிட்ட வேலை செய்வதற்கு வேண்டிய வேலைக்காரர்களைக்கூட இப்பொழுதே அமர்த்தி வைத்து விட்டான். இவ்வாறெல்லாம் தயார் செய்துவிட்டு ஞானம் பாளை வீட்டுக்கு அழைப்பதைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் காலையில் ஒரு போஸ்ட்ப்யூன் ஒரு லெட்டரைக்கொண்டுவந்து பால சுந்தரத்தினிடங் கொடுத்துவிட்டுப் போனவுடனே, அவன் அதைப் பிரித்துப் பார்த்தான். அது அவனுடைய மாமனு ரனுப்பிய கடிதம். அவனுடைய மாமனார், பாலசுந்தரம் சீர் காழிக் கொருமுறை வந்துபோகவேண்டுமென் றெழுதியிருந் தார். பாலசுந்தரம், தன் மாமனாரைத்தவிரத் தனக்கு வேறு பெரியவர்களில்லாமையால் அவரிடத்து உண்மையான விசு வாசம் வைத்து அவரைக் கனம்பண்ணி வந்தமையால், அவ் வாறே சீர்காழிக்குப் புறப்பட்டுபோய்த் தன் மாமனாருக்கும் மாமியாருக்கும் வந்தனம் பண்ணி, அவர்களுடைய ஆசீர்வச னம் பெற்று மகிழ்ந்திருந்தான். ஞானம்பாளை யொருதரம் கண்குளிரப் பார்க்க விரும்பினான். அவள் தனக்குப் படிப் பில்லாத கணவன் வாய்த்ததனால் மிகவும் அவமானப்பட்டி ருப்பதால் அவனுக்கெதிரில் வரவும் கருதாமல் மறைந்தே யிருந்தாள். மறுநாள் மத்தியான்ன போஜனம் முடிந்தபின் இரத்தினமையர் தன் மருமகனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு சொல்லுகிறார்.

" பாலசுந்தரம்! இப்பொழுது ஞானம்பாளுக்குச் சாந்தி

செய்யவேண்டுமல்லவா? அதைக்குறித்து எனக்குத்தோன்று கிறதைச் சொல்லுகிறேன். நமது ஜாதிமுறைபோல உறவு முறையார்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அதே பெருங் கூட்டமாகும். ஊரிலுள்ள ஜனங்களும் சேர்ந்தால் அதிகக் கூட்டமாகும். தவிர அநேக பெண்களும் வருவார்கள். அவர் களை யுபசரிக்கத் தகுந்த சிமாட்டிகள் வேண்டும். கல்யாண காரியங்கள் செய்வதற்கு மனிதர்கள் வேண்டாமா? இந்தச் சௌகரியங்களெல்லா முனக்குக் குறைவாயிருக்கின்றன. இவ் விடத்தில் அவைகள் குறைவற்றிருக்கின்றன. ஆதலால் சாந்தி முகூர்த்தத்தை யிவ்விடத்திலே தானே செய்து விட்டால் நல்லதென்று நினைக்கிறேன். மாமனார் வீட்டில் வந்து முகூர்த் தஞ் செய்துகொள்வது குறைவென்று நினையாதே; ஏனென் றால் நானுன்னை மாப்பிள்ளையாக மாத்திரங்கொள்ளவில்லை. எனக்குப் புத்திர னில்லாமையால் ஞானம்பாளும் நீயுமே யெனக்குப் புத்திரியும் புத்திரனுமாம். ஆதலாலிது உன் வீடேயாம். அதனாலுன் வீட்டில் நடத்திக்கொள்வதிலென்ன தடை சொல்லுகிறாய்? தடைசொல்லாமலொப்புக்கொண்டு நடத்தினால் நன்று. உன் மாமியாருக்கு மிதுவே கருத்து," என்றார். பாலசுந்தரமும், "அப்படியே செய்வோம்," என்று கூறினான். இரத்தினமையர் இதனால் மிகமகிழ்ந்து, தன் மனைவியிடத்திலுந்தெரிவித்துக் கல்யாணகாரியங்களைத் துரித மாக நடத்தும்படி திட்டஞ்செய்துவிட்டு ஜோசியர்களை யழைக்கச் சொன்னார். ஜோசியர் வந்தவுடனே அடுத்த மாசத்தில் முகூர்த்தம் வைத்துக்கொண்டார்கள். பாலசுந்தரம் முகூர்த்தத்துக்கு முதல் நாள் வருவதாகச்சொல்லி யுத்தரவு பெற்றுக்கொண்டு வயலூர் வந்து சுந்தரமையரிடத்தில் நடந்த சமாசாரத்தைச் சொன்னான். அவர் அவன்செய்த ஏற்பாடு நியாயந்தானென்று சொல்லி வேண்டியவைகளைத் தயார் செய்துகொண்டிருந்தார்.

இது நடந்த இரண்டொரு தினங்களுக்குப் பின் உபாத்திச்சி பால்மரியம்மாள் ஞானம்பாளிடத்துக்கு வந்து பேசிக்கொண்டிருக்கையில். அவளது தோழிமீனாட்சிவந்து,"ஞானம்பாளுக்குச் சோபனமாய் அவள்புருஷன் வீட்டுக்குப் போய்விட்டால், பின் நீர் யாரோடு பேசுவீர்?" என்று கேட்டாள். அதற்கு உபாத்திச்சி, "அப்படியா! எப்பொழுது முகூர்த்தம்?" என்றாள். மீனாட்சி, "வருகிற வெள்ளிக்கிழமை," என்றாள்.

உபாத்திச்சி:—அப்படியானால் எனக்கு மிகச்சந்தோஷந்தான். ஞானம்பாளுடைய படிப்புக்கும், அந்தஸ்துக்கும், குணத்துக்கும் ஏற்ற கணவனில்லாமை பற்றி யெனக்குச் சிறிது வருத்த முண்டாகிறது. என்ன செய்யலாம். அவளுடைய அதிர்ஷ்டம் அவ்வளவு தான்.

மீனாட்சி:—அவளுக்கு என்ன குறையிருக்கின்றது. அவளுடைய கணவனுக்கு வயலூரென்ற ஒரு ஏகபோக கிராமமிருக்கின்றது. அவ்வூருக்கு அவனே தலைவன். வருஷத்துக்கு இருபதினாயிர ரூபாய் வரும்படி யிருக்கிறது. இஷ்ட போகங்களை யனுபவித்துக்கொண்டு இராஜாத்திபோலச் சுகமாயிருக்கலாம்.

உபாத்திச்சி:—எவ்வளவு ஐசுவரிய மிருந்தால் தானென்ன? எல்லாப் பெண்களையும்போல உள்ளுக்குள்ளே சிறைப் பட்டிருக்கவேண்டியது தானே. பி.ஏ., எம்.ஏ. பட்டம்பெற்றவனாயிருந்தால் அவன் ஐரோப்பியருடைய நாகரீகத்தை யனுசரித்துநடத்துவான். அப்பொழுது ஞானம்பாளும் சர்வசுதந்தர முடையவளாய் வாழ்வாள். அப்படியில்லாமையே வருத்தத்துக்கிடமாகின்றது. கல்வியறிவில்லாத அவனது கணவன் இந்துக்களுடைய குருட்டு வழியை யனுசரித்துத் தானே

நடப்பான். அவனோடு வாழ்வதினால் என்ன சுகமுண்டு! சுதந்தரமில்லாவிட்டால் மிருகத்தைப்போலத் தானே!

மீனாட்சி:—அது என் மனதுக்குப் படவில்லை; அவளுக்கேன் சுதந்தரமில்லாமற் போகும்! அவளுடைய நாயகன் அவளுக்குரிமையில்லா விட்டாலல்லவோ அவளுக்கு சுதந்தரமில்லாமற் போம். புருஷன் வீட்டில் அவளுக்கு மேலாயிருந்து அதிகாரஞ்செலுத்துபவ ரொருவருமில்லை. அவளுடைய நாயகனே அவளைத் தன்னுயிரினுஞ் சிறந்தவளாக மதித்திருக்கிறான். இங்கிலீஷ் பரீட்சைகளில் தேர்ச்சியடையாவிட்டாலும், தமிழ் ஸமஸ்கிருதங்களில் மகா வல்லமை யுடையவன். இங்கிலீஷ் நன்றாய்பேசவு மெழுதவுந் தெரிந்தவன். ஆதலால் ஞானம்பாள் அதிக அதிர்ஷ்டசாலியென்பது தான் எங்களெல்லோருடைய அபிப்பிராயம்.

உபாத்திச்சி—"மீனாட்சி நீ சொல்வது சரிதான். தமிழ் ஸமஸ்கிருதம்படித்த பண்டிதர்களுக்குப் புதிய நாகரீகந் தெரியாது. பூர்வகாலத்து வழக்கங்களைக் கண்மூடித்தனமாய்க் கைப்பற்றிக்கொண்டு நடப்பதினாலே ஸ்திரீகளுக்குச் சரியான நன்மை கிடைப்பதில்லை. என்னவோ "குண்டு மணிக்குக் கறுப்பு குறுக்கே புகுந்தாற்போல்" நமது ஞானம்பாளுக்கு வாய்த்தது. எவ்வளவு செல்வமிருந்தாலும் நாகரீகமுணராதவர் கூட்டுறவு, ஐசுவரியவானுக்கு வயிற்றுவலி வந்தாற்போல, யாதொரு சுகமுமில்லை," என்று கண்கலங்கிக் கூறினாள். மீனாட்சியை யாரோ கூப்பிட்டதனால் அவளெழுந்து போய்விட்டாள். பின் உபாத்திச்சி ஞானம்பாளைப் பார்த்து, "இனி நானுன்னைப் பார்க்கவும் முடியாது. ஏனென்றால் நீ உன் புருஷன் வீட்டுக்குப் போய் விடுவாய்; அவ்விடத்தில் உனக்குச் காவலும், கட்டு திட்டங்களும் கடினமாயிருக்கும். கூட்டிலடைத்த பறவையைப்போலச் சுவாதீன

மற்று, வீட்டுக்குள்ளேயே கதவையடைத்துக்கொண்டிருப்பாய்; இந்தியர்களுக்குள் இந்த வழக்கம் நிரம்பவுங்கெட்டது. இருந்தாலுங் கிறிஸ்துவர்களாகிய எங்களுக்குள் அவ்விதமான கெட்டவழக்க மொருவாறு குறைந்து வருகிறது. என் புருஷன் வீட்டிலிருக்கிறான். நான் பத்துமணிக்குப் புறப்பட்டு வெளியில்போய் இரவு பத்து மணிக்கு வீடுபோய்ச் சேர்ந்தாலும் என்னையேனென்று கேட்கமாட்டான். அஞ்ஞானியாகிய உன்கணவன் இப்படியிருக்க ஒருபோதுஞ் சம்மதிக்கமாட்டான். ஆதலால் நம்முடைய சிநேகிதத்துக்கு முடிவுகாலம் வந்துவிட்டது," என்று கண்களில் நீர் பெருக வருந்தி, "ஆடு நனைகிறதென்று கோனு யழுததுபோல" அழுதுகொண்டு சொல்லி விட்டு, அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தாள். ஞானம்பாள் உபாத்திச்சியிடத்தில் அதிகப் பிரியமுள்ளவ ளாதலாலும், அவள் வார்த்தையில் நம்பிக்கை மிகுதியாகக் கொண்டிருந்தவ ளாதலாலும், அவள் சொன்னதெல்லாஞ் சரியான வார்த்தைகள் தானென்றும், அவள் கூறியவாறு தனக்கு நேரிட விருக்கும் நிர்ப்பந்தத்தினின்றுந் தப்பித்துக்கொள்ளும்வழி யாதென்றும் தன் மனதிற்குள் யோசித்துக்கொண்டிருந்தாள்.

ஞானம்பாளுடைய தாய் தகப்பன்மார் சோபன காரியத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துமுடித்து, மருமகன் வரவுக் கெதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். முகூர்த்த நாள் நெருங்கியது. எல்லாரும் சோபனகாரியத்தைக் குறித்துக் கரைகடந்த சந்தோஷத்தில் மூழ்கியிருந்தார்கள். இனி தம்பதிகளின் அபிப்பிராயமோ ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தது. பாலசுந்தரம் தான் மனைவியோடு பேசிக் கூடி மகிழ்ந்திருக்கும் காலம் சமீபித்ததென்று அளவுகடந்த களிப்படைந்தான். ஞானம்பாள் சோபனகாலத்தில் அணி

ந்துகொள்வதற்காக உயர்ந்த பட்டாடைகளும், நூதன வஸ்துக்களும் சேகரித்து வைத்துக்கொண்டு, அந்த நாளை யெதிர்பார்த்திருந்தான். ஞானம்பாளோ உபாத்திச்சியின் தந்திரத்தையறியாமல் அவள் வார்த்தையில் மதிமயங்கிக் கணவனிடத்தில் அன்பில்லாமையால் தன் சோபனநாளைச் சபித்துக்கொண்டும், இந்த அவமானத்தை யெப்படி நிவிர்த்திசெய்துகொள்ளுவதென்றும் தனக்குள்ளே யோசித்துக் கொண்டும், மனம் வருந்தி யிருந்தாள். கடைசியாகத் தான் கணவன் வீட்டுக்குப் போகாம லிருப்பதற்கும், அவனோடு கூடி வாழாமலிருப்பதற்கும் ஒருபாயங் கண்டு பிடித்து, அதனை உபாத்திச்சிக்குத் தெரியப்படுத்தினாள். அவள் தகுந்த யுக்திதானென்று ஒத்துக்கொண்டபடியால் சிறிது திருப்தி யடைந்திருந்தாள். ஆனாலும் அவள் முகத்தில் பிரகாசமில்லை. அது முதல் அவள் ஒருவரோடுஞ் சரியாய்ப் பேசவில்லை. பாலசுந்தரம் வந்து ஞானம்பாளுக்காக விலையுயர்ந்த பட்டுவஸ்திரம், ரவிக்கை, சிறந்த நகைகள் முதலியன வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தான். உற்றார் உறவினரெல்லாரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களெல்லாரும் பாலசுந்தரம் ஞானம்பாளுக்காகக் கொண்டுவந்திருக்கும் வஸ்திராபரணங்களையும், அவளுடைய தந்தை அவளுக்குச் சீதனமாகக்கொடுப்பதற்கு வாங்கி வைத்திருக்கும் வஸ்துக்களையும் பார்த்து வியந்து மகிழ்ந்தார்கள். ஞானம்பாளுக்கோ அருவருப்பாக விருந்தது. அவளது மனமொத்த தோழிகளும் சோபனத்துக்காக வந்திருக்கும் உறவினர் வீட்டுப் பெண்களும் பரியாசமாகவும், வேடிக்கை விநோதமாகவும் பேசுகிற வசனங்களெல்லாம் அவளுக்குக் கர்ண கடூரமாக விருந்தன. எல்லாருக்கும் மகிழ்ச்சியைத் தரும் அந்தச் சோபன நாள் அவளுக்கு விசனத்தை யளித்தது. முகூர்த்தம் வெகு கம்பீரமாக நடந்தேறிற்று.

இரவு எட்டு மணிக்கு நிஷேகலக்கினம் வைத்திருந்தார்கள். அஸ்தமித்ததும் வஸ்திராப்ரணங்களாலும் சந்தன புஷ்பாதி பரிமளவஸ்துக்களாலும் ஞானம்பாளை மஹாலட்சுமி இவளே என்று கண்டோர் கூறும்படி யலங்கரித்தார்கள். அவளழகைப் பார்த்து யாவருங் களிகூர்ந்தார்கள். போஜனஞ்செய்தபின் பலதானமுதலியன வழங்கிச் சோபனகாரியத்தைப் பூர்த்திசெய்து, அலங்கரித்திருக்கும் பள்ளியறையில் அவளைக்கொண்டுவந்து விட்டுவிட்டு, யாவரும் படுத்து நித்திரைபோனார்கள். பாலசுந்தரம் தன் மனைவியின் அழகைக் கண்டு மனதுக்கடங்கா மகிழ்ச்சிகொண்டு, அவளோடு பேசி விளையாடி மகிழவேண்டுமென்கிற ஆசையினால் ஒவ்வொரு மாத்திரைப்பொழுதையு மொவ்வொரு கற்பமாகக் கழித்துக் கொண்டிருந்தவனாதலால், அவளைத் தனியாகக் கண்டதும் பரமானந்தங்கொண்டு, அவளைநோக்கி, "ஞானம்பா! இங்கேவா," என்று கூப்பிட்டான். ஞானம்பாள் அங்கிருந்த ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பவள்போல அவன் கூப்பிட்டதைக் கவனியாமலிருந்தாள். மறுபடியும், "ஞானம்பா! இங்கேவா," என்று மூன்றுதரம் அழைத்தான். அதற்கும் பதில் இல்லை. முகத்தைக் கவிழ்த்து நிலத்தை நோக்கி வாய்திறவாம லிருந்தாள். பாலசுந்தரம் அதைப்பார்த்து, இதுவரைக்கும் அவள் தன்னோடுபேசினதும் தனித்திருந்ததும் இல்லாதபடியாலும் இது முதல்தரமானபடியாலும் அவள் வெட்கமும் பயமுங் கொண்டு சும்மா இருக்கிறாள் என்றும், சிறு பெண்ணானதால் தாயை விட்டுப் பிரியாமல் அவளிடத்திலேயே படுத்து நித்திரைபோனவளாதலால் இன்றையதினம் இரவு தாயை விட்டுப்பிரிந்து தனித்துப்படுக்க நேரிட்ட வருத்தத்தால் இருந்தாலும் இருக்கலாமென்றும் நினைத்து

மறுபடியும் கூப்பிட்டான். அப்பொழுதும் பதிலில்லை. இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்தால் தானே தன்னிடம் வருவாளென்றும், அப்பொழுது சற்றுப்பயம் நீங்குமென்றும் கருதிச் சற்று சும்மா இருந்தான். இப்பொழுது ஞானம்பாள் நிலைமை பரிதாபமாயிருந்தது; அவள் மன மயங்கியது. தன்னுடைய நாயகனது முக சவுந்தரியத்தையும், இனிமையான வசன சாதுரியத்தையுங் கண்டு கேட்டு அவன் பேரில் மனம் நாடியது. அவன் கூப்பிட்டதற்கு மறுமொழி கூறவேண்டுமென்று தோன்றியது. ஆயினும் பால்மரியம்மாளுடைய உருவமும் அவளுடைய உபதேசமும் எதிரே வந்து நிற்கிறுப்போ லிருந்தது. அப்பொழுது அவளுக்குக் கொடுத்த வாக்குத் தவறுவது எவ்வகையிலும் நியாயமல்ல என்று மனதிற்பட்டது. அன்றியும் தான் தனது நாயகனுக்கு இணங்காமலிருப்பது பெற்ற தாய் தகப்பனுக்குத் தெரிந்துவிட்டால் அவர்கள் கோபிப்பார்களே யென்கிற அச்சமொன்று இடையிலே வந்து புகுந்தது. இப்படி அவளுடைய மனமானது பல எறும்புகளுக்கு இடையிலே அகப்பட்டுக் கொண்டு வருந்துகிற நாகப்பூச்சியைப்போலத் துடிதுடித்தது. இன்னது செய்கிறதென்று அவளுக்குத் தோன்றவில்லை. பைத்தியம் பிடித்தாற்போல உட்கார்ந்துகொண்டிருந்தாள். எப்படியானாலும் பலநாளையப் பழக்கமே வெற்றி கொள்ளுமாதலால், வாத்திச்சி உபதேசமே எல்லா எண்ணங்களையு மேற்கொண்டதனால் மனம் சிறிது கடினப்பட்டது. கொஞ்சங் கொஞ்சமாக முற்றுங் கடினப்பட்டது. தன் அத்தைமகள் விசாலாட்சியும், தோழி மீனாட்சியும் பி. ஏ. பட்டம் பெற்று டிப்டிகலெக்டரும் ஜட்ஜுமாயிருக்கிற நாயகன்மார்களுக்கு வாழ்க்கைப்பட்டுக் களிப்புற்றிருக்கையில், தான் மெட்ரிகுலேஷன்கூடப் பாஸ்பண்ணாமல் வயல்வேலை

பார்த்துக்கொண்டிருக்கும் புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டிருப்பது குறைவேயென்று தோன்றியது. சற்றுநேரம் பொறுத்து, மறுபடியும் பாலசுந்தரம், "ஞானம்பா! ஞானம்பா!!" என்று கூப்பிட்டான். பதில் யாதொன்று மில்லை. இதைப் பார்த்து, நாம் அவளை அழைத்தது பிசகு, பெண்களுக்கு "நாணம் என்னும் சிறந்தகுண மொன்றுண் டல்லவா!" அது வல்லவோ அவர்கள் கற்புநிலை கெடாமல் பாதுகாக்கும் காவலாயிருக்கின்றது. இவள் நல்ல குலமகளாதலால் மிகுந்த நாணமுடையவளாயிருக்கிறாள். ஆதலால் தான் நமக்கு மறுமொழி கொடாமலும், தான் அருகில் வராமலும் இருக்கிறாளென்று கருதி, கட்டிலைவிட்டுக் கீழேயிறங்கி அவளிடம் போய், அவளது கையைப் பிடித்துக்கொண்டு, முகத்தைச் சற்று நிமித்திப் பிடித்துப் பார்த்து, "ஞானம்பா! உனக்கென்னவருத்தம்? அதற்குக் காரணம் யாது? சொன்னால் அது எதுவா யிருந்தாலும், இந்த க்ஷணத்திலேயே நிவர்த்தி செய்து, உன்னைச் சந்தோஷப்படுத்துகிறேன். நீ தனியாக இருந்து வருத்தப்படுகிறதைப் பார்த்தால் என் மனம் புண்படுகின்றது! எழுந்திருந்து வா," என்று கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய்க் கட்டிலின்மேலே உட்கார வைத்துப் பல இனிமையான வசனங்கள் கூறினான். ஒரு மணிநேரம்வரை பெவ்விதமான சமாதானங்கள் கூறியும் அவள் வாயைத் திறக்கவுமில்லை, தன் கணவன் முகத்தைப் பார்க்கவுமில்லை. பாலசுந்தரம் இனி யென்ன செய்யலாம், அவளிஷ்டம்போல விட்டுப் பின் வழிக்குக்கொண்டுவருவோமென்று கருதி, "ஞானம்பா! நீ பேசாவிட்டால் கிடக்கிறது. நாழிகை பதினைந்துக்கு மேலாய்விட்டது. கண்விழித்திருப்பது நியாயமல்ல; உடம்புக்காகாது; உனக்கிஷ்டமான இடத்தில் படுத்துத் தூங்கு; நானுந் தூங்குகிறேன்," என்றான்.

இவ்வார்த்தை சொன்னதும் ஞானம்பாள் பொட்டென்று கட்டிலைவிட்டுக் கீழேயிறங்கிச் சற்றுயோசித்துத் தன் இடுப்பிலிருந்து, காகிதப்பைக் குள்ளிட்டு முத்திரையிடப்பட்ட ஒரு கடிதத்தை யெடுத்து, முகத்தைப் பின்புறமாகத் திருப்பிக்கொண்டு, தன் கணவனிடம் நீட்டினாள். பாலசுந்தரம், அவள் அதற்குள் தன்னுடைய மனவிருப்பத்தை யெழுதி யிருப்பாள்; அதைத் தெரிந்துகொண்டு அவளைத் திருப்தி செய்விக்கலாமென்று கருதி மனச்சந்தோஷத்தோடு, அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டு, விளக்கின் கிட்டப்போய் பிரித்துப் படித்துப் பார்த்தான். அதில் கீழ்வருகிறபடி யெழுதி யிருந்தது.

ம-ா-ா-ஸ்ரீ பாலசுந்தரம் அவர்களுக்கு,

என்னுடைய தோழிமார்களும், மற்றவர்களும் பி. எ. பி. எல். பட்டம் பெற்று டிப்டி கலெக்டர் ஜட்ஜு உத்தியோகஞ்செய்யுங் கனவான்களை மணந்து களிப்புற்றிருக்கிறார்கள். நீரோ குடியானவனைப்போலப் பயிர்வேலை பார்த்து வருகிறதும், மெட்ரிகுலேஷன் பரீட்சையில் கூடத் தவறிப்போனதும், மறுபடி படியாம லிருப்பதும் எனக்கு மிகக் குறைவாக இருக்கிறது. ஆகையால் நீர் பி. எ. பாஸ் பண்ணுகிறவரையில் உம்மிடத்தில் பேசக்கூட எனக்குப் பிரியமில்லை, பி. எ பாஸ் பண்ணினால் தான் உம்மோடு பேசுவேன். அதுவரைக்கும் நீர் என்னை அழைக்கவும், என்னைத் தொடவுங்கூடாது. அதற்கு இஷ்டமில்லாவிட்டால் இதையே இராஜீநாமாவாக ஒப்புக்கொண்டு நம்முடைய தாம்பத்யத்தை விலக்கிவிடும்; இதற்குமேல் வேறு வார்த்தை பேசவேண்டும்.

இப்படிக்கு,

1882ஞ ஜூன்மீ 12உ ஞானம்பாள்.

இதைப் படித்துப் பார்த்ததும் பாலசுந்தரம் மனது இடியோசை கேட்ட சர்ப்பம்போல் மயங்கியது. திப்பிரமை கொண்டு நின்றான். ஒன்றுந் தோன்றவில்லை. அரைமணி

நேரம் ஆகாசத்தைப் பார்த்த வண்ணமா யிருந்தான். பின்பு மனத்தெளிவடைந்து சற்று யோசித்துக்கொண்டு ஞானம்பாளைப் பார்த்து, "நீ சொல்வது சரிதான். நான் பி. ஏ. பாஸ் பண்ணினால் அல்லாமல் என்னோடுகூடி வாழ விரும்பமாட்டாய். எனக்கிருக்கும் வேலைத்தொந்தரவோ படிக்கமுடியாது. இதற்கென்ன செய்கிறது? சொல்," என்றான். "முடியா விட்டால் நம்முடைய விவாகத்தை ரத்துசெய்து கொள்ளு கிறது தான் சரியானவேலை; அதைத்தவிர வேறொன்றுஞ் செய்யத்தக்கதில்லை," என்றாள். "அப்படியானால் உன்னைக் கேட்டுச் சில சங்கதிகள் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகையால் நாற்காலியில் உட்காரு," என்றான். அப்படியே உட்கார்ந்துகொண்டாள். பின்வருமாறு சம்பாஷணை நிகழ்ந்தது.

பாலசுந்தரம்:—இங்கிலீஷ் படியாததனால் என்னகுறைவு எனக்குத் தெரியவில்லை.

ஞானம்பாள்:—இங்கிலீஷில் பூரண விற்பத்தி யில்லாதவர்களுக்கு நாகரீகந் தெரியாது. நாகரீக மறியாதவரோடு கூடிவாழ்தல் குறைவல்லவா?

பாலசுந்தரம்:—ஆனால் நம்முடைய தேசத்துப் பிரபுக்களும் பண்டிதர்களும் நாகரீக மறியாதவர்க ளென்று நினைக்கிறாய்?

ஞானம்பாள்:—ஆம்! ஆக்ஷேபனையில்லாமல்; அப்படித் தான் நினைக்கிறேன்.

பாலசுந்தரம்:—மாரிஸ் என்னும் ஐரோப்பியர் எழுதி யிருக்கிற இந்துதேச சரித்திரத்தை நீ வாசித்திருக்கிறாயா?

ஞானம்பாள்:—ஆம், முற்றும் படித்திருக்கிறேன்.

பாலசுந்தரம்:—அதிலே இதர தேசத்தார்கள் நாகரீக மின்னதென்று கண்டு அறியாததற்கு முன்னேயே இந்துக்

கள் நாகரீகத்திற் சீர்பெற்றிருந்தார்களென்று எழுதியிருக்கிறது உன் ஞாபகத்துக்கு வரவில்லையா ?

ஞானம்பாள்:—எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால் இந்துக்கள் தங்களுடைய நாகரீகத்தை விருத்திசெய்யாமல் விட்டுவிட்டார்களென்று அவரே யெழுதியிருக்கிறார். தவிர, அந்த நாகரிகம் பழையநாகரிகம். அது பல விஷயத்தில் கண்மூடித்தனமாயிருக்கும். அந்தப் பழைய நாகரிகத்தையே இந்தியப் புலவர்களும், பிரபுக்களும் கையாண்டுவருகிறார்கள். அது பயன்படாது.

பாலசுந்தரம்:—நாகரீகத்தில் பழையது என்றும், புதியதென்றும் இரண்டு வகை யுண்டானால் அவ்விரண்டுக்கும் என்ன பேதம்? எனக்குத் தெரியவில்லை. அதை விளக்கிச் சொல்லு; நான் தெரிந்துகொள்ளுகிறேன்.

ஞானம்பாள்:—இது தெரியாதா? எல்லா விஷயத்திற்குந் தெய்வந்தெய்வம் என்றும், விதி விதியென்றும் சொல்லிக்கொண்டிருப்பதும், புருஷர்கள் பெண்களைத் தங்களுக்கடிமையாக்கிக்கொண்டு தம்மிஷ்டப்படி நடத்திக் கஷ்டப்படுத்துவதும், அவர்களைச் சுதந்தர ஹீனர்களாக்கித் தமக்கே சர்வ சுதந்தரங்களையும் உரிமையாகக் கொண்டிருப்பதும் பழையகாலத்துக் கண்கெட்ட நாகரீகமாம். முயற்சியால் ஆகாதென்றுமில்லையென்று தெரிந்துகொள்வதும், அந்தமுயற்சி தவறினால் அதற்குக் காரணமுண்டென்று கொண்டு, அந்தக் காரணத்தை யறிந்து யிடையூறானவற்றை விலக்கி, வேறு தகுந்த முயற்சிகளைச் செய்து காரிய சித்தி பெறுவதும், தம்மைப்போலவே பெண்களுக்குமென்று கருதி அவர்களுக்குச் சுதந்தரங் கொடுத்துத் தமக்கு ஒப்பாக நடத்துவதும் புதிய நாகரீகமாம்.

பாலசுந்தரம்:—சந்தோஷம்; பழைய நாகரீக மின்ன தென்றுதெரிந்துகொண்டேன். புதிய நாகரீகந்தான் இன்ன தென்று நன்ருய்விளங்கவில்லை. தங்களைப்போலப் பெண்களும் என்று கருதுவதும், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சுதந்தரமின்னதென்றுந் தெரியவில்லை. அவற்றை விளங்கச் சொல்லு. தெரிந்துகொண்டு யுக்தம்போல நடந்துகொள்ளு கிறேன்.

ஞானம்பாள்:—இதுதான் சுதேசப் படிப்பின் பயன். இங்கிலீஷ் பாஷையைப் பூரணமாய்க் கற்றுத் தெரிந்திருந் தால், இந்தக் கேள்விகளுக்கு இடமிராது. சுகதுக்கங்களெல் லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமந்தானே! ஆகார நித்திரைகளும் சமந்தானே! ஜீவ சரீர ஆத்மாக்களும் ஒரே விதமா யிருக்கப் பெண்களைத் தாழ்மையாகவும் புருஷர்களை உயர்ந்தவர்களாகவும் நினைப்பது தவறுதானே! மனைவி மரித் தால் புருஷன் மறுவிவாகம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந் திருக்கிருனே! அதுபோலப் பெண்களும் புருஷன் இறந்தால் ஏன் மறுமணம் புரிந்துகொள்ளக்கூடாது? வெயில் முதலிய வற்ருல் வருந்திய ஆடவன் காலை மாலைகளில் உலாவித்திரி கிருனே, அதுபோலப் பெண்களும் ஏன் செய்யக்கூடாது? ஐரோப்பியர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு அயற்புருஷரோடு கலந்து பேசவும், ஷேக்ஹாண்ட் கொடுக்கவும், அவர்களோடு வண்டிகளேறி யுலாவப்போகவும், தங்களிஷ்டப்படி தோழர் தோழிகள் வீடுகளுக்குப்போய் சந்தோஷித்துப் பேசிவரவும் இடங்கொடுத்திருப்பதுபோல் நமது பெண்களுக்குக் கொடா தது ஏன்? இன்னும் பல வுண்டு. அவைகளைச் சொல்லக்கூட மனம் வரவில்லை.

பாலசுந்தரம்:—மிக்கச் சந்தோஷம்; இதுதானு சுதந்தர மென்பது? இது எனக்கு இதுவரைக்குந் தெரியாது; நீயும்

லண்டன், பாரிஸ் முதலிய பட்டணங்களில் பிறந்திருந்தால் இந்த சுதந்தரங்களெல்லா முனக்குக் கஷ்டப்படாமல் சுலபமாகவே கிடைத்திருக்கும். அதற்காக நானும் மெத்தவும் வருந்துகிறேன். இந்துதேசத்தில் அதிலும் பிராமண ஜாதியிலும் நீ ஜனித்தது மஹாபாவந்தான். நீ உன் மனப்படி ஐரோப்பா கண்டத்தில் பிறவாமல், இந்தியாவில் பிறந்தது என்ன காரணமோ தெரியவில்லை. தெரிந்திருந்தால் ஐரோப்பாவிலேயே பிறந்திருப்பாய் சற்றுத் தப்பிப்போயிற்று. அதனாலேதான் இப்பொழுது ஐரோப்பிய ஸ்திரீயாக முயலுகிறாய். ஆய்விட்டாய்; அதிருக்கட்டும். இந்த நாகரீகமெல்லாம் என்னத்திற்காகவோ தெரியவில்லை. அதை மாத்திரம் கொஞ்சம் விளக்கிச் சொல்லு.

ஞானம்பாள்.—இந்திய சாஸ்திரங்கள் கற்றவர்களுக்குப் பரிகாசம் பண்ணிச் சிரிக்கத்தான் தெரியும். நியாயமின்னது, அநியாயம் இன்னதென்று தெரியாது. கிடக்கட்டும்; கேட்டதைச் சொல்லுகிறேன்; நாகரிகமெல்லாம் சுகமாய் ஜீவகாலத்தைக் கழிக்கத்தான். கஷ்ட ஜீவனம் மிருகத்தன்மையோடு ஒப்பாகும். மாடுகளும் குதிரைகளும் எஜமான் போடுகிற புல் முதலியவற்றைத் தின்றுவிட்டு அடியும் உதையும் பட்டுக்கொண்டு வண்டிகளையும் கலப்பைகளையும் இழுப்பதுபோலத்தானே இந்து ஸ்திரீகளுமிருக்கிறார்கள். ஆதலால் புதிய நாகரிகம் வந்து புகுந்தால் தான் இந்துப் பெண்களுக்குச் சுகம். அதற்கு இங்கிலீஷ் படித்துத் தேறின புருஷர்களைத் தான் அடையவேண்டும்.

பாலசுந்தரம்.—இவ்வளவுதானா! இந்தச் சுதந்தரங்களெல்லாம் உனக்குக் கிடையாது. மிகவும் அரிதுதான். நீ ஐரோப்பியனையாவது ஒரு பரங்கிக்காரனையாவது தேடி விவாகஞ்செய்துகொண்டிருக்கலாம். அது தவறிப்போயிற்று.

இப்பொழுதுதானென்ன முழுகிப்போயிற்று. நான் உன் இராஜீநாமாவை மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டேன். இனி நீ யாராவதொரு பரங்கியைத் தேடி விவாகம் புரிந்து சுகமாக வாழ வகைதேடு. இனி உனக்கும் எனக்கும் உள்ள விவாக சம்பந்தம் உன் இராஜீநாமாவால் நீங்கிப்போயிற்று. உன் னிஷ்டம்போல் நடக்கலாம்.

ஞானம்பாள்:—வேறு கல்யாணமுஞ் செய்துகொண்டு கஷ்டப்படவும் வேண்டுமா? கன்னிகையாகவே யிருந்துவிட்டால் என்ன குறை?

பாலசுந்தரம்:—மிக்கச் சந்தோஷம், ஞானம்பாள்! கடைசியாக ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். இவையெல்லாம் நீ உன் புத்தியாலே பேசினதல்ல. யாரோ பகைவர்கள் உன் புத்தியைக் கெடுத்துவிட்டதாகவே தோன்றுகிறது. நீ சிறு பெண்ணானதால் வம்பு பேசுவோரது வார்த்தையை கேட்டுக் கெட்டுப்போகாதே. உனக்கு ஆண்டவன் கொடுத்திருக்கிற செல்வமோ அளவிட முடியாது. உனது வருகைக்காக அநேக வேலைக்காரர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பால் கொடுக்கும் எருமைகளும் பல; விதவிதமான ஆடையாபரணங்கள் அளவிடப்படாதன; உனக்கு என்னைத் தவிர மேலதிகாரிகள் ஒருவருமில்லை. என் வீட்டுக்கு நீயே சர்வாதிகாரியா யிருக்கிறாய். நீ யெவ்விதமான செலவு செய்தபோதிலும் உன்னை ஏனென்று கேட்பாரில்லை. நீ அனுபவிக்க இருக்கிற சுகபோகங்கள் ஒருவருக்கு மிரா. ஜட்ஜ் டிப்டிகலக்டர்களின் மனைவிகளாயிருக்கிற உன் தோழி முதலானவர்களுக்கு இந்தச் சுகமும் சுவாதந்திரியமும் கிடைக்கமாட்டா. அவர்கள் உன் சுக போகங்களைக் கண்டால் அவர்கள் உன்மேல் பொறாமைகொள்ளாமற் போகார்கள். பல படியாகப் பேசுவதில் பயனென்ன? உன்னுடைய

வாழ்வை இந்திரபோகமென்றே கூறவேண்டும். நான் உண்மையாக உன்மேற் கரைகடந்த பிரியம் வைத்திருப்பதால் உனக்கு இதமான உபதேசத்தைச் செய்கிறேன். என் பெருமையை உன்னிடம் பேசிக்கொள்ள வரவில்லை. உத்தியோக முதலியன நிலையற்ற வாழ்வு. உன் வாழ்வோ ஒருபோதும் அழியாத பெரு வாழ்வு. இப்பொழுது நீ சிறு பெண்ணாயிருப்பதால் ஒன்றுந் தெரியாமல் விரோதிகள் பேச்சில் நம்பிக்கைவைத்துக் கெட்டுப்போகிறாய். அவர்கள் உபதேசம் உனக்குத் தலைமண்டைகொண்டிருக்கிறது. அவர்கள் வார்த்தை இனிப்பாய்க் கரும்புபோ லிருந்தாலும், பிற்காலத்தில் உயிரை அபகரிக்கும் கொடிய விஷமாக விருக்கும். அப்பொழுது நீ படுகிற வருத்த மொருவராலுஞ் சொல்ல முடியாது. நீ அறியாத்தனத்தால் எழுதிக்கொடுத்த இராஜீநாமாவை உன் கையாலேயே கிழித்தெறி. நீ புத்தியில்லாமல் செய்த காரியத்தைக்குறித்து நான் வருத்தப்படவில்லை. உன் மனம் என்னை வெறுத்தொதுக்கும்படி கடினப்பட்டிருப்பது போல என்மன மாகவில்லை. உன்னைப் பார்த்தவுடன் என் மனம் இளகுகிறது. இரக்கம் உண்டாகிறது. உன்னை நான் என் உயிர்போலவே நேசிக்கிறபடியால் உன்னுடைய சுகத்தையே கருதிச் சொல்லுகிறேன். நீ என்னை வெறுத்தது போல, நானும் உன்னை வெறுத்து ஒதுக்கிவிட்டு உடனே வேறு விவாகம் செய்துகொள்ளக்கூடும்; அப்படிச் செய்துவிட்டால் உன்கதி நிர்க்கதியாய்ப் போகும். எனக்கு யாதொரு குறைவும் நேரிடாது. உன் மாதாபிதாக்கள் என்னிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். நானும் அப்படியே அவர்களைக் கனம்பண்ணி வருகிறேன். நான் உன்னை அலட்சியம் பண்ணி ஒதுக்கிவிட்டால் அவர்களுக்கு வருத்தம் உண்டாகுமென்று என் மனந் தயங்குகிறது. ஆதலால் தான் உனக்கு

இவ்வளவு தூரம் சொன்னேன். இப்பொழுதென்ன சொல்கிறாய்?

ஞானம்பாள்.—நான் சொல்லுகிறதென்ன? எல்லாம் முன்னேயே சொல்லிவிட்டேன். இனி ஒன்றுஞ் சொல்வதற்கில்லை, என்னைச் சும்மா அலட்டவேண்டாம்.

பாலசுந்தரம்.—சரிதான்! நான் உன் மனம்போலவே நமது விவாகத்தை ரத்துசெய்துவிட்டு ஊருக்குப் போய்விடுகிறேன். உன் உறவைப்பற்றித் தானே யிவ்விடம் வரவேண்டும். அது இல்லாதபோது நான் இங்கே வரமாட்டேன். நீ தான் என் வீட்டுக்கு வரமாட்டாய். அப்பொழுது மாதா பிதாக்கள் என்ன காரணமென்று கேட்டால் அவர்களுக்கு என்ன சொல்லுகிறதோ தெரியவில்லை. அவர்களுக்கு என்ன காரணம் சொல்வதாக நினைத்திருக்கிறாய்? அதையாவது எனக்குச் சொன்னால் நானும் அப்படியே சொல்லி உன்னைத் தப்பித்துவிடுகிறேன். நீ இதுவரைக்கும் சொன்னவைகளும் இராஜிநாமாவில் குறித்திருக்கிறதுமான காரணங்களையுங் கேட்பவர்கள் சிரிப்பார்கள். உன்னைப் பைத்தியக்காரியென்று ஏளனம் பண்ணுவார்கள். ஆகையால் அப்படிக்கெல்லாம் சம்பவிக்க இடம்வையாமல் ஒரு தகுந்த காரணம் சொல்லு.

ஞானம்பாள்.—இதைக்கேட்டு ஒன்றுஞ்சொல்லத் தெரியாமல் சற்றுநேரம் மதிமயங்கினாள். மாதா பிதாக்களுக்கு அஞ்சினாள். யாதொன்றுந் தோன்றவில்லை. தலைகுனிந்து சும்மா நின்றுகொண் டிருந்தாள். பிறகு தன் கணவனைப் பார்த்து, "அவர்கள் கேள்விக்குப் பதிலொன்றுஞ் சொல்லாமல் சும்மா இருந்துவிடுகிறேன்; அவர்களென்னைக் கோபித்துக்கொண்டாலும் மௌனமாயிருந்துவிட்டால் என்ன செய்வார்கள். இதுதான் செய்யும் யுக்தி," என்றாள்.

பாலசுந்தரம்.—ஆனால் என்பேச்சைக் கேள். அது சரியா யிருந்தால் அப்படிச் செய். இந்த க்ஷணத்தோடு நமது விவா கம் ரத்தாய்விட்டபடியால் உனக்குமெனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நீ எனக்கு மனைவியல்ல; நானுனக்குக் கணவனல்ல. இனி நான் இங்கே யிருக்க முடியாது. ஆனா லும் கொஞ்ச நாள் நமது இரகசியத்தை வெளிவிடாமல் மறைத்து வைத்துக்கொள்வோம். எப்பொழுதும்போலவே நடந்துவருவோம். இன்றைக்கும் நாளைக்குமிங்கே யிருந்து விட்டு, நாளனன்றைக்கு நான் ஊர்போய்ச் சேருகிறேன். இரண்டு மூன்று மாதங்களுக்கொருதடவை யிங்கே வந்து போகிறேன். அப்படிச்செய்தால் இந்த இரகசியம் வெளிப் படாது. அதற்குள்ளாகத் தகுந்த காரணமொன்று யோசி த்துத் தெரிந்து சொல்; இல்லாவிட்டால் நானிங்கே வரா மலும் உன்னை அங்கே அழைத்துக்கொள்ளாமலும் இருந்து விட்டால் குற்றம் என் மேல்தானே சுமந்துபோம். அப் பொழுது ஒருவரும் உன்னைக் குற்றஞ் சொல்லமாட்டார்கள். நானும் இரண்டொரு வருஷம் விவாகஞ்செய்யாமலிருந்து பின் விவாகஞ் செய்துகொண்டு அங்கேயே யிருந்து விடு கிறேன். நீயும் இங்கேயே சுகமாக உன்னிஷ்டம்போல இருக்கலாம். இதுதான் தகுந்த யுக்தியாகத் தோன்றுகிறது எனக்கு. உன் கருத்து என்ன," வென்று கேட்டான். இது சமயோசிதமான யுக்தியென்று தோன்றினபடியால் ஞானம்பாள் மனதுக்குட் சந்தோஷித்து அப்படியே செய் கிறதென்று ஒத்துக்கொண்டாள். இப்பொழுது மணி நாலான படியால் ஞானம்பாள் பள்ளியறையைவிட்டு வெளியேபோய்த் தன் தாயார் பக்கத்தில் படுத்துக்கொண்டாள். பாலசுந்தரமும் வெளியே போய்த் திண்ணையின்மே லுட்கார்ந்துகொண்டு பல பல யோசனைசெய்தான். அவளையெவ்வாறு திருத்துவ

தென்று மயங்கினன். இதை மாமனரிடம் தெரிவிக்கலாமென்று சிந்தித்தான். அதுவும் தனக்குப் பெரிய அவமானமாதலால் வெளியிடாமலிருப்பதே தகுதியென்று கருதினன். தன் வேலைக்காரனுகிய சுந்தரத்துக்குக்கூடச் சொல்லாமலொளிக்க வேண்டுமென்று நினைத்தான். இது கிறிஸ்துவப் பாடசாலைக்குப் பெண்களைப் படிக்க அனுப்புவதாலுண்டான தீமையென்று எண்ணினன். இப்பொழுது ஞானம்பாள் பதின்மூன்று வயதான இளம்பெண்ணு யிருக்கிறபடியால் புத்தியில்லாமற் செய்துவிட்டாள். இன்னு மிரண்டொரு வருஷங்கள் சென்று பெரியவளானல் அப்பொழுது புத்தி வரும். அந்தக் காலத்தில் தான் செய்தது தப்பிதமென்று கண்டு மனம்வருந்துவாள். இந்தக் கர்வமும் அகங்காரமும் அடங்கிப் பணிந்து நடப்பாள். இப்பொழுது நாமும் முறைத்துக்கொண்டால் நம்மைத்தான் மதிகெட்டவன் என்று எல்லோரும் சொல்வார்கள். மாமியார் மாமனருக்குத் தெரிய வந்தால், அவர்களும் நம்மேல் குற்றஞ் சொல்லி வருந்துவார்கள். அவர்களோ நம்மை மிகப்பெருமையாக மதித்து நேசிக்கிருர்கள். அப்படியே யவர்களை மதிக்கிறோம். ஆகையால் இந்த இரகசியத்தை வெளிவிடாமல் மறைத்துவைப்போம். கொஞ்ச நாள் பொறுத்திருந்து யோசித்துச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்வோ மென்று தீர்மானித்துக் கொண்டு, தன் வருத்தத்தைப் பிறர் அறியாதபடி மனதிலேயே அடக்கிவைத்துக்கொண் டிருந்தான். முன்போலவே எல்லோரோடுங் கலந்து பேசிக்கொண்டிருந்தான். இரண்டாம் நாளிரவில் பள்ளியறை சேர்ந்ததும் ஞானம்பாளைப் பார்த்து, "நீயோ என்னை வெறுத்துவிட்டாய். என்மனமோ உன்னை வெறுக்கமுடியாமல் தவிக்கின்றது. உன் படமொன்று எனக்குக்கொடுத்தால் அதைப் பார்த்துச் சற்று

மனங்களித்திருப்பேன்,'' என்றான். ஞானம்பாள் தன் போட்டோவில் ஒன்று கொடுத்தாள். நீ என்பேரில் நேசமா யிருப்பா யென்றும், நாளையதினம் ஊருக்குப் போகும்போது உன்னையும் உன் மாதா பிதாக்களையும் கூட அழைத்துப் போகலா மென்றும் அப்பொழுது உன் பிதா ரயில்சார்ஜ் கொடுப்பா ரென்றுங் கருதியிருந்தேன். இந்தக் கல்யாணத் தில் மிகச் செலவாய்விட்டதனால் கையிலிருந்த பணமும் செலவழிந்து போயிற்று. ஊரிலிருந்து பணம் அழைப்பித் துக்கொண்டு பின் போகலா மென்றால் பணம்வர நாலைந்து தினம் செல்லும்; அது வரைக்கும் இங்கேயிருக்க எனக்குத் துக்கம் மேலிடுகின்றது; அதனால் நமது இரகசியம் வெளிப் பட்டுப் போகுமோவென்று பயப்படுகிறேன். ஆகையால் நாளைக்கே ஊருக்குப்போகவேண்டும். உன் பிதாவைக் கேட்க வெட்கமாயிருக்கிறது. ரயில் சார்ஜுக்குப் பணம் கொடுப் பாயோ?'' என்று கேட்டான். "அதற்கென்ன என்னிடம் முந்நூறுரூபாய் இருக்கின்றன. விடிந்ததும் நூறுரூபாய் கொடுக்கிறேன்,'' என்றாள். ஞானம்பாள் நம்மிடத்தில் வெறுப்போடு சிறிது பட்சமும் வைத்திருக்கிறாள். ஆகையால் இவள் மனம் சீர்திருந்துமென்று கருதிக் கொஞ்சம் சந்தோ ஷத்தோடு படுத்து நித்திரை போய்விட்டான். ஞானம் பாளுக்கோ நித்திரையில்லை. மனதிலே பல பல யோசனை கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளைத்தன. தன் நாயகனுடைய வார்த்தைகளெல்லாம் மனதுக்குப் புலப்பட்டன. வெகுநேரந் தூங்காமல் புரண்டுகொண்டே யிருந்தாள். தனிமையாகப் படுத்து அறியாதவளாதலால் கொஞ்சம் பயமடைந்தாள். யாது செய்வது. இப்படியிருக்கையில் பாலசுந்தரம் விழித் துக்கொண்டு, அவள் படும் அவஸ்தையைக் கவனித்து வருத் தப்பட்டான். மணி நாலானபோது "ஞானம்பா!'' என்று

கூப்பிட்டான். அவள் திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள். "மணி நாலாய்விட்டபடியால் நீ எழுந்திருந்து உள்ளே போய்ப் படுத்துக்கொள்; இங்கே யிருந்து ஏன் கஷ்டப்படுகிறுய்," என்றுன். அவள் அப்படியே எழுந்துபோகத் தொடங்குகையில், அவளைக் கூப்பிட்டு, "நானின்று மத்தியானம் ரயிலில் புறப்படவேண்டுமே; உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்றுன். அவள். "ஆமாம் இருக்கிறது! பணம் கொண்டு வந்து தருகிறேன்," என்றுள். "சரி! ஆனல் இன்னமொரு வேண்டுகோள; அதையும் நிறைவேற்றவேண்டுகிறேன். அதென்னவென்றுல், நான் இனி உன்னைக் காணவும், உன்னேடு பேசவு முடியாதாகையாலும், இதுவே நம்முடைய கடைசி சம்பாஷணையானதினுலும் எனக்கொரு பார்ட்டிங் கிஸ் கொடு," என்று கேட்டான். அவள் அதற்குச் சம்மதித்து அவன் கிட்ட வந்தாள். அவன் அவளைத் தன் மடியிலிருத்திக்கொண்டு முத்தமிட்டுக்கொண்டு, "ஞானம்பா! புத்திசாலித்தனமாய் நடந்துகொள்," என்று சொல்லி அனுப்பிவிட்டான். அவளும் போய் விட்டாள். விடிந்தவுடன் ஞானம்பாள் தன் வாக்குத் தவருமல் ரூபாய் நூறு நோட்டாகக்கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்டு, மத்தியான போஜனமானபின் மாமனுர் மாமியாரிடம் உத்தரவுபெற்றுக் கொண்டு, பாலசுந்தரம் ஊர்போய்ச் சேர்ந்தான்.

இதைப்படிக்கிற ஆடவரும் மகளிருமாகிய நமது சகோதர சகோதரிகள் இப்படி நடந்திருக்குமா! இராது; இது வீண் கட்டுக்கதையென்று எண்ணுவார்களே யொழிய வாஸ்தவமென்று நினைக்கவேமாட்டார்கள். அன்பர்களே! அப்படி நினைக்கவேண்டாம். இது நிசமாகவே நடந்தது. அந்தத் தம்பதிகள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறுர்கள். அவர்களுடைய பேர் ஊர் மாறியிருக்கிறதேயன்றிக் கதை

முழுமையும் நிஜமேயாம். மேலே சொல்லப்போகிற விஷயங்களிற் சில கதைக்கினிப்பாகவிருக்கும் பொருட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவப் பாடசாலைக்கு நமது குழந்தைகளைப் படிக்க அனுப்புகிறதாலும் பைபில் ஊமன் என்று பேரை வைத்துக்கொண்டு வீடுவீடாய்ப் படிப்புச் சொல்லித் தருவதாகப் பொய்பேசி, சிறுபெண்களின் மனதைக் கெடுத்துக்கொண்டு திரிகிற கிறிஸ்துவஸ்திரீகளை வீட்டுக்குவரும்படி இடங்கொடுப்பதாலும் உண்டாகுந் தீமைகளும் இப்படிப்பட்டனவென்று நம்மவர் தெரிந்துகொள்ளும் பொருட்டாக இந்தக்கதையை யெழுதத் துணிந்தேன். ஆதலால் நானிதுவரைக்கு மெழுதிக்கொண்டு வந்ததில் எள்ளளவு கூடப் பிசகில்லையென்று நிச்சயமாய் நினையுங்கள்.

இனி மேலே சொல்வோம்; இந்தச் சோபனக் கல்யாணமான இரண்டொரு நாட்களுக்குப்பின் உபாத்திச்சி ஞானம்பாள் வீட்டுக்குவந்து அவளைக்கண்டு க்ஷேமம் விசாரித்தாள். ஞானம்பாள் நடந்த விஷயங்களை யெல்லாம் ஒளியாமற் சொல்லித் தான் இராஜீநாமா கொடுத்ததனால் தன்னாயகன் வெட்கமடைந்து ஊருக்குப் போய்விட்டானென்றும், இனி அவனுக்குந் தனக்கும் சம்பந்தம் அற்றுப்போய்விட்டதென்றும், தன் கணவன் சொல்லிய வசனங்களையுந் தெரிவித்தாள். அதுகேட்ட வாத்திச்சி மனதில் அடங்கா மகிழ்ச்சிகொண்டு, ஞானம்பாளைப் பார்த்து, "நாளையதினம் நான் உனக்கு ஒரு பைபில் புஸ்தகந் தருகிறேன். அது சத்தியவேதம். ஆதலால் அதைப்படித்து ஞாபகத்தில்வை! சந்தேகம் வந்த இடத்தில் என்னைக்கேள்; தகுந்த உத்தரவு கொடுத்து உன் சந்தேகங்களை நிவர்த்திசெய்கிறேன். உன் ஆத்துமா இரட்சிக்கப்படுவதாக! இயேசுநாதரும் பரிசுத்த ஆவியும் உன்னோடிருப்பதாக" என்று ஆசிர்வதித்தாள். அதே பிரகாரம் மறுநாள்

தங்ககிலுட்டுப் போட்ட ஒரு பைபிலைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதிலே அஞ்ஞானிகள் படிக்கவேண்டிய முக்கியமான பாகங்களிவை யென்று குறிப்பிட்டுக் காட்டினள். காலைமாலை மத்தியான காலங்களில் கடவுளைத் தியானிப்பதற்காக ஒரு ஜபபுஸ்தகமும் கிறிஸ்துவ மதக் கொள்கைகளை யெளிதாகத் தெரிந்து கொள்வதற்காக வேதபரிமளம் என்ற ஒரு புஸ்தகமும் கொடுத்தாள். இவற்றை யெல்லாம் ஞானம்பாள் மிகச் சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டாள். பால் மரியம்மாள் என்பவள் திருநெல்வேலி ஜில்லாவில் ஈனஜாதியிற் பிறந்தவள்; கிறிஸ்துவர் உபதேசத்தினல் புத்திகெட்டு அம்மதப்பிரவேசமானவள். பெண்களின் புத்தியை மயக்குவதில் சாமர்த்திய முடையவள்! இதை யறிந்த பாதிரிமார் இவளுக்குப் பைபில் ஊமன் வேலை கொடுத்து ஊரூராய் அனுப்புவது வழக்கம். பகற்காலத்திற் பாதிரிகளால் நியமிக்கப்பட்ட பிரைமெரி ஸ்கூல்களில் பெண்களுக்குப் பாடஞ்சொல்வதும், காலைமாலைகளில் பல வீடுகளுக்குஞ் சென்று, வெளியில் வராமலிருக்கும் இந்துப்பெண்களுக்குப் பாடஞ்சொல்லுலுகிறேனென்று பேர்வைத்துக் கொண்டு அறியாத பெண்களை மயக்கிக் கிறிஸ்துவக் கொள்கைகளைக் கைப்பற்றிக் கொள்ளச் செய்கிறதும், அவ்வூர்களில் தன் பண்டவாளம் வெளிப்பட்டால் அதை விட்டு வேறூருக்குப் போகிறதுமாகக் காலங்கழித்து வருவாள். இவளால் கலகம் விளைவிக்கப்பட்ட குடும்பங்கள் பல; உத்தியோகஞ்செய்துகொண்டு குடும்ப காரியங்களைக் கவனியாமலிருக்கிற சிலரே இவளைச் சிறிது மதித்து வீடுகளுக்கு வரவழைத்து வந்தார்கள். சாதாரண குடும்பத்தாரெல்லாரும் அவளை அருவருத்து ஒதுக்குவார்கள். யாரோடும் மானவெட்கமின்றிப் பேசுவாள். பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும்

குணங்களுக்கும் அவளுக்கும் வெகுதூரம். இப்படிப்பட்டவருடைய உபதேசமேறினால் ஒன்றுமறியாத பெண்களின் சித்தம் என்னவாகு மென்பதை யாவரும் யோசிக்கத்தக்கது. தவிரக் கிறிஸ்துவப்பாடசாலைகளில் கிறிஸ்துவ மதக்கொள்கையை உபதேசிக்கிறதுபோல அவ்வளவு சிரத்தையாக மற்றப் பாடங்களைப் போதிக்கமாட்டார்கள். பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பாட்டுகளெல்லாம் கிறிஸ்துவமதப்பாட்டுகளே. கதைகளெல்லாம் வேதபாடசரித்திரங்களே. நம்தேசத்தாரோ பெண்களையும் பிள்ளைகளையும் மூன்றாம் வயதுநிறைந்து நாலாம் வயது தொடங்குமுன் பாடசாலைக் கனுப்பிவிடுகிறார்கள். மழலைச்சொல்மாறாத சிசுவாயிருக்குங் காலந்தொடங்கிக் கிறிஸ்துவமதக் கொள்கைகளும், சரித்திரமும் மனதில் பதிந்துவிடுகிறது. இளம்வயதி லொன்று மனதிற் பட்டால் அது மாறுவதரிது; இதை யோசித்துப் பாராமல் நம்மவர் தமது சிசுக்களைக் கிறிஸ்துவரால் நியமிக்கப்பட்ட பாடசாலைக் கனுப்பிக் கெடுத்துவிடுகிறார்கள். அதனால் விளையுந் தீய பயனை அனுபவிக்க நேர்ந்தபோது வருந்தி வாடுகிறார்கள். எக்காலத்தில் இந்தத் துர் எண்ணம் நம்மவரை விட்டொழியுமோ தெரியவில்லை. இது நிற்க,

ஞானம்பாள் பைபில் முதலிய புஸ்தகங்களை வைத்துக் கொண்டிருப்பதை அவளுடைய தகப்பனார் ஒரு நாள் பார்க்கும்படி நேரிட்டது. அவர் சிறந்த சிவபக்தி யுடையவராதலால் அந்தப் புஸ்தகங்களைக் கண்டு அருவருத்துத் தமது அருமைத் திருமகளைச் சமீபத்தில் அழைத்து, "அம்மணீ! உனக்கு இந்தப் புஸ்தகங்கள் எப்படிக் கிடைத்தன? நான் வாங்கித் தரவில்லையே!" என்று கேட்டார். அவள் உபாத்திச்சி பால்மரியம்மாள் கொடுத்தாளென்று கூறினவுடன் அவர் மனந் திடுக்கிட்டது; இவர் வக்கீலாயிருக்கிறபடியால்

பைபில் ஓமன் ஸ்திரீகளால் மதிகெட்டுப்போன பெண்களின் கேஸ் பல பார்த்திருக்கிறுர். தன் மகளை நோக்கி, "அம்மா! நீ லோயர் செகண்டரி பரீக்ஷை பாஸ்பண்ணி ஆய்விட்டதே. அதற்கு மேலான படிப்புச் சொல்லிக்கொடுக்கும் சக்தி உன் உபாத்திச்சிக்கு இல்லை. உனக்கு இங்கிலீஷ் படிப்பும் போதும். இனிமேல் நமது மதசாஸ்திரங்களைப் படித்து நல்வழிப்படவேண்டும். ஆதலால் உன் உபாத்திச்சிக்கு நாளையதினம் வெகுமதி கொடுத்து அனுப்பிவிடவேண்டும். பாரதம், இராமயணம், ஸ்காந்தம், பாகவதம் முதலிய புஸ்தகங்கள் வாங்கி வைத்திருக்கிறேன். அதோ பீரோவில் இருக்கின்றன. அவைகள் வசனரூபங்களாக இருக்கிறபடியால் நீயே படித்துத் தெரிந்துகொள்ளலாம். தெரியாதவைகளை யென்னிடத்தும் உன் தாயாரிடத்துங் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்; அந்தப் புஸ்தகங்களைப் படித்தவுடனே அவைகளைச் செய்யுளில் படிக்கவேண்டும். ஆதலால் இந்த வேத புஸ்தகங்கள் இப்பொழுது வேண்டாம். நமது மத விஷயங்களிற் சிறிது தெரிந்துகொண்டபின்பு இவைகளைப் படித்தால் நன்றாயும், சுலபமாயும் விளங்கும். ஆதலால் இவைகளை யென்னிடங் கொடுத்துவிடு," என்று வாங்கிக்கொண்டு ஸ்காந்த வசனபுஸ்தகத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தார். அவளுக்கு அந்தப் புஸ்தகத்தில் விருப்ப மில்லாவிட்டாலும், தந்தை சொல்லை மறுக்கப் பயந்து அரைமனதாக வாங்கிக் கொண்டாள். இரத்தினமையர் பைபிலைத் தமது பீரோவில் வைத்துப் பூட்டிக்கொண்டார். மறுநாள் உபாத்திச்சிக்கு வெகுமதி கொடுத்து, இனி இங்கே வரவேண்டாமென்று திட்டஞ்செய்து அனுப்பிவிட்டார். வாசல் திண்ணையில் ஒரு பென்ஷன் சிப்பாயியைக் காவலாக வைத்து உத்திரவின்றி ஒருவரையும் உள்ளே விடாதே யென்று வற்புறுத்தினர். இவை

யெல்லாம் ஞானம்பாளுக்குச் சொல்லமுடியாத வருத்தத்துக் கிடமாயிருந்தது. வாத்திச்சியின் பிரிவு அவளுக்கு எம வாதனையாக இருந்தது. இப்படி நடக்குமென்று அவள் கன விலும் நினைக்கவில்லை. வாசல் திண்ணையிலுட்கார்ந்திருந்து இரத்தினமையர் வாத்திச்சி வந்தவுடன் அவளுக்கு வெகுமதி கொடுத்து அனுப்பிவிட்டபடியால், ஞானம்பாள் அவளைப் பார்க்கவும் பேசவு முடியாமற் போயிற்று. அதற்காக அவள் மனம் தீயில்விழுந்த புழுப்போலத் துடித்தது. இப்படி யொரு மாதமளவும் வாத்திச்சிக்காகத் துக்கங் கொண்டாடி னாள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தேறித் தந்தை சொற்படி ஸ்காந்த புராணம் முதலிய புஸ்தகங்களைப் படித்து வந்தாள். அதனால் நமது சுயமதத்தில் கொஞ்சம் கொஞ்ச மாகப் பிரிய முண்டாயிற்று. பாரதாதி நூல்களில் கொஞ்சம் ருசி உண்டாயிற்று. அவளுடைய தாயாரும் தன்மகள் புரா ணங்களைப் படிக்கும்போது கிட்ட உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பாள். சில சமயம் இரத்தினமையர் தன் குழந் தையைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு படிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பார். சந்தேகமுண்டான விடங்களில் தாயுந்தந்தையும் உண்மையை எடுத்துக்காட்டித் தெளிவிப்பார்கள். இரத்தினமையருக்குத் தமிழ் ஸம்ஸ்கிரு தங்களில் விற்பத்தி யுண்டு. ஆகையால் மேற்படி புராணங் களில் கடின விடங்களை நன்றாய்ப் பிரசங்கித்து ஞானம்பா ளுக்கு ஸ்வமதத்தில் ருசி உண்டாக்குவார். இப்படியாக ஞானம்பாள் பாரதம் இராமாயணம் ஸ்காந்தம் முதலிய சமய நூல் சரித்திரங்களைப் படித்துச் சிறிது தேர்ச்சி அடைந்தாள். வாத்திச்சி ஞாபகம் சிறிது சிறிதாக மறக்கலாயிற்று. அவள் உபதேசத்தில் நம்பிக்கை குறைந்தது. சிவபக்தி யென்னும் ஞானதீபம் அவளுடைய மனமாகிய திரியில் சிறிது பற்றிப்

பிரகாசிக்கத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் பாலசுந்தரத்துக்கு இரத்தினமையர் கடிதமெழுதியிருந்தபடியால் அவன் சீர்காழிக்கு வந்து பத்துநாளிருந்து தன் அருமை மனைவியின் மனம் கொஞ்சம் மாறியிருப்பதையும் வாத்திச்சி கூட்டுறவு பற்றற ஒழிந்துபோனதையும் கண்டு தன் மனதுக்குள் களிப்படைந்துபோனான். இப்படியாக இரண்டு மூன்று தடவை அவன் சீர்காழிக்கு வந்து போனான். தடவைக்குத் தடவை அவளிடத்தில் மாறுபாடு கண்டு மகிழ்ந்தான். 1884வரு புரட்டாசிமீ அவன் சீர்காழிக்கு வந்திருந்தபோது தன்னைக் கண்டவுடன் ஓடி ஒளியும் இயல்புள்ள தன் மனைவி தன்னைக் கடைக்கண்ணால் பார்ப்பதையும் தன்னிடம் பேச மனமுள்ளவள்போல் தோன்றுவதையுங் கண்டு இதுதான் நல்ல சமயமென்று தெரிந்து, தன் மாமனாரோடு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, அவரை நோக்கி "மாமா! இந்த வருஷம் ஸ்கந்தஷஷ்டியில் ஒரு சமாராதனை செய்ய உத்தேசித்திருக்கிறேன். அதேனென்றால் என் ஸம்ஸ்கிருத வாத்தியார் சிந்தாமணி சாமிசாஸ்திரிகள் மஹா வித்துவானாதலால் அவரைக்கொண்டு ஸ்காந்த புராணம் வாசிக்கச்சொன்னேன். ஸ்கந்தஷஷ்டி தினம் தெய்வானை கல்யாணமகோற்சவம் நடக்கப்போகிறது. சுப்பிரமணியர் எங்களுக்குக் குலதெய்வமாதலால் என் தந்தையார் வருஷா வருஷம் ஸ்கந்தஷஷ்டி சமாராதனை செய்வது வழக்கம். அதனாலே தான் அவருக்குச் செல்வாக்கும் ஐசுவரியமும் உண்டாயிற்றென்று அவர் சொல்லக்கேட்டுத் தெரிந்திருக்கிறபடியால் இந்த ஸ்கந்தஷஷ்டிமுதல் வருஷா வருஷம் தவறாமல் நடத்த உத்தேசித்திருக்கிறேன். நாம் சம்பந்தஞ் செய்துகொண்டது முதல் இது வரைக்கும் ஒரு தடவையாவது தாங்கள் வயலூருக்கு வந்ததேயில்லை. ஆகையினால் இந்த வருஷம் தீபாவளிக்கே

மாமியாரையும் அழைத்துக்கொண்டு வயலூருக்கு வந்தால் ஸ்கந்தஷஷ்டி ஆறுநாட்களுங் கழிந்தபின் ஊர் வந்து சேரலாம்; என்ன சொல்கிறீர்கள்,'' என்றான். அவர், ''அப்பா! பாலசுந்தரம் உன் வீடென்றும் என் வீடென்றும் பேதம் நினையாமல் இருக்கும் எனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை,'' என்று கூறித் தன் பத்தினிக்குத் தெரிவிக்க, அந்தம்மாளும் சம்மதப்பட்டபடியால் பாலசுந்தரம் மனமகிழ்ந்து ஊர்போய்ச் சேர்ந்தான்.

தீபாவளிக்கு இரண்டு நாள் முன்னாகவே இரத்தினமையர் தன் பத்தினி புத்திரிகளை அழைத்துக்கொண்டு இரயிலேறித் திரிச்சிராப்பள்ளிக் கோட்டை ஸ்டேஷனில் இறங்கினார். பாலசுந்தரம் அவர்களை அழைத்துக்கொண்டு போவதற்காக கோச்சு வண்டிகளோடு ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். எல்லாரும் திரிச்சிராப்பள்ளியில் பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு சாயந்திரம் கடைத்தெருவு முதலியவற்றையும், ஊரின் சிறப்புக்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வீடுவந்து சேர்ந்தார்கள். மறுநாள் காலையில் எழுந்திருந்து காவேரி நதியில் ஸ்நானஞ்செய்துவிட்டுத் தாயுமானஸ்வாமி தரிசனத்துக்காக மலைக்குப் போனார்கள். மலையின் அழகையும் அங்குள்ள விநோதங்களையும் பார்த்துக்கொண்டே உச்சிப்பிள்ளையார் சந்நிதிபோய் தரிசனஞ் செய்து விட்டு, மாதுருபூதேசுவரரையும், சுகந்த கொந்தளாம்பிகையையும் தரிசனஞ் செய்துகொண்டு திரும்பிவந்து, சாயந்திரம் ஸ்ரீரங்கம், திருவானைக்கா முதலிய ஸ்தலங்களுக்குப் போய் சுவாமி தரிசனஞ்செய்து மகிழ்ந்திருந்தார்கள். பாலசுந்தரம் காலையில் எழுந்திருந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கடைத்தெருவு போய் தீபாவளியினன்று இரவு ஸ்நானஞ்செய்தபின் உடுத்துக்கொள்வதற்காக உயர்ந்த வஸ்திரங்களும் ரவிக்கை

களும் வாங்கினன். ஞானம்பாளுக்கு உயர்ந்த காசிப்பட்டும் ரவிக்கைகளும் வாங்கினன். மற்றும் வேண்டிய சாமான் களும் வாங்கிக்கொண்டு வெய்யில் தாழ்ந்தபின்பு எல்லோரும் புறப்பட்டு வயலூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். தீபாவளி வெகு விமரிசையாய் நடந்தேறியது. மறுநாள் பாலசுந்தரம் அநேக ஏழைகளுக்குத் தானங்கள் கொடுத்து, ஏழையான பிராமணர்களுக்கு உலுப்பை, பணம் முதலிய கொடுத்தான். எல்லாரும் சிற்றுண்டி காபி சாப்பிட்டபின் கச்சேரி மண்ட பத்தில் மாமனுருடன் வந்து உட்கார்ந்துகொண்டான். அதன் பக்கத்தில் ஒரு அறை யிருந்தது. வெகு சிறப்பாய்க் கட்டப் பட்டு, நாற்காலிகள், மேஜைகள், பெஞ்சுகள், ஈஸிசேர்கள் போடப்பட் டிருந்தன. கீழே உயர்ந்த இரத்தினக் கம்பளங் கள் விரிக்கப்பட்டிருந்தன. பீரோக்களும், பெட்டிகளும் வைத்திருந்தன. ஞானம்பாளின் வேலைக்காரி இலட்சுமி அம் மாள் அவளையும் அவளுடைய தாயாரையும் அழைத்துக் கொண்டு வந்து அந்த அறையி லுட்காரவைத்தாள். அது கச்சேரிமண்டபத்தில் நன்ருய்ப் நடப்ப தெல்லாவற்றையும் பார்க்கும்படியா யிருந்தது. வேதசாஸ்திர பண்டிதர்கள், அநேக பாடகர்கள், விகட கவிகள், கதாப்பிரசங்கிகள், கவி ராயர்கள், சங்கீதவித்வான்கள், கழைக்கூத்தாடிகள் முதலான பேர்கள் வந்து நமது தேச வழக்கப்படி தங்கள் தங்கள் வித்தை சாதுரியம் வெளிப்படும்படி காட்டினர்கள். பால சுந்தரம் அவரவர்களுக்குத் தக்கபடி பரிசளித்தான். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அநேகர் வந்து வெகுமதி வாங்கிக் கொண்டு போனர்கள். வேலைக்காரர், வேலைக்காரிகளுக்கும் தகுந்தபடி பரிசளிக்கப்பட்டது. மத்தியானம் பனிரண்டு மணியானதும் தேவபூஜையை முடித்துக்கொண்டு இஷ்ட மித்திரர்களுடனும், ஏழைப் பிராமணர்களுடனும் போஜனம்

செய்து, முன்போலவே பலபல விநோத வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இடையில் இலட்சுமி அம்மாள் ஞானம்பாளுக்கு வீட்டின் வளத்தையும், பாலசுந்தரம் அவளுக்காகத் தேடி வைத்திருக்கும் வஸ்திராபரணங்களையும், வேடிக்கை விநோதங்களையுங் காட்டினாள். பல வேலைக்காரர்களை அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி பேசி இன்னாரென்று தெரிவித்தாள். ஊரிலுள்ள தனவந்தர் வீட்டுப் பெண்களும், ஏழைவீட்டுப் பெண்களும் ஞானம்பாளைப் பார்க்க வந்து அவளோடு பேசிப்போனார்கள். ஸ்கந்தர்ஷஷ்டி உற்சவந்தொடங்கி வெகு சிறப்பாக நடந்துவந்தது. ஆறுநாளும் பிராமண போஜனமும், ஏழைகளுக்கு உணவு மளிக்கப்பட்டது. ஆரு நாள் தெய்வயானையம்மை கல்யாணம் வெகு சிறப்பாக நடந்தது. அநேக வைதிகர்களும், உத்தியோகஸ்தர்களும், ஏழையர்களும் வந்து கூடினார்கள். சீமாட்டிகள் எல்லாரும் ஞானம்பாளைச் சூழ்ந்தார்கள். இலட்சுமி அம்மாளும், மற்றவேலைக்காரிகளும் அவரவர்களுக்குத் தகுந்தபடி உபசரித்தார்கள். ஞானம்பாளுக்கு உண்டான பெருமை அளவுகடந்ததாகக் காணப்பட்டது. அன்று காரியம் வெகுமேன்மையாக நடந்தது. வேறென்ன சொல்வது. தேவேந்திரன் வீட்டில் நடந்த கல்யாணச்சிறப்புப்போலவே யிருந்தது. வயலூர் அமராவதி பட்டணம்போலவே யிருந்தது. மறுநாள் வந்தவர்கள் எல்லாரும் தம்தம் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். அதன்மேல் பத்துநாள் இரத்தினமையர் வயலூரில் தங்கித் தன் மருமகனுடைய செல்வச் சிறப்பையும், புத்திசாலித்தனத்தையும், பெருமையையும் மாடமாளிகைகளையுங்கண்டு மனமகிழ்ந்து களிகூர்ந்தார். அவருடைய மனைவிக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவு கிடையாது. தன்மகள் ஞானம்பாளைப்பார்த்து "உன்னைப்போல பாக்கியசாலி இந்த உலகத்தில் கிடையாது" என்று

பலதாம் சொல்லி மனமகிழ்ந்தாள். ஞானம்பாள் தன் நாதன் கட்டி வைத்திருக்கும் மாடமாளிகைகளையும், வஸ்திராபரணாதிகளையும் பல பண்டங்களையும், தானிய தவசங்களையும், மாடு கன்றுகளையும், பணிவிடைக்காரர்களையும், வேறு பல பொருள்களையும், இலட்மி காட்டக் கண்டு பிரமிப்படைந்து தன் புத்தி மோசத்துக்கு வருந்தினாள். பால்மரியம்மாளுடைய உபதேசம் எங்கேயோ மறைந்துபோயிற்று. அந்த இடத்தில் நாயகனுடைய ரூபம் வந்து குடிபுகுந்தது. செய்வதின்னதென்று தெரியாமல் மயங்கி வாய்திறவாமல் இருந்தாள். முகத்தில் வருத்தக்குறி நாளுக்குநாள் மேலிட்டது. ஆனாலும் வெளிக்குக்காட்டாமல் மறைத்து வைத்துக்கொண்டு வருந்தியிருந்தாள். அதைக் குறிப்பாகத் தெரிந்துகொண்ட பாலசுந்தரம் மனதுக்குள் மகிழ்ச்சியடைந்து, இன்னும் அவளுக்குப் புருஷபக்தி திடப்படட்டும் என்றுகருதி அலட்சியம் செய்வதுபோல அவளைப்பாராமலும் அவளோடு பேசாமலும் இருந்துவிட்டான். பத்து நாளானதும் இரத்தினமையர், "பாலசுந்தரம்! நான்வந்து நாளாயிற்று ஊருக்குப் போக வேண்டும். ஞானம்பாள் இங்கே இருக்கட்டுமா?" என்றார். அதற்கு அவன், "நான் யாத்திரை போகவேண்டியதா யிருக்கிறது. மீண்டு வருகிறதற்கு ஆறுமாசம் செல்லும்; அதன் பின்பு, அழைத்துக் கொள்ளுகிறேன்," என்றான். அவர்களுடைய இரகசியம் தெரியாமையால் அவர் சரியென்று ஒப்புக்கொண்டு ஊருக்குப் போய்விட்டார். ஞானம்பாளுக்கு ஊருக்குப் போகப்பிரியமில்லை. தான்செய்த பிசகை நினைந்து வருந்திப் பேசாமல் முகஞ்சுண்டி ஊர்வந்து சேர்ந்தாள் பாலசுந்தரம் தன் மனைவியின் புத்தி மாறி நல்வழிப்பட்டதென்றும், இனி அவள் நம்மிடம் பூர்ணநேசம் வைத்திருப்பாளென்றுங் கருதி மனமகிழ்ந்தான். பண்ணைக்கார சுந்தர

மையர், "ஏன் மனைவியை ஊருக்கு அனுப்பிவிட்டாய்?" என்று கேட்டதற்கு, "இப்பொழுது நான் அடிக்கடி வெளியில்போய் வரவேண்டிய வேலையிருக்கிற தல்லவா? அப்பொழுது அவள் தனிமையாகத் தானே யிருக்கவேண்டும். ஆகையால் வேலையெல்லாம் முடிந்தபிறகு அழைத்துக் கொள்ளலாமென்று நினைத்து அனுப்பிவிட்டேன்," என்முன். அவரும் சரிதானென்று ஒத்துக்கொண்டதனல் அவன் தன் வேலைகளைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

இரத்தினமையர் ஊர்போனதும், தன்னுடைய பந்துஜனங்களிடத்திலும் இஷ்ட மித்திரர்களிடத்திலும் தன் மருமகனுடைய பெருமையைப் பேசுவதும் அவனைப் புகழ்வதுமாக இருந்தார். அவரது மனைவியும் வருகிறவர் போகிறவரிடத்திலும் தன்மருமகனுடைய அதிர்ஷ்டத்தையும் பலவகையாக வர்ணித்துப் பேசுவதுமே தொழிலாகவிருந்தாள். அது கேட்ட எல்லாரும் ஞானம்பாளைப் புகழ்ந்துகொண் டிருந்தார்கள். ஞானம்பாளுக்கோ எல்லாம் பெருமையாகக் காணப்பட்டாலும், தான் செய்த முட்டாள்தனத்துக்கு வருந்திப் பேசாம விருந்தாள். தன்னைத்தானே திட்டிக்கொண்டாள்; பால்மரியம்மாளை வைதாள். மறுபடியுந் தன்னைத் தன் கணவனேடு கூட்டுவிக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்தாள். இப்படியிருக்கையில் அவளுடைய அத்தை மகள் முத்தம்மாள் தன் நாயகனேடு திடீரென்று வந்து உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டதும் ஞானம்பாள் எழுந்திருந்து உபசாரத்தோடு அழைத்து வந்து உட்காரவைத்து க்ஷேமம் விசாரித்துப் பலபல வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தாள். சற்றுநேரங் கழித்து நீ வந்தகாரியம் என்ன என்று விசாரித்தாள். முத்தம்மாள், "தன்கணவனைச் சீர்காழியில் முன்சீபாக மாற்றிவிட்டார்கள்; அதனல் இங்கே வந்திருச்கிறேன்;

தகுந்த வீடு கிடைக்கவில்லை; அதுவரை இரண்டொருநாள் உன் வீட்டிலிருக்கலாமென்று வந்திருக்கிறோம். இவ்வூரில் இருக்கும்வரை நாம் சந்தோஷமாகக் காலங் கழிக்கலாம்,'' என்று கூறினாள். இப்படிக் கூட்டிவைத்த தெய்வத்துக்கு வந்தனம் செய்தார்கள். இரண்டொருநாள் கழித்து முத்தம்மாள் வேறு வீடு பார்த்துக்கொண்டு தனியாகப் போய்விட்டாள். அடிக்கடி இவள் அவள் வீட்டுக்குப்போவதும், அவள் இவள் வீட்டுக்கு வருவதுமாக இருந்தது. இச்சமயத்தில் ஞானம்பாளுடைய தோழி மீனாட்சியும் சீர்காழிக்கு வந்திருந்தாள். ஒருநாள் இம்மூவரும் கூடிப்பேசிக்கொண்டிருக்கையில், மீனாட்சி தன் நாயகனிடத்தில் நடந்த விநோதங்களையும் சம்பாஷணைகளையும் எடுத்துச்சொன்னாள். முத்தம்மாள் தன் நாயகனுடைய குணங்களையும் பெருமையையும் பேசினாள். ஞானம்பாளோ வாய்திறக்கவில்லை. மீனாட்சி, "ஞானம்பா! நீ உன்கணவனோடு எப்படிக்காலங்கழித்தாய்,'' என்று கேட்டாள். அதற்கு அவள் தகுந்த விடை பகராமல், வேறு சங்கதிகளைப்பேசி மறைத்துக்கொண்டிருந்தாள். முத்தம்மாள், "ஞானம்பா! ஏன் மறைக்கிறாய்! நாங்கள் எங்களுடைய சங்கதிகளை யெல்லாம் சொன்னோமே; நீ மாத்திரம் ஏன் சொல்லமாட்டேனென்கிறாய்; சொல்,'' என்றாள். அதற்கு அவள் நீங்களெல்லாரும் உத்தியோகஸ்தர் மனைவிகளானபடியால் உங்களுடைய பெருமைகளைப் பேசிக்கொண்டது உசிதந்தான். நான் குடித்தனக்காரன் மனைவியாதலால் என்ன பெருமை பேசிக்கொள்கிறது,'' என்று பதில் சொன்னாள். மீனாட்சி, "நான் உத்தியோகஸ்தன் மனைவியா யிருந்தது போதும், பேர்மட்டும் பெரிய பேரேயொழியக் காரியத்தில் பிரயோசனமில்லை. என் கணவனுக்கு இருநூறுரூபா சம்பளம் வருகிறது. வந்தாலும் வண்டிச் செலவு, மாட்டுச்

செலவு, வீட்டு வாடகை, வேலைக்காரர்கள் சம்பளம், குதிரைகளுக்குத் தீனி, வந்த உத்தியோகஸ்தர்களுக்கு விருந்து, வஸ்திரங்கள், வேறு பல சில்லரைச் செலவுகள் இவற்றுக்கெல்லாம் போதாமல் மாதம் நூறு இருநூறு கடனாகிறது. இதுவரைக்கும் ஐயாயிர ரூபா கடனாயிருக்கிறது. என் கணவனோ இன்னும் பெரிய ஸ்திதிக்கு வரவேண்டி விரும்புகிறபடியால் பரிதானம் வாங்குவதில்லை, கடனுக்கு என்ன செய்கிறதென்று வருத்தப்படுகிறார். சீக்கிரத்தில் கடனை யடைத்துவிட்டுக் காணி பூமிகள் சம்பாதித்து உன் கணவனைப்போலச் சுகஜீவனம் பண்ண விரும்புகிறார். தவிர இரவும் பகலும் வேலையிலேயே கவலையாயிருக்கிறார். மாதத்தில் பாதிநாள் சுற்றுப் பிரயாணம் போய்விடுகிறார். அப்பொழுது தனித்திருந்து கஷ்டப்படுகிறேன்; உத்தியோகஞ் செய்வதைப் பெரிதாக நான் நினைக்கவில்லை. எப்படியானாலும் அது சேவகத்தொழில்தானே; சேவகனுக்கென்ன சுகமுண்டு; உன் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நிச்சயமாகவே யென் நிலைமை யெனக்கு வருத்தமாகவே யிருக்கிறது," என்றாள். முத்தம்மாளும், "மீனாட்சி சொல்வது சரிதான். எனக்கும் இப்படிப்பட்ட கஷ்டந்தான். என்கணவன் எப்பொழுது பென்ஷன் வாங்கிக்கொண்டு சுகமாக இருக்கப்போகிறேனோ என்று சதா வருத்தப்படுகிறார். பார்க்கிறவர்களுக்குப் பெருமையாகத் தோன்றுகிறதே யொழிய உள்ளுக்குள்ளே பார்த்தால் உத்தியோகஸ்தர் நிலைமை பரிதாபந்தான்," என்று சொல்லிக்கொண்டிருக்கிறபோது, ஞானம்பாள்தாயார் வந்து அவளுடைய பெருமைகளையும் தன் மருமகனுடைய செல்வச்சிறப்பையும் வெகுவாக எடுத்துக்கூறி, தன் குழந்தை நல்லபாக்கியசாலிதான் என்று சொன்னாள். இப்படிக் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து அவ்விருவரும் போய்விட்டார்

கள். ஞானம்பாள் இவையெல்லாம் கேட்டுத் தன் பெருமை உண்மையில் அளவுகடந்ததுதானென்றும், தான் தன் கணவன் விஷயத்தில் நடந்துகொண்டது பெரிய அபசாரமென்றுங் கருதிப் பரிதபித்துக்கொண்டிருந்தாள். இது நிற்க,

இரத்தினமையர் வக்கீல் உத்தியோகஞ்செய்து இலட்ச ரூபாய் வரைக்கும் சம்பாதித்திருந்தார். அவருக்கு நிலம் வாங்கவேண்டுமென்கிற அபிப்பிராய மிருந்தது. சிலவருஷங்களுக்கு முன் நானூறு ஏக்கர் கரம்பு நிலத்தைத் தர்க்காஸ்து எடுத்திருந்தார். அதைச் சீர்படுத்துவதற்காக ஐம்பதினாயிரம் ரூபா செலவு செய்துவிட்டார். ஆனாலும் பயன்பெறவில்லை. நாகப்பட்டணத்தில் அவருக்கு ஒரு மைத்துனன் முத்துவையர் என்பவர் தரகு வியாபாரஞ்செய்துகொண் டிருந்தார். அதனால் ஐம்பதினாயிரம் ரூபா சம்பாதித்திருந்தார். வியாபாரத்தற் சிறந்தவராதலால் சுயமாகவே கப்பல் வியாபாரஞ் செய்து திரண்டபொருள் சம்பாதிக்கவேண்டுமென்று கருதியிருந்தார். கப்பல் வியாபாரத்துக்குக் குறைந்த பட்சம் இலட்ச ரூபாய் முதல் வைத்தால் அன்றி வியாபாரம் சரியாக நடவாதென்று கருதி அதற்குச் சமயம் பார்த்திருந்தார். ஒரு முறை அவர் சீர்காழிக்கு வந்து இரத்தினமையரோடு பேசிக்கொண்டிருக்கையில் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். இரத்தினமையர் அப்படிச் செய்வது நல்லதென்றும், தானுங் கூட்டாக இருந்து வியாபாரஞ்செய்ய விரும்புகிறதாகவும், ஐம்பதினாயிரரூபா முதல் போடுகிறதாகவுஞ் சொன்னார். முத்துவையர் நல்ல சமையம் வாய்த்ததென்று ஒத்துக்கொண்டார். இருவரும் கப்பல் வியாபாரஞ் செய்யத்தொடங்கி நடத்திவந்தார்கள். முத்துவையரே நாகபட்டணத்திலிருந்து சகல காரியங்களையும் நடத்திவந்தார். இரத்தினமையர் சீர்காழியிலிருந்து தாம் தர்க்காஸ்து எடுத்த நிலங்

களைச் சீர்திருத்தும் முயற்சியிலிருந்தார். அதற்காகப் பதி ஞாயிர ரூபாய் கடன் வாங்கிச் செலவு செய்தார். பயன் மட்டும் கிடைக்கவில்லை. அப்பொழுது வாக்கு ஜாலக்குள்ள அநேக வக்கீல்கள் கோர்ட்டில் நிறைந்திருப்பதினால் ஐயர் அவர்களுக்கு வரும்படி குறைந்துபோயிற்று. கஷ்ட ஜீவனஞ்செய்ய நேரிட்டது. ஐயர் அவர்கள் தமது நிலைமை பரிதாபமானது என்று கண்டுகொண்டார். கப்பல் வியாபாரமொன்று நடந்து வருகிறபடியால் கொஞ்சம் தைரியங்கொண்டிருந்தார். எல்லா வருத்தத்தையும் ஒருவருக்கும் வெளிப்படுத்தாமல் மனதுக்குள்ளேயே யடக்கிவைத்துக்கொண்டு இருந்தார்.

இந்தச் சமையத்தில் ஒரு விசேஷம் நடந்தது. அதாவது, சீர்காழியில் வரதப்ப ஐயரென்று ஒரு பிராமணப் பிரபு இருந்தார். அவருக்குப் பூஸ்திதி மிகுதியாக இருந்தது. அவருக்குச் சங்கரன் என்று ஒரே ஒரு குமாரனிருந்தான். அவனை அவ்வூரிலுள்ள மிஷன் ஹைஸ்கூலில் படிக்கவைத்திருந்தார்கள். அவன் நாளடைவில் படிப்பில்தேறி மெட்ரிகுலேஷன் கிளாஸில் படித்துக்கொண்டிருந்தான். ரெவரெண்ட் ஜான் பாக்ஸ் (Fox) என்ற ஒரு மிஷனரி அந்த ஸ்கூலுக்கு மானேஜரும் பிரின்ஸ்பாலுமாக நியமனம் பெற்றிருந்தார். அவர் கிறிஸ்துவ மதத்தில் அதிகப் பற்றுள்ளவர். ஒரே நாளில் உலகமுழுவதையும் கிறிஸ்துவமதமாக்கிவிடவேண்டுமென்றுங் கருத்துள்ளவர். பஞ்சகாலம் வருகிற சமையம் பார்த்துக்கொண்டிருந்து அப்பொழுது சோற்றுக்கில்லாமல் தவிக்கிற ஈனஜாதியாரில் அநேக குடும்பங்களைக் கிறிஸ்துவப் படுகுழியில் தள்ளி மூடிவிட்டவர். உயர்ந்த வகுப்பினரான பிராமணரிடத்திலும்,வேளாளர் முதலிமாரிடத்திலும் இவரது தந்திரம் செல்லவில்லை. அது அவரது தன்மைக்குக் குறை

வாகவே அவருக்குத் தோன்றியது. அதைக்குறித்து மிகக் கவலைப்பட்டுக்கொண் டிருந்தார். இந்தச் சங்கரன் உபாத்தி மாரிடத்தில் பயபக்தி விசுவாசமுடையவன். ஆதலால், தன் பிரின்ஸ்பாலாகிய பாக்ஸ் துரையிடத்தில் பணிவாயும் யோக்கியமாகவும் நடத்துகொண்டிருந்தான். அதனுல் அவ்விருவருக்கும் மிக நேசம் உண்டாயிற்று. சங்கரன் அவர் வீட்டுக்குப் போவதும் வருவதுமாக இருந்தான். பாதிரியாரோ இவன் தன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவனுக்குப் புஸ்தகங்கள் முதலிய பல வெகுமதி செய்துவந்தார். சமயம் வாய்த்தபோது கிறிஸ்துவமதத்தைப் பற்றிச் சிறிது உபதேசமும் செய்வார். சில சமயங்களில் சைவ வைணவ மதங்களில் குற்றம்போலத் தோன்றுகிற விஷயங்களைப்பற்றி அவனை வினவுவார். சங்கரனுக்கு மதவிஷயத்தில் சிறிதும் பழக்க மில்லாமையால் அதற்குச் சரியான பதிலளிக்க முடியாமல் மயங்குவான். அப்பொழுது, பாதிரி அவனைப்பார்த்துச் சிரித்து பரிகாசம்பண்ணி, "இவையெல்லாம் தப்பு இப்படிப்பட்ட குற்றங்களையுடைய மதத்தை அனுசரிப்பதினுல் ஆத்துமா இரட்சிக்கப்படுமா? சுத்த மதமான கிறிஸ்துவ மதத்தைக் கைக்கொண்டால்தான் மோட்ச சுகத்தை அடையலாம்," என்று வற்புறுத்தி வந்தார். இந்துமதத்தில் அளவில்லாத குற்றங்களுண்டென்றும், அந்தக் குற்றங்கள் பாலர்கள் கூடக் கண்டு பிடித்து ஒதுக்கிவிடத் தக்கவைகள் என்றும், இந்துக்களுக்கோ அதையறியும் சக்தியில்லாமல் குருட்டுத் தனமான நம்பிக்கை வைத்துக்கொண்டு கெட்டுப் போகிறுர்களென்றும் கூறினுர். இப்பொழுது நாகரிகத்தில் சிறந்து விளங்கும் ஐரோப்பியகண்டத்தில் பல தேசத்தார் இவ்விதமானகுருட்டு நம்பிக்கையை வைத்துக்கொண்டு காலங்கழித்து வந்தார்களென்றும், பாதிரிகள் செய்த உபதேசத்தினுலும்,

பிரசங்கத்தினுலும் சீர்திருந்திக் கிறிஸ்துவர்களாய்விட்டபடியால் அவர்களடைந்த நன்மைகள் அளவில்லாதனவென்றும், இவ்விஷய மெல்லாம் நீ தேசசரித்திரங்களிற் படித்து அறிந்திருப்பாயென்றும் கூறி, அவன் புத்தியை மயக்கி வந்தார். மதசங்கதி சிறிதும் அறியாத சங்கரன் அவர் உபதேசத்தினல் மயங்கிக் கிறிஸ்துவ மதத்தில் சிறிது நம்பிக்கை கொண்டான். முக்கியமாய் ஐரோப்பியர் நாகரிகத்திலும் அறிவிலும் சிறந்தவர்களென்று நம்பியிருந்த படியாலும், தன் உபாத்தியாராகிய பாதிரி மிகப்படித்தவரென்று அவன் கருதியிருந்ததுமே அவன் கிறிஸ்துவமதத்தில் நம்பிக்கைகொள்வதற்கும், சுயமதத்தை வெறுக்கிறதற்கும் காரணமாயிற்று. நம்மவர்களே! நமது குழந்தைகளுக்கு நமது சொந்த மத விஷயத்தைச் சிறிதும் போதிக்காமல் இங்கிலீஷ் பாஷையை மாத்திரம் கற்கச் செய்வதும், அவர்களை பாதிரிமார் வசம் ஒப்புவித்து அவர்களால் கல்வி கற்பிப்பதும் எவ்வளவு தீமை விளைவிப்பது என்று யோசித்துப்பாருங்கள். இந்த துர் வழக்கத்தினல் எத்தனை குடும்பங்கள் தமது புத்திரர் புத்திரிகளை யிழந்து வருந்தின. எத்தனை பெண்கள் தன் புருஷனை வஞ்சித்துப்போய்விட்டார்கள். ஆகையால் நம்மவர்களே! இனியாவது மிஷன் ஸ்கூல்களுக்குக் குழந்தைகளை அனுப்பாதிருங்கள். படிப்பிக்கத்தொடங்கும் முன்னமே நமது மதவிஷயத்தில் பழக்குவியுங்கள். மேலே செல்வோம்; இப்படி பாதிரி உபதேசத்தினல் சங்கரன் மனதில் சிறிது சிறிதாகக் கிறிஸ்துவ மதத்தில் பிரியமும், சுயமதத்தில் வெறுப்பும் உண்டாய் வந்தது. கடைசியாக அவன் கிறிஸ்துவனுகத் தீர்மானித்துக்கொண்டான். தன்னுடைய அபிப்பிராயத்தை பாதிரி பாக்ஸுக்குத் தெரியப்படுத்தினன். பாதிரியும் தனக்கு நல்லசமயங் கிடைத்ததென்று மகிழ்ந்து அவனைத் திடப்படு

த்த உத்தேசித்து அதற்கு வேண்டிய போதனைகளைச் செய்து கொண்டு வந்தார். தம் வீட்டிலும் தோட்டத்திலும் சர்வ சுதந்தரங் கொடுத்தார், பாதிரிக்குத் தோட்ட மொன்றிருந் தது. அந்தத் தோட்டத்தில் நானாவகையான பூச்செடிகளும், கனிதரும் விருட்சங்களும் நிறைந்து அடர்த்தியா யிருப் பதினால் சூரியாஸ்மி படாமல் குளிர்ந்திருக்கும். அதில் பாதிரி களும், போர்டிங் ஸ்கூலில் படிக்கிற பெண்களும் போய் உலா வித்திரிவது வழக்கம். சங்கரன் அந்தத் தோட்டத்தில் காலை மாலையும் போய்ச் சற்று நேரமிருந்து வரத் தலைப்பட்டான். மாலை வேலைகளில் உலாவும்போது ஸ்கூலில் படிக்கிற பெண் களில் சிலரும் வந்து உலாவுவார்கள். அவர்களோடு சங்கா னுக்கும் சிநேகலாபங் கிடைத்தது. அதுவே அவனுக்கு அஷ்டமத்துச் சனியனைப் பிடித்தது. அவர்களுடைய மாய வலையில் சிக்கிக்கொண்டான். அந்த உபதேசம் பாதிரி உப தேசத்துக்கு மேற்பட்டுப் போய்விட்டது. அதனால் அவன் அநேகமாய்த் தோட்டத்திலேயே வாசம்பண்ணிக்கொண்டி ருப்பான். நாளடைவில் கிறிஸ்து பக்தியும் திடப்பட்டது. இதையறிந்த பாதிரி அவனை நாகபட்டணத்துக்கு இரகசிய மாய் அனுப்பிவிட்டார். அவன் போன மறுநாள் அவன் பிதா தன் புத்திரனைக் காணமல் தேடத் தொடங்கினர். போனவிடம் ஒருவருக்குந் தெரியவில்லை. இரத்தினமைய ருக்கும் வரதப்ப ஐயருக்கும் மனமொத்த சிநேகமுண்டு; கொஞ்சம் பந்துத்துவமும் உண்டு. அவர் இரத்தினமையரி டத்துக்கு வந்து தன் குறைகளைச் சொல்லி முறையிட்டு, அவனைத் தேடுவதற்கான உதவிசெய்யும்படி கேட்டார். இரத் தினமையருக்கு பாதிரிகளினுடைய தந்திரமெல்லாந் தெரியு மாகையால் பாதிரி தான் மோசம்பண்ணி யிருப்பானென் றுணர்ந்து, பாதிரி வீட்டுவேலைக்காரர்கள், தோட்டக்காரர்

களைத் தட்டிக்கொடுத்து விசாரித்தார். கடைசியில் தோட்டக் காவற்காரன் நடந்த உண்மைகளைச் சொல்லி அவனை நாகப்பட்டணம் அனுப்புவதாக ஸ்கூல் பெண்கள் பேசிக்கொண் டிருந்ததைத் தான் கேட்டதாகவுஞ் சொன்னான். அவனுக்குத் தகுந்த பரிசளித்து நன்றாய் விசாரிக்கச்சொன்னார். அவன் தந்திரமாக விசாரித்துக்கொண்டு வந்து சங்கரன் நாகப்பட்டணம் போய்விட்டதாகவும், வருகிறவாரத்தில் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க உத்தேசித் திருக்கிற தாகவும் சொன்னான். இதற்குள் மாதம்ஒன்றாயிற்று. ஞானஸ்நானம் கொடுக்கிற நாளோ அதிக சமீபத்தில் வந்துவிட்டது. இன்னம் நாலுநாள்தான் இருக்கின்றன. இதற்கென்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருக்கையில் இந்துமதப் பிரசங்கி காளிமுத்துப்பிள்ளை யென்பவன் இரத்தினமையரை பார்க்க வந்தான். காளிமுத்து நல்ல புத்திமானும், பாதிரிகளுடைய உளவுகளெல்லாம் அறிந்தவனும், சமையத்துக்கேற்ற யுக்தி சொல்கிறவனும், எடுத்த காரியத்தை முடிக்குந் தாஷ்டிகனுமானதால், இரத்தினமையர் அவனிடத்தில் இதற்கென்ன யோசனையென்று கேட்டார். அவன் ஒரு நாழிகை யோசித்து, "நல்லது நாமெல்லோரும் இப்போழுதே புறப்பட்டு நாகப்பட்டணம்போகவேண்டும்; தாமதிக்கலாகாது. அங்கேபோய்த் தகுந்த யுக்தி பண்ணிக்கொள்ளலாம்," என்றான். அதற்குச் சம்மதித்து வரதப்ப ஐயரும், இரத்தினமையரும் இரண்டு வேலைக்காரர்களை அழைத்துக்கொண்டு ரயிலேறி நாகப்பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். நாகப்பட்டணம்போனவுடன் காளிமுத்து தன் தலைமயிரைக் கத்தரித்து வெட்டிவிட்டுக்கொண்டு, சட்டைக்காரனைப்போல உருவத்தை மாற்றிக்கொண்டான். அங்கிருந்த போர்டிங் பாடசாலையில் சங்கரனிருக்கிறதை யறிந்து அவ்விடம் போய்

அவனோடு பேசிக்கொண்டிருந்தான். ஸ்கூலில்உள்ளவர்களும் போர்டிங் தலைவர்களும் அவனைக் கிறிஸ்துவனென்றே நினைத்தார்கள். யாராவது உன்பேர் என்னவென்றால் என்பேர் ஜான் மெக்கேல் ஆச்சரியம்பிள்ளையென்று சொல்லி வந்தான். இப்படி இரண்டு நாள் காலையிலும் மாலையிலும்போய் அவனோடு பேசினதில் அவன் தன் தகப்பனைப்பிரிந்த வருத்தத்தால் துக்கப்படுகிறதாகத் தெரிந்தது. இது நல்லசமையமென்று தெரிந்து, மறுநாள் சாயந்திரம் ஆறு மணிக்கு ஒரு ஜட்காவண்டியை கொண்டுவந்து வைத்திருக்கச் சொல்லிவிட்டுத் தான் சங்கரனிடம் போய்ப் பேசிக்கொண்டிருந்தான். ஆறரைமணி சுமாருக்கு எல்லாரும் கேட்கும்படி நான் வீடுபோய் நாளை வருகிறேன் எனக்கு விடைகொடு என்று கேட்க, அவனும் சரியென்று சொல்லி வாசற்படி வரைக்கும் பேசிக்கொண்டே வந்தான். வாசற்படி வந்ததும் காளிமுத்துக் கண்ஜாடையையறிந்த வேலைக்காரர்கள் சங்கரனைக் குப்பென்று தூக்கி, அவன் கத்தாமல் அவன் வாயை மூடிக்கொண்டு வந்து வண்டியில் போட்டார்கள். அவன் பயந்து கூச்சலிடத் தொடங்கு முன் வரதப்பஐயர் 'ஏண்டா அப்பா நான்தான்' என்றார். தான் எதிர்பாராதிருக்கும் பொழுது தன் தகப்பனைச் சடிதியிற் கண்டபடியால் சங்கரன் திடுக்கிட்டுத் திப்பிரமைகொண்டு வாய் திறவாமலிருந்தான். வண்டிக்காரன் சங்கேதப்படி வண்டியை அதிக வேகமாய் நடத்திக்கொண்டு போய்ச் சேர்ந்தான். அவ்விடத்தில் இருந்து மறுநாள் இரயிலேறி எல்லோரும் சீர்காழிபோய்ச் சேர்ந்தார்கள். சங்கரன் படிப்பை நிறுத்திவிட்டான். அவனைவிட்டு அவன் தகப்பனார் பிரிவதேயில்லை. எங்கேயாவது வெளியில் போகவேண்டியிருந்தால் வேலைக்காரர்களை ஜாக்கிரதை செய்துவிட்டுப் போவார். சங்கரனும் நாளடைவில் புத்தி தெளிவடைந்தான். நமது சமய நூல்

படிக்க வாரம்பித்தான். தகுந்த உபாத்தியாயர்களுங் கிடைத்த படியால் சைவவைணவ சமய நூல்களைக் கூடியவரைக்குங் கச டறக்கற்றுக்கொண்டு இரண்டு மூன்று மாதங்களாகக் கிறிஸ்துவமதக் குருக்கண்மார் செய்த பித்தலாட்டங்களையும் தான் அவர்களிடத்திலிருந்தபோது கண்டகாட்சியையும் எல்லாருக்குந் தெரியும்படி பிரசங்கித்து வந்தான். இதனால் பாதிரிகளின் மோசம் இப்படிப்பட்டதென்று பலருக்குத் தெரிய வந்தது. ஞானம்பாள் காதில் இந்தச் சமாசாரம் பட்டதும், அம்மணிகூறியது மெய்யென்று நிச்சயப்பட்டது. அதன் மேல் சிவபக்திமேலிட்டது. தான் பதிவிரதையென்று எல்லாரும் புகழும்படி நடந்துகொள்வதே சரியென்று தீர்மானித்துக்கொண்டாள். தன் கணவன் சுப்பிரமணியரை உபாசிப்பதால் தானும் அந்தத் தெய்வத்தையே ஆராதிக்கவேண்டுமென்றும், தன் பர்த்தாவின் மனதுக்கு விரோதமில்லாமலும் நடக்கவேண்டுமென்றுந் தன்னுள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டாள். தன்னுயகனிடத்தில் மூடத்தனமாக நடந்துகொண்டதற்காக மிகவும் பரிதாபப்பட்டாள். இது முதல் அவள் தன் பர்த்தாவின் சொரூபத்தையே தான் வழிபடும் கடவுள் சொரூபமாகக் கருதி, சதா தியானித்து வந்தாள். ஆயினும் தன் கணவன் தன்னை மதித்து ஏற்றுக்கொள்வாரோ மாட்டாரோ வென்கிற சந்தேகம் ஒன்று அவள் மனதைப் புண்படுத்திக்கொண் டிருந்தது. அது அவளுக்குத் தீரா விசனமாயிருந்தது.

சிலநாளைக்குப்பின் பாதிரி தோட்டத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு புன்செய் நிலத்தைப்பற்றிய ஒரு விவகாரம் கிளம்பிற்று. அந்தப் புன்செய் குடியானவனது. அதில் நாலடி நிலம் பாதிரிதோட்டத்தோடு சேர்க்கப்பட்டுப் போயிற்று. குடியானவன் அதைக்குறித்துப் பாதிரிகளிடம் பலதரம்

போய் முறையிட்டும் கேள்வியில்லாமற் போனபடியால் அந்தக் குடியானவன் கிரமமாய்ச் சிவிலில் வழக்கிட்டுத் தன் பக்கஞ் ஜெயம்பண்ணிக் கொண்டான். இது சீர்காழி முன்சீப்கோர்ட்டில் நடந்தது. முன்சீப் சுப்பிரமணியஐயர் தீர்ப்புச்செய்தார். இந்தச் சுப்பிரமணிய ஐயர்தான் ஞானம்பாள் அத்தைமகள் முத்தம்மாளின் கணவன். இரத்தினமையர் இந்த வழக்கில் குடியானவன் பக்கத்திலிருந்து பேசி ஜயித்துக் கொடுத்தார். இதுவும், சங்கரன் விஷயமும் பாதிரிகளுக்குப் பெரும் வருத்தத்துக் கிடமாயிருந்தது. இரத்தினமையருக்கு இப்பொழுது ஐம்பத்தைந்து வயதாயிற்று. கடினமாகவேலை பார்க்க முடியாமையாய் விட்டது. வரும்படி குறைவாய் விட்டது.

இந்த வருஷம் மாமகம் வருகிறதென்று பஞ்சாங்கங்களால் வெளிப்பட்டது. சீர்காழியில் அநேக பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் குடித்தனக்காரர்களும் வியாபாரிகளும் மாமகத்துக்குப் போகவேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தார்கள். மாமகம் என்பது தென்னிந்தியாவில் நடக்கும் தேவாலய உற்சவங்கள் எல்லாவற்றிலும் மஹாப்பெரிது. கும்பகோணத்தில் நடக்கும் உற்சவம். குரு என்னும் கிரகம் சிங்கராசியில் சஞ்சரிக்கிற வருஷத்தில் வருகிற மாசிமாசத்து மகநட்சத்திரமே மாமகமெனப்படுவது. இது பன்னிரண்டு வருஷங்களுக்கொரு முறைதான் சம்பவிக்கும். அந்த உற்சவம் சம்பவிப்பது அருமையானதால் அந்த உற்சவதரிசனஞ் செய்வதற்காக இமாசல முதல் கன்னியாகுமாரி வரையிலுள்ள பூமியில் வசிக்கும் இந்துக்கள் எல்லாரும் வருவார்கள். அப்பொழுது நல்ல வியாபார மாகுமாதலால் நாலா பக்கங்களிலிருந்தும் வர்த்தகர்கள் பலவகையான அரிய வஸ்துக்களைக் கொண்டுவந்து விற்பார்கள். அந்தப் பொருள்களை

வாங்கும் நிமித்தம் அநேகர் போவதுண்டு. இந்த உற்சவம் இன்னும் ஒன்றரை மாதந் தானிருக்கிறது. அதற்குப் போக வேண்டும் என்பது இரத்தினமையர் அபிப்பிராயம். ஞானம்பாளுக்கும் அவள் தாயாருக்கும் இது மிகச் சந்தோஷகரமாயிருந்தது. அந்த மாமககாலத்தில் குடியிருக்க வீடுகிடைப்பது அரிதாகையால் முன்சீப் சுப்பிரமண்ய ஐயரும், இன்னும் சில வக்கீல்களுமாகச் சேர்ந்து ஒருவீட்டுக்கு இப்பொழுதே அட்வான்ஸ் கொடுத்துச் சித்தப்படுத்திக் கொண்டார்கள். ஞானம்பாளுடைய தோழிகள் பலரும் தங்கள் தங்கள் கணவரோடு புறப்படுவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஞானம்பாளுக்குப் பழைய குணங்களெல்லாம் மாறிப்போய்விட்டது. பால்மரியம்மாளுடைய உபதேசங்களெல்லாம் விஷபானம்போலத் தோற்றியது, பழைய நடையுடை பாவனைகளெல்லாம் நாகரிகமாகவே தோற்றியது. தன் நாயகன் தன்னிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது பார்ட்டிங்கிஸ் (Parting Kiss) கொடுத்ததும், அப்பொழுது "ஞானம்பா! புத்திசாலித்தனமாய் நடந்துகொள்" என்ற வசனமே மனதில் நிலைபெற்றது. தான் கணவனை மதியாமல் மூட்டுத்தனமாய்ப் பேசினவற்றுக்கெல்லாம் அவன் சாந்தமாய்க் கொடுத்த விடைகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக மனதிலே தோன்றின. அவன் கடைசியாகக் கூறிய உபதேச மொழிகளெல்லாம் அமிர்தம்போலக் கண்டது. அவனுடைய வதன சௌந்தரியத்தையும், வசனாமிர்தத்தையுங் கண்டு கேட்டு மகிழும்காலம் வருமோ என்கிற ஏக்கம் உதித்தது. இனி சொல்வதென்ன; அவளுக்குத் தன் கணவனுடைய சிந்தை தவிர வேறு எண்ணம் இல்லை. ஆகையால் தான் மாமகத்துக்காகக் கும்பகோணம் போகிறபோது தன் தோழி முதலானவர்களைப்போலத் தான் கூடிப் போகிறதற்கில்லையே

என்கிற துக்கம் அதிகரித்தது. தான் கணவனிடத்தில் கூடி வாழாமலிருப்பது மிகக்குறைவென்று கண்டது. அதனால் அவள் ஒருவரோடும் அதிகமாகப்பேசாமல் சமயபுராண சாஸ்திரங்களைப் படித்துக்கொண்டு இருந்தாள்.

இவ்வாறு நடக்கையில் சீர்காழிக்குப் பக்கத்தில் ஒரு சிறியகிராமத்தில் சந்தோஷம்பிள்ளை யென்றொருபுரோடெஸ்டாண்ட் கிறிஸ்துவனிருந்தான். அவன் மிக ஏழையாயிருந்தான். சில நாட்களுக்குமுன் ஒரு ரூபாகொடுத்து ஒரு லாட்டெரி சீட்டு வாங்கி வைத்திருந்தான். அதிர்ஷ்டவசத்தால் அவன் பேருக்குச் சீட்டுவிழுந்து பதினையாயிர ரூபா ஆஸ்தி வந்தணுய்விட்டான். அதனால் தலைகால்தெரியாமல் நடக்க ஆரம்பித்தான். அகங்காரமும் கெர்வமும் மேலிட்டன. யாரையும் மதியாமல் அலட்சியமாய்ப் பேசுகிறதும் துர்ப்பாஷைகளை உபயோகிக்கிறதும் அவனுக்கு வழக்கமாயிருந்தது. அவ்வூரிலுள்ள ஏழைக் குடியானவனுகிய ஒரு இந்து வீட்டுப் பெண்ணோடு சம்பந்தம் வைத்திருக்கிறானென்று வதந்தி உலாவிற்று. இந்தச் சங்கதி இந்தக் குடியானவனுக்குத் தெரிந்திருக்குமென்றும், அவனுடைய உடன்பாடு பெற்றுக்கொண்டே சந்தோஷம்பிள்ளை அவன் பெண்ணோடு சம்பந்தப்பட்டிருக்கிறானென்றும், கிராமத்தாரெல்லாரும் கருதினார்கள். ஆகையால் எல்லா ஜனங்களும் அந்தக் குடியானவனை மதத்துக்குப் புறப்பாக்கவேண்டுமென்று நினைத்திருந்தார்கள். இப்படியிருக்கையில் சந்தோஷம்பிள்ளை ஒருநாள் சாயந்திரம் வெளியே போனவன் இரவு வீட்டுக்கு வரவில்லை. மறுநாட் காலையில் அவனைத் தேடத் தொடங்கினார்கள். அவ்வூருக்குக் கீழ்புறத்திலுள்ள ஒரு குளத்தில் பிணமாய் மிதந்துகொண்டிருந்தான். அதைப் பார்த்த ஒருவன் போலீசாருக்குத் தெரிவித்தான். போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணபிள்ளை வென்பவர்

பரிசோதித்து விசாரித்தார். அவன் மண்டையிலும் முழங்காலிலும் காயம்பட்டிருந்தது. குளத்தில் அவன் தவறி விழுந்ததனால் உண்டான காயமென்று இன்ஸ்பெக்டர் யூகித்து, அந்தப் பிணத்தை அடக்கம்பண்ணும்படி உத்திரவு கொடுத்தார். இதையறிந்த கிறிஸ்துவர்களும் பாதிரிகளும் சந்தோஷம்பிள்ளை அந்தக் குடியானவன் வீட்டுப் பெண்ணிடம் சம்பந்தம் வைத்திருந்தா னென்றும், அதனால் மற்றுஞ் சில பேர்களுடைய உதவியினால் சந்தோஷம் பிள்ளையை இரகசியமாய் அடித்துக்கொன்று குளத்தில் தூக்கிப்போட்டுவிட்டார்களென்றும், இந்த உண்மையை வக்கீல் இரத்தினமையர், முன்சீப் சுப்பிரமண்ய ஐயர், இன்ஸ்பெக்டர் சரவணபிள்ளையாகிய இம்மூவரும் மறைத்துவிட்டார்களென்றும், அதை மறுவிசாரணைக்குக் கொண்டுவந்து விசாரிக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டுக்கு இரகசியமாய்ப் பெட்டிஷன் கொடுத்திருந்தார்கள்.

இப்பொழுது மாமகம் கிட்டியது; முன்னே தீர்மானித்தபடியே யாவரும் கும்பகோணம் போய்த் தாங்கள் அமர்த்தியிருந்த வீட்டில் தங்கினார்கள். அளவுக்கடங்காத ஜனங்கள் வந்திருந்தார்கள். தோப்புகளிலும், தோட்டங்களிலும், மரநிழல்களிலும், தெருத்திண்ணைகளிலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். தெருவுகளி லெங்கும் எள்ளுக் கூடப் போட இடமில்லாதபடி சதா ஜனங்கள் போக்கு வரத்தாய் இருந்தார்கள்; எங்கே பார்த்தாலும் கடைகள் வைக்கப்பட்டிருந்தன. எங்கே பார்த்தாலும் இந்துக்களும், கிறிஸ்துவர்களும், மஹம்மதியர்களும் தங்கள் மத உண்மைகளை எடுத்துப் பிரசங்கித்துக்கொண் டிருந்தார்கள். நானா தேசத்து ஜனங்களும் கூடியிருந்தபடியால் பல பாஷைகள் பேசப்பட்டு வந்தன. சில்லரை வியாபாரிகள் பலவகையான அரிய வஸ்துக்

களைக் கையில் வைத்துக் கொண்டு தெருத் தெருவாய் விலைகூறி உலாவினார்கள். தெருக்களின் இருபுறத்திலும் எட்டடிக்கொரு போலீஸ் கான்ஸ்டேபில் இருந்து வெகு ஜாக்கிரதையாகக் காவல்செய்துகொண் டிருந்தார்கள். ஸூப ரிண்டெண்டு, இன்ஸ்பெக்டர், ஹெட்கான்ஸ்டேபில் முதலிய உத்தியோகஸ்தர்கள் நடுவில் உலாவிக்கொண்டு கான்ஸ்டே பில்களை யெச்சரிக்கையா யிருக்கும்படி மேல்பார்வை பார்த்து வந்தார்கள். பல தேசத்தி லிருந்து வந்த இராஜாக்களும், பிரபுக்களும், மடாதிபதிகளும் தங்கள் தங்கள் விருதுக ளோடு போய்க்கொண் டிருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஏழைகளுக்காக அன்னதான சாலைகளும், சோற்றுக்கடை களுமிருந்தன. பலபடி சொல்வதில் பயனென்ன? பல வகைப் பண்டங்களும் பலவகையான பசுபட்சிகளும், பல வகையான தேசத்தாரும் நிறைந்திருப்பதினால் கும்பகோணம் ஒரு புதிய உலகம்போலத் தோன்றியது. ஊருக்குக் கீழ் புரத்தில் மாமாங்க குளமென்று ஒரு பெரிய குளம் உண்டு. அந்தக்குளத்தில் எல்லாரும் அன்று தான் ஸ்நானம் செய்ய வேண்டும். காலையில் அந்தக்குளத்தில் ஸ்நானம் செய்து விட்டு உடனே காவேரி நதியில் முழுகவேண்டும். குளத்தில் ஸ்நானஞ் செய்யும் ஜனங்களுக்கும் பிராணாபாயம் நேரிடாத படி குளத்து நீரெல்லாம் இறைத்து விடுவார்கள். முதலில் வந்த ஜலம் தெளிவாயிருந்தாலும் அளவற்ற ஜனங்களிறங்கி முழுகுவதால் குளம் முழுமையும் சேறாய்ப் போய்விடும். அவர்கள் அங்கிருந்து காவேரிக்குப் போகிறபோது அவர் களது சரீரத்திலும், வஸ்திரத்திலும் பட்டிருக்கும் சேறும் நீரும் அந்த வழியெல்லாம் ஒழிகிக் கணைக்கால் வரைக்கும் புதையும்படியான சேறாய்விடும். மத்தியான்னம் அவ்வூரிலுள்ள பன்னிரண்டு கோவில் சுவாமிகளும் அந்தக் குளக்கரைக்கு

வந்து தீர்த்தம் கொடுப்பார்கள். அப்பொழுது அந்தக் குளத்தில் ஸ்நானம் பண்ணினால் மஹா புண்ணியமென்று புராணங் கூறுவதால் அப்பொழுது அந்தக் குளமும், குளக்கரையும் குளத்துக்குப் போகும் வழியும் ஜனங்களால் நிறைந்து வெகு நெருக்கமாயிருக்கும். அந்தக்கூட்டத்தைப் பிளந்துகொண்டு நடப்பது எல்லாருக்கும் சாத்தியமல்ல. அந்த நெருக்கத்தில் பிராணாபாயங்கள் நேருவதுமுண்டு. பக்கத்திலிருக்கும் கிராமங்களிலும் நகரங்களிலு மிருந்து வந்தவர்கள் ஸ்நானம் பண்ணினவுடனே ஊர்போய்ச் சேருவார்கள். தூர தேசத்திலிருந்து வந்தவர்கள் மாத்திரம் அங்கையே தங்கியிருந்து இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் போவார்கள். இவ்வாறு பனிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை சம்பவிக்கும் மாமக மகோர்சவ விசேஷ மொருவர் சொல்லக்கேட்டறியத் தக்கதல்ல. கண்ணாரக் கண்டு களிப்பதே தகுதியாம். நிற்க,

மாமக தினத்தினன்று காலையில் ரத்தினமையர் முதலானவர்கள் காலை நாலரைமணிக்கு மாமாங்கக் குளத்துக்குப் போய் ஸ்நானம் பண்ணிவிட்டு அங்கிருந்து நேரே காவேரிக்குப்போய் ஸ்நானம் செய்து கூட்டம் வருமுன்னே தானே வீடுவந்து சேர்ந்தார்கள். எல்லாரும் சமைபல் செய்து ஏழைகளுக்குப் போஜன மளித்து புசித்துக் களித்திருந்தார்கள். மூன்று மணிக்குமேல் கடைவீதி பார்க்கப்போனார்கள். மீனாட்சி, விசாலாட்சி இருவரும் நூறுவராகன் எடுத்துக்கொண்டு தங்கள் கணவர்களோடு புறப்பட்டார்கள். இரத்தினமைய ரிடத்தில் பணமில்லை. ஊருக்குப் போவதற்கு வேண்டிய செலவிற்கு மாத்திரம் கொஞ்சம் பணமிருந்தது. ஆகையால் அவர் எல்லாரோடுங் கூடிக் கடைத் தெருவு போக வெட்கப்பட்டார். தன் செல்வக் குழந்தைக்கு விருப்பமான வஸ்துக்களை வாங்கிக் கொடுக்க முடியாமற்போய்

விட்டதேயென்று மனம் வருந்தினர். ஞானம்பாளுக்கு மிது விஷயத்தில் துக்கம் மிகுந்திருந்தது. கடைத்தெருவுக்குப் போகக்கூட மனமில்லை. தன்தோழிகளைப் போலத் தானுந் தன் கணவரோடுகூடி வந்திருந்தால் இந்தக் கஷ்டமிராதே யென்றும், அவர்களைப்போல அல்லது அவர்களுக்கு மேலாகச் செலவு செய்து விரும்பிய வஷ்துக்களை வாங்கலாமே யென்றும் நினைந்து மனம் புழுங்கினாள். மற்றவர்கள் கூப்பிடும்போது தாங்கள் போகாம லிருந்தால் வருத்தத்துக் கிடமாகுமே யென்று கருதி அவர்களுங் கூடப்போனார்கள். கூட்டம் மிக நெருக்கமாதலால் கடைகளில் நிற்பதுகூட அரிதாயிருந்தது. ஆதலால் நாளையதினம் கூட்டங்கலைந்துவிடு மென்றும் அப்பொழுது வந்து வேண்டியவற்றை வாங்கிக் கொள்ளலா மென்றும் யாவரும் தீர்மானித்துக்கொண்டு சாயங்காலம் ஆறுமணியானதும் எல்லாரும் கும்பேசுவரன் கோவிலுக்குப்போய் ஸ்ரீ கும்பேசுவரரையும் மங்களாம்பிகையுந் தரிசித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். இரத்தின மையருக்கும் ஞானம்பாளுக்கு மிது கொஞ்சம் ஆறுதலாயிருந்தது. இராத்திரி எல்லாரும் படுத்து நித்திரை செய்யும்போது இரத்தினமையர் தம் மனைவியை நோக்கி, “நாமென்ன செய்கிறது; கையிலிருந்த லட்சரூபாயும் நிலத்திலும் வியாபாரத்திலும் முடங்கி விட்டது. நிலத்துக்காக மேலும் பதினயிர ரூபா கடனயிருக்கிறது. சீர்திருத்தப் பட்ட நிலத்தில் பதினைந்து ஏக்கர் கொஞ்சம் விளைகின்றது. அவற்றை இந்தக் கடனுக்காக ஒற்றி வைத்து விட்டேன். கையிலோ ஒரு காசுகூட இல்லை. சுப்பிரமண்ய ஐயரும் மற்றவர்களும் வேண்டிய மட்டுஞ் செலவு செய்கையில் நாம் நமது குழந்தைக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்காம லிருந்தால் குழந்தை மனம் வருந்து மல்லவா? அதை

நினைக்கும்போது என் மனம் வருந்துகிறது. ஆகையால் ஏதாவதொரு சாக்கைச் சொல்லிவிட்டு, ஊர் போய்விடலா மென்று நினைக்கிறேன்,'' என்ருர். அதற்கு அவர் மனைவியும், "அது தகுந்த யுக்திதான். ஆனாலும் கூடவந்தவர்களை விட்டுத் தனியே போனால் அவர்களுக்குப் பல எண்ணங்கள் தோன்றும். நம்மிடத்தில் பணமில்லை யென்பது அவர்கள் அறிவார்கள். ஆகையால் நாம் ஊருக்குப்போனால் குறைவாகத்தான் நினைப்பார்கள். நாமும் அவர்களோடு கூடப் போகிறதே நல்லது. கையில் பணமில்லை யென்றதனால் ஒரு குறைவுமில்லையென்று தோன்றுகிறது,'' என்ருள். இரத்தினமையர் இதைக்கேட்டுப் பதிலொன்றுஞ் சொல்லாமல் சும்மா இருந்து விட்டார். தூங்குகிறவள்போலப் படுத்துக்கொண் டிருந்த ஞானம்பாள் இவைகளை கேட்டுத் தீராத துக்கத்தில் முழுகினாள். எண்ணாதெல்லா மெண்ணினாள். இந்தச் சமயம் தெய்வமே தன்னைக் காப்பாற்ற வேண்டு மென்று நினைத்துத் தன்வழிபடு கடவுளை தியானித்துக் கொண்டு சும்மா படுத்திருந்தாள். ஒருவருக்கும் நித்திரையில்லை. இராத்திரி நாலுமணிக்கு எல்லாரும் அயர்ந்து நித்திரைபோய்விட்டார்கள். எல்லாரையும் விட ஞானம்பாளுக்குக் கவலை யதிகமாதலால் சரியான நித்திரை யில்லாமல் சீக்கிரம் விழித்துக் கொண்டாள். அப்பொழுது யாரோ கதவைத் தட்டின சத்தம் கேட்டது. ஞானம்பாள் வந்து கதவைத் திறந்தாள். அவ்விடத்தில் தன் வேலைக்காரி இலட்சுமியம்மாளும் தன் பிராணநாதன் பாலசுந்தரமும் வந்து நிற்கிறதைப் பார்த்துத் திடுக்கிட்டுத் தலைகுனிந்து நின்ருள். அவனிடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று கருதினாள். தான் செய்த பெரும்பிழையும் நாணமும் முன்னின்றமையால் எப்படிப் பேசுகிறதென்றும், அவர் நம்மை அங்கீ

கரியாவிட்டா லென்ன செய்கிற தென்றும் துக்கித்தாள். அதை லட்சியம் பண்ணுமல் பேசுவோ மென்ருல் பக்கத்தில் நிற்கும் இலட்சுமி அம்மாளுக்கு அஞ்சினுள். அப்பொழுது இலட்சுமி யம்மாள், "ஞானம்பா! இந்தா! உன்கணவன் உனக்கு மாமாங்கச் செலவுக்காகக் கொடுத்தார்," என்று ஐந்நூறு ரூபா நோட்டைக் கொடுத்தாள். ஞானம்பாளுக் குண்டான ஆச்சர்யத்துக்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. தன் கணவன் தன்னிடத்தில் வைத்திருக்கும் அன்பை நினைந்து நினைந்து உருகினுள்; கடைக்கண்ணுல் தன் கணவனது திருமுகத்தை நோக்கிக்கொண்டே வலக்கையை நீட்டி நோட்டை வாங்கிக்கொண்டு கண்ணிலொற்றிக் கொண்டாள். பாலசுந்தரம் அது போதாவிட்டால் இன்னம் வேண்டிய பணந்தருவதாகச் சொல்லச் சொன்னுன். கொடுத்தது போது மென்றும், மேலே வேண்டுவதில்லை யென்றுங் குறிப்பாகத் தெரிவித்தாள். இதற்குள் இரத்தினமையர் விழித்துக் கொண்டதனுல் உள்ளே போய் விட்டாள். பாலசுந்தரமும் கூடவே உள்ளேபோய் மாமனுருக்கும் மாமியாருக்கும் நமஸ்காரஞ் செய்து மாமனுர் பக்கத்தில் உட்கார்ந்தான். ஐயரவர்கள் தமது மருமகனைக் கண்டதும் அவரது மனக்கவலைகளெல்லாம் ஓடிப் போயின. அவரையு மழைத்துக்கொண்டு வெளியில் வந்து வரதப்பஐயர் முதலியவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். மீனுட்சியும், விசாலட்சியும் ஞானம்பாளிடம் வந்து உன்கணவன் வந்திருக்கிருனே உனக்கென்ன கொண்டு வந்தானென்று பரிகாசமாகக் கேட்டார்கள். அவள் சிரித்துக்கொண்டு என்நாயகனே வந்திருக்கிறபோது வேறென்ன கொண்டுவர வேண்டுமென்று தகுந்த பதிலளித்தாள். எல்லாரும் பல பல பேச்சுக்கள் பேசிக்கொண்டு விநோதமாகக் காலங்கழித்தார்கள். மத்தியான்ன போஜனமானபின் யாவ

ருங் கடைத்தெருவுக்குப் போய்த் தங்களுக்கு விருப்பமான அரியவஸ்துக்களை வாங்கினார்கள். இலட்சுமி அம்மாள் ஞானம்பாளிடத்தில், "உனக்கு விருப்பமானதைச் சொன்னால் உன்கணவன் வாங்கித் தருவார்; உன்கையிலிருக்கும் பணத்தை நீ செலவழிக்க வேண்டாம். உனக்கு அவசரமான காலத்தில் செலவழித்துகொள்ளலாம்," என்று அவளை யழைத்துக்கொண்டுபோய் அவளுக்கு இச்சையான வற்றையெல்லாம் ஐநூறு ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்தாள். பாலசுந்தரம் அந்தத் தொகையை கொடுத்துவிட்டு அவளுக்குச் சந்தோஷமுண்டாக்கினான். தன்னாயகி முற்றுமாறுதலடைந்து தன்னை நேசிப்பதைக் குறிப்பாக அறிந்து மனத்துக்குள் மகிழ்ந்தான். பின்பு மாமனாரை நோக்கித் தான் மாட்டு வண்டியில் வந்து கொட்டையூரிலிருப்பதாகவும், இரவு அங்கே போய் மறுநாட்காலையில் அவசரமாய் ஊருக்குப்போக வேண்டுமென்றும், மறுபடி வெகு சீக்கிரம் சீர்காழிக்கு வருவதாகவும் சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு, ஞானம்பாள் முகத்தைப் பார்த்தான். பானுவைக்கண்ட தாமரைபோல இதுவரைக்கும் மலர்ந்திருந்த அவளது முகாரவிந்தம் ஒளிமயங்கி வாடியிருப்பதைக் கண்டு, நம் பிரிவாற்றாமையால் வருந்துகிறாளென்று கொண்டு, இனித் தாமதிப்பது கூடாதென்று நினைத்து அவளைப் பார்த்து, "ஞானம்பா! புத்திசாலியாயிரு, நான் சீக்கிரம் வருகிறேன்," என்று சொல்லிவிட்டு போய்விட்டான். இந்த வார்த்தையானது ஞானம்பாளுக்குத் தேவாமிர்தம்போ லிருந்தது. தன் கணவன் வாயால் தன்னை ஞானம்பாள் என்று கூப்பிட்டதே தனது பெரும் பாக்கியமாகக் கருதி மகிழ்ந்தாள். அதுவே இந்திர பதவி பெற்றதுபோல அவளுக்குத் தோன்றியது. அவள் விசனங்கள் கோடையால் வாடிக்கரிந்து தீய்ந்த பயிருக்குப் பெய்த

மழைத்தாரைகளாயின. தான் உலகத்தில் பெறவேண்டிய பாக்கியங்களெல்லாம் ஒருங்கே கிடைக்கப் பெற்றவள் போலக் களிகூர்ந்தாள். தன் நாயகன் தன்னிடம் வைத்திருக்கும் அன்பும் கருணையும் எவ்வளவு பெரியவைகளென்று ஆச்சரிய மடைந்தாள். இவ்வாறு பல பல யெண்ணங் கொண்டு அவன் தன் பார்வைக்கு எட்டாமல் மறையும் பரியந்தம் அவனையே பார்த்துக்கொண்டிருந்து, கண்ணுக்கு மறைந்ததும் துக்கக்கடலில் மூழ்கினாள். இனிக் காண்பதெப்போதோ வென்று பரிதபித்தாள். கையில் கிடைத்த பெரும் பொருளை யிழந்து பரிதவிக்கின்ற நிற்பாக்கியனான தரித்திரனைப்போல மனந்துடித்தாள். தான் செய்த பெரிய பிழையைச் சிறிதுகூடக் கவனியாமல் தன் மேல் கருணை சுரந்து வந்து சமையத்தில் உதவிசெய்து தன் பெருமையைக் காத்தருளின பிராணநாதனது பேரன்பை நினைந்து நினைந்து உருகினாள். இப்படி ஞானம்பாள் வருந்திக்கொண்டிருக்கையில் அவள் பிதா முதலானவர்கள் பாலசுந்தரத்தி னுடைய பக்தி விநய விசுவாசாதி குணாதிசயங்களை யெடுத்துப் பேசிக் கொண்டே வீடு போய்ச் சேர்ந்தார்கள். ஞானம்பாளும் அவர்களைப் பின்தொடர்ந்து வீடுபோ யடைந்தாள். விடிந்தவுடன் யாவரும் புறப்பட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் ஊர்போன மறுநாளே கலெக்டர் உத்திரவின் மேல் போலீஸ் இன்ஸ்பெக்டர் காக்ஸ் (Cox) என்ற யுரேஷியன் சில கான்ஸ்டேபில்களோடும், ஹெட்கான்ஸ்டேபிலோடும் அங்கே வந்து சந்தோஷம்பிள்ளை கேஸை விசாரித்துக் கொலை நடந்தது வாஸ்தவ மென்றும், பெட்டிஷனில் கண்டபடி இரத்தினமையர் முதலிய மூவரும் அதை அடக்கி விட்டார்களென்றும் ரிபோர்ட்டுசெய்துவிட்டான். கலெக்டர் அந்த கேஸை தாமே விசாரணைசெய்து காக்ஸ் ரிபோர்ட்

டின்படி குற்றம் நடந்தது வாஸ்தவமென்றும், முன்சீப்தார் முதலிய மூவரும் மறைத்துவிட்டார்க ளென்றும், ஆனால் குற்றம் நடந்து வெகு நாளாய் விட்டபடியால் சரியான சாட்சியங்கள் கிடைக்கவில்லை யென்றும் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்தார். அதனை நம்பின மேலதிகாரிகள் முன்சீப்தாரையும், இன்ஸ்பெக்டர் சரவணபிள்ளையையும் உத்தியோகத்தினின்றும் நீக்கி, இரத்தினமையரையும் இனிமேல் கோர்ட்டுக்கு வரக்கூடாதென்று உத்தரவு அனுப்பினார்கள். மின்னாமல் பெய்யாமல் இடி விழுந்ததுபோலத் தங்களுக்குச் சம்பவித்ததைக் கண்டு அம்மூவரும் பட்ட வருத்தத்திற்குக் கங்குகரையில்லை. என்செய்வது! பாவம்!! வாஸ்தவத்தில் அவர்களுக்கு யாதொன்றுந் தெரியாது. ஆதலால் அவர்கள் மன மெப்படி யிருந்திருக்கு மென்பதை யிதைப் படிப்பவர்கள் தாங்களே யோசித்துக்கொள்ளத் தக்கது. இரண்டு மூன்று நாள் துக்கங்கொண்டாடின பிறகு மூவருமொன்றாய்க்கூடி கலெக்டர் கொண்ட அபிப்பிராயந் தப்பென்றும், தாங்கள் அதில் எந்த வகையிலும் சம்பந்தப்பட்டவர்கள் அல்லரென்றும், அதை விசாரித்துத் தங்களுக்கு நியாயம் கிடைக்கச்செய்ய வேண்டுமென்றும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்துகொள்ளத் தீர்மானித்துக்கொண்டு, அந்த முயற்சியிலேயே கவலையாயிருந்தார்கள்.

இப்பொழுது இரத்தினமையருக்குப் பெரிதான மற்றொரு கஷ்டம் நேரிட்டது. அதென்னவெனில், "நாகப்பட்டணத்தில் கப்பல் வியாபாரம் செய்துகொண் டிருந்த முத்துவையரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிலடங்கிய விஷயமாவது, "நமது சரக்குகளை யேற்றிக்கொண்டுபோன கப்பல் சமாசாரம் யாதொன்றுந் தெரியவில்லை. பாறையில் மோதி உடைந்து முழுகிப்போயிற்றென்று சிலரும், புசலால் எங்

கேயோ அடித்துக்கொண்டு போய்விடப்பட்டதென்று சிலரும் சொல்லுகிறார்கள். நிச்சயமாயொன்றுந் தெரியவில்லை. தெய்வசித்தமெப்படியோ தீரவிசாரித்தபின் தெரியப்படுத்துகிறேன்,'' என்றெழுதியிருந்தது. இப்பொழுது அவர் மனது தாமரையிலை நீர்த்துளி போலத் தளும்பியது. "தற்கால்து எடுத்துப் பெருந்தொகையான பணத்தை யிழந்ததுந் தவிரப் பதினாயிர ரூபாய்கள் கடன் வாங்கிக் கடனாளியாய் விட்டோம், வக்கீல் உத்தியோகமும் போய்விட்டது. கப்பல் வியாபாரத்தினால் காலக்ஷேபம் செய்யலாமென் றெண்ணியிருந்தோம், அதுவும் இப்படியாயிற்று. இனியென்ன செய்வது. இதை யூரார் அறிந்தால் மிகவும் அவமானம்; கடன்காரர் அறிந்தால் மஹாகஷ்டம், மனைவியும் குழந்தையும் அறிந்து கொண்டால் தீராத்துக்கம். ஆதலால் இதைவெளியிடக்கூடாது,'' என்று மனதிலடக்கிக்கொண்டு வாய்திறவாமலிருந்தார். ஆனாலும் துக்கமும் கவலையும் அவர் மனதிலே குடியிருந்து விட்டது. அவருக்கு வேலை போனதும், கடன்பட்டு வருந்துகிறதும் தெரிந்து கொண்ட ஞானம்பாளும் அவள் தாயாரும் மனமெலிந்து சதாவருந்திக்கொண் டிருந்தார்கள். இப்பொழுது இன்ஸ்பெக்டர், முன்சீப்தார், இரத்தினமையர் மூவரும் கவர்னரிடம் அப்பீல் மனுக்கொடுத்தார்கள். இந்த விஷயத்துக்கு வக்கீல் வைத்து பேசவேண்டிய அவசியம் நேரிட்டது. சந்தோஷம்பிள்ளையின் குமாரன் ஞானக்கண்ணு என்பவன் இந்த விஷயத்தில் பதினாயிர ரூபாயானாலுஞ் செலவு செய்து, ஒருகை பார்த்து விடுகிறேனென்று சபதங்கூறிக் கிளம்பினான். இரத்தினமையர் வகைராப்பேர்களுக்கோ கையில் துட்டுக்கு வழியில்லை. அதைக் குறித்து மூவருங் கவலைப்பட நேரிட்டது. தஞ்சாவூர் சிவில் கோர்ட் வக்கீல் அனந்தராமையரிடங் கலந்து பேசி அவர்

சிபார்சின்பேரில் பட்டணம் ஹைகோர்ட் வக்கீல்களில் தகுந்தவரிடம் வக்காலத்துக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். அதற்காக இரத்தினமையர் தஞ்சாவூருக்குப் போகவேண்டியதாயிற்று. ரயில்சார்ஜுக்கு மாத்திரந்தான் கையில் பணமிருந்தது. மற்றவர்களைக் கேட்பது அவருக்குப் பெருங் குறைவாகத் தோன்றிய படியால் ஒருவரையுங் கேளாமல், தன் மனைவி புத்திரிகளிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தார். அன்றையதினமே அனந்தராமய்யரிடம் போய்க் கண்டு பேசினதில் அவர் தமக்குத் தெரிந்த வக்கீல்கள் ஹைகோர்ட்டில் அநேகரிருக்கிறதாயும், தாம் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வதாகவுங் கூறி, ஒரு கடிதமெழுதிக்கொடுத்து இதைக் கொண்டுபோய்ப் பட்டணம் கலியாணராமய்யரிடங் கொடுக்கும்படி சொன்னார். இரத்தினமையர் விசனத்தினாலும் பிரயாணத்தினாலும் மெலிந்திருந்தபடியால் அன்று ஜுரங் கண்டதனால் நாலு நாள் தஞ்சாவூரிலேயே யிருக்கவேண்டியதாயிற்று. வைத்தியத்துக்கும் ஹோட்டலுக்குமாகக் கையிலிருந்த பணம் முற்றுஞ் செலவாய்விட்டது. இதனால் அவர் கால்நடையாகத் திருவையாற்றின் வழியாகக் கும்பகோணம்போய் அங்கிருக்கிற தன் சிநேகரிடமிருந்து ரயில் சார்ஜுக்குப் பணம் வாங்கிக்கொண்டு போகலாமென்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டு நடந்துபோனார்.

திரிச்சிராப்பள்ளிக்குக் கிழக்கிலுள்ள பூபாகத்துக்குக் கீழச் சீமையென்றும், அதன் மேற்கிலுள்ள பூமிக்கு மேலச் சீமையென்றும் வழங்குவது சாதாரணமாய் யாவரு மறிந்திருக்கலாம். ஆதலால் அதை நினைப்பூட்டி மேலே செல்வோம். கீழச் சீமையில் வசிக்கும் பிராமணர்கள் சோழதேசத்து வடமர், வாத்திமர், மழநாட்டுப் பிரஹஜ்ஜனத்தார்,

காணியாளர், அஷ்ட ஸஹஸ்ரம் என்று பல வகுப்பினர். இவருள் அஷ்ட ஸஹஸ்ரமென்ற வகுப்பினரே யிங்கு குறித்துக்கொள்ளத் தக்கவர்கள். மேலே குறித்த பல ஜாதியாருடைய லௌகிக நடத்தையைப்பற்றி வடமச்செட்டு, வாத்திமக்கட்டு, அஷ்ட ஹஸஸ்ர கிறுக்கு என்று கூறுவது சர்வ சாதாரணம். அஷ்டஸஹஸ்ரஜாதியில் ஐசுவரியவான்கள் மிகச் சொற்பம். அவர்களோ மஹாடம்பக்காரர்கள். தலை கால் தெரியாமல் செலவு செய்வார்கள். அதைக்கண்ட ஏழைகளானவர்களும் அந்தப் பணக்காரர்களைப் போலவே டம்பமாக நடக்க விரும்புவார்கள். இந்த வகுப்பினரில் பஞ்சாங்கக்காரர்களும், பரிசாரகரும் மிகுதி; பெரும்பாலார் ஏழைகளே. அன்றன்று சம்பாதித்துச் சாப்பிடும் குடும்பங்கள் பல. யாராவது இவர்களைப பார்த்து ஏழையென்று சொல்லிவிட்டால் தங்கள் மானம் முழுவதும் போய் விட்டதாக நினைந்து வருந்துவார்கள். அப்படிச் சொன்னவனை ஜன்மப் பகையாகக் கருதுவார்கள். வீட்டிலுண்ணச் சோறில்லாவிட்டாலும் வெகு டம்பமாக வெளியில் வந்து உலாவுவார்கள். நீராகாரத் தண்ணீரைக் குடித்து வந்தாலும் தாங்கள் பஞ்சபட்ச பரமான்ன போஜனஞ் செய்ததாகப் பெருமை பேசிக் கொள்வார்கள். 1703 நம்பர் மல்லில் கிழித்த ஆறு முழத்துண்டு வஸ்திர மொன்றும், ஒரு சவுக்கமும் தான் அவர்களிடத்தில் உயர்ந்த வஸ்திரங்களாக விருக்கும். வீட்டிலிருக்கும்பொழுது தேவேந்திரனைப்போலச் சர்வாங்கமும் கண்களுள்ள வஸ்திரமுடுத்து இருப்பார்கள். வெளியிற்புறப்படும்போது அந்த மல்வஸ்திரத்தை யெடுத்து மூலைக்கச்சை கட்டிக்கொண்டு, சவுக்கத்தைமேலே போட்டுக்கொண்டு, நெற்றியில் கீறுசந்தணம், அட்சதைப்பொட்டு அல்லது சாந்துப்பொட்டு வைத்துக்கொண்டு, காலிலொரு பழைய ஜோடு

தரித்து, கையில் சிறுபிரம்பு பிடித்துக்கொண்டு வெகு ஓயிலாகப் புறப்படுவார்கள். பிறகு வீடுவந்ததும் அந்த வஸ்திரங்களை யெடுத்து மடிப்பு நலுங்காமல் ஒரு கொடியிலே போட்டு, அதன்மேல் மற்றொரு பழைய வஸ்திரமிட்டு மூடி நன்றாய்க் கட்டிவைத்துவிட்டு, முன்னுடுத்தியிருந்த பழைய வஸ்திர முடுத்திக்கொள்வார்கள். வருஷத்துக்கிரண்டுமுறை வண்ணானுக்குப் போட்டு வெளுத்துவைத்துக் கொள்வார்கள். இதுதவிர வேறொன்றும் வீட்டிலிராது. பெண்களு மிவ்விதமாகத் தான் நடப்பார்கள். தட்டப்படாத விருந்து வந்தால் வெகு கஷ்டத்தோடு அன்ன மிடுவார்கள். அரைவயிற்றுக்குப் போடுவதுகூடக் கஷ்டம். மற்ற சிநேகிதர்களாவது பந்துஜனங்களாவது வந்தால் தந்திரமாய் நழுவிவிடுவார்கள். பெரும்பாலார்க்கு இந்தக் குணமே மிகுதி. அவர்கள்மேல் தோஷமில்லை. தரித்திரமும் அந்தத் தரித்திரத்தைப் பிறருணரக் கூடாது என்கிற டம்பாங்காரமும் காரணமாம். நித்திய தரித்திரர்களாய்த் தாங்கள் கஷ்டப்படுகிறபொழுது தங்களை மஹாப்பிரபுக்களென்று பிறர் எண்ணும்படியாக நடக்கமுயல்வது அவமானத்தை யுண்டாக்குமென்று அவர்கள் கருதுவதேயில்லை. தாம் மஹாப்பிரபுக்களென்றும், திரண்ட ஆஸ்தி தங்களுக்கு உண்டென்றும் வெகு பெருமையாகப் பேசிக்கொள்வார்கள். அவர்கள் தன்மை யறியாதவர்கள் சிறிதுநம்புவார்கள். அறிந்துள்ளவர்களோ புன்சிரிப்புக்கொண்டு இருந்து அப்புறம் பரிகசித்துப் போவார்கள். இதுவுமொரு கலிகால விநோதந்தான். இது நிற்க, இக்குணத்துக்கு மாறான குணமுடையவர்கள் சிலரே. இரத்தினமையர் இந்த வகுப்பில் சேர்ந்தவர். இவர் வக்கீலாயிருந்தபோது வரும்படி மிகுதியா யிருந்தபடியால் தாராளமாய்ச் செலவுசெய்து சிறப்பாய் வாழ்ந்தார். அவருக்குத் தஞ்சாவூர், திருவையாறு,

கும்பகோணம், திருவிடைமருதூர், மாயூரம் முதலியவிடங்களில் பந்துக்களும் சிநேகிதரு மிருந்தார்கள். அவர்களுடைய தன்மை யுணராதவராதலாலும், ஒருவர் வீட்டுக்குப் போய் அறியாதவராதலாலும், அவர்கள் பேசிக்கொள்கிற பெருமைகளெல்லாம் உண்மையாகவே யிருக்குமென்று கருதியிருந்தாரே யொழிய வீண்டம்பமென்று அவ றுணர்ந்தவ ரல்ல. ஏனென்றால் அவருக்கு டம்பமுதலிய குணங்களே கிடையாது. ஆகையால் களங்கமற்ற அவர் மனதிலே அவர்கள் பேச்சில் சந்தேகந் தோன்றவில்லை. ஆதலால் அவ்விடங்களிலிருந்த பந்துக்களும் சிநேகிதர்களும் இந்தச் சமயம் உதவிபுரிவாரென்று கருதி மெல்லெனநடந்து திருவையாறு போய்ச் சேர்ந்தார். ஐயரவர்கள் செல்வச்சிறப்பாய் வாழ்ந்த போது அடிக்கடி தன் வீட்டுக்கு வந்து விருந்து முதலிய சாப்பிட்டு மகிழ்ந்திருந்த துரையப்பன் என்ற ஒரு பிராமணன் திருவையாற்றி லிருக்கிறானென்று அவருக்குத் தெரியும். அவனை பெரிய பிரபு என்று ஐயர் கருதியிருந்தார். துரையப்பன் என்பவர் திருவையாற்றில் வசிக்கும் ஓர் அஷ்டஸஹஸ்ர பிராமண வர்க்கத்தில் சேர்ந்தவர். அவருக்கவ்வூரிலொரு வீடுமாத்திரம் உண்டு. வேறு ஸ்திதி ஒன்றுமில்லை. பொருள் வரவுக்கு யாதொரு மார்க்கமுமில்லை. தாயார், மனைவி, தம்பிகள், தமையன் மனைவியாகிய ஒரு விதவை ஆக எட்டுப்பேர் ஜனங்களுண்டு. இது அவருடைய சக்திக்கு மேற்பட்ட ஒரு பெரிய குடும்பம். ஆதலால் துரையப்பன் பெரிய மனிதர்கள் வீடுகளுக்குப்போய் அவர்களிட்ட வேலைகளைச் செய்தும், அவர்களிச்சைப்படி நடந்து அவர்களுடைய தயவு சம்பாதித்தும், அவர்களா லளிக்கப்படும் சிறிய பொருளை வீட்டுக்குக் கொடுத்துவிட்டுத் தான் வீடுவீடாய் நுழைந்து புசிப்பதும், ஊரூராய்ப்போய் அங்கங்குள்ள தர்ம

சத்திரங்களில் புசித்து வயிறு வளர்ப்பதுமாய்க் காலங்கழிப் பவன். திருவையாற்றுக்கும் சிதம்பரத்துக்கும் இடையில் அநேக அன்னசத்திரங்களுண்டு. துரையப்பன் ஒரு தரம் சிதம்பரம்போய் மீண்டு ஊர்வந்து சேர ஐந்து ஆறு மாசங் கள் செல்லும். அவர் அடிக்கடி சீர்காழிக்கு வந்து ஐயரவர் கள் வீட்டில் சிலநாள் தங்கிப் பின் சிதம்பரம் போய் மீளு வார்; அப்பொழுது ஐயரவர்களிடத்தில் தாம் திருவையாற்றி லொரு பெரிய பிரபுவென்றும், சிவதரிசனத்துக்காக அடிக் கடி சிதம்பரம்போய் வருவதாகவும் மிகப் பெருமையாகப் பேசியிருந்தார். அதை வாஸ்தவமென்று நம்பி இரத்தின மையர் திருவையாற்றின் காவேறிப்பாலந்தாண்டி ஓடத்தெரு வழியாக நகரத்துக்குள் போகும்போது எதிரில் துரையப் பன் வருகிறதைக்கண்டு அவனை நோக்கிச் சிரித்த முகத் தோடு சென்றார். அவனோ ஐயரைச் சற்றுத் தூரத்தில் பார்த்தவுடன் எமனைக் கண்டது போல நடுங்கி இப்பொ ழுது யாது செய்யலாமென்று யோசித்தான்; எங்கே யாவது ஓடிப் பதுங்கி மறைந்து கொள்ள உத்தேசித்தான். அதற் குள் ஐயர் கிட்டவந்து விட்டபடியால் அது முடியாமற் போ யிற்று. ஆகையால் மனமகிழ்ச்சியில்லாமல் வெளிக்கு மிகச் சந்தோஷமுள்ளவன்போல அபிநயித்து அவரைப் பார்த்து, "வாருங்கள் வாருங்கள்; ஏது இத்தனை தூரம் தயவு செய் தது," என்று சொல்லிக்கொண்டே, என்ன யுக்தி செய்து தப்பலாமென்று எண்ணமிட்டுக்கொண் டிருந்தான். ஐயரவர் கள் தாம் வந்த காரியத்தை ஒருபோக்காகச் சொல்லிக்கொண் டிருக்கையில் யாரோ ஒருவன் சவுடாலாக உடுத்திக்கொண்டு காலிற்சோடு போட்டுக்கொண்டு, கையிலொரு தடி பிடித்துக் கொண்டு அந்தவழியாக வெகுவேகமாய் நடந்துபோகிற வன், "துரையப்பா! ஏன் இங்கு நிற்கிறாய்? வாயேன்," என்

ருன். துரையப்பன் இது தான் சமையமென்று கண்டு இதோ வந்துவிட்டேன் என்று சொல்லி, ஐயரவர்களைப் பார்த்து, "இப்பொழுது அதிக அவசரமான காரியமொன்று இருக்கிறது. நிலசம்பந்தமாக அரண்மனையாரோடு ஒரு வழக்கு நேர்ந்திருக்கின்றது. அது நிமித்தம் அரண்மனைப் பிரபுக்களைக் கண்டுபேசப் போகிறேன். வெகு சீக்கிரம் வந்து விடுகிறேன். தாங்கள் தயவுசெய்து வடக்குவீதியிலுள்ள என் வீடுபோய்ச் சேருங்கள்; நான் வர நேரமானாலும் வேறெங்கேயாவது போய்விடாமல் அங்கேயே யிருங்கள்," என்று சொல்லிவிட்டு, வந்த மனிதனோடு சேர்ந்து போய் விட்டான். ஐயரவர்கள் இவன் வீட்டை யெங்கே தேடு கிறது; தேடிப் பிடித்துக்கொண்டு போனாலும், அவ்வீட்டா ரிடத்தில் என்னென்று பேசுகிறது! முன் ஒருபோதும்பார்த் திராத பெண்களிடத்தில் எப்படிப் பேசுவோமென்று யோசித் துக்கொண்டு, அப்புறம் போய்ப் பூசமண்டபத்துறையை அடைந்து ஸ்நானஞ் செய்து வஸ்திரங்களைத் தோய்த்து உலர்த்தியுடுத்துக்கொண்டு ஜபதபங்களை முடித்துக்கொண்டு, பஞ்சநதீசர் ஆலயத்தை நோக்கி மெல்லென நடந்து போனார். அப்பொழுது மணி பன்னிரண்டாயிற்று. அந்த வீதியில் ஒரு அன்ன சத்திர முண்டு; அதில் பத்துப் பன்னிரண்டு பிராமணர்களுக்கு அன்னம் போடுவது வழக்கம். அவ்வீட் டுத் திண்ணையில் ஐயரவருடைய பந்துக்களில் ஒரு மனிதன் சத்திரச் சாப்பாட்டுக்காக வந்து உட்கார்ந்துகொண் டிருந் தான். ஐயர் அசதியில் அவனைப் பார்த்துச் சற்று சந்தோ ஷித்தார். இராமசுப்பு என்ற அந்த பிராமணன் ஐயரவர் கள் மனைவி வழியிலேதோ எட்டின பந்து. அவன் பலதரம் சீர்காழியில் ஐயரவர்கள் வீட்டுக்கு வந்து விருந்து புசித்துக் களிப்படைந்தவன். அவன் ஐயரைச் சடுதியில் கண்டு திடுக்

கிட்டுத் தான் சத்திரத்தில் சோற்றுக்குக் காத்துக்கொண் டிருக்கும் இரகசியம் ஐயரவர்களுக்குத் தெரியா திருக்கக் கருதி, திண்ணையைவிட்டு குதித்து ஐயரிடம் வந்து முகமலர்ந்து வாருங்கோ வாருங்கோ என்று பேசிக்கொண்டு வேறொரு வீட்டுத் திண்ணையில் போயுட்கார்ந்துகொண்டு க்ஷேமம் விசாரித்துக்கொண் டிருந்தான். அவனோடுகூடச் சத்திரத்தில் புசிக்க வந்திருந்த மற்றொரு பிராமணனும் கூடவந்து உட்கார்ந்திருந்தான். இராமசுப்பு தன் சினேகிதனைப் பார்த்து, "சீர்காழியிலொரு பெரிய பிரபு இருக்கிறாரென்றும், அவர் குணசீலரென்றும், எனக்குப் பந்துவென்றும் பலதரம் சொல்லியிருக்கிறே னல்லவா! அந்தப் பிரபு இவர்கள் தான்," என்று சொல்லிக் கண்ஜாடை காட்டினான். ஜாடையறிந்த சினேகன், "சந்தோஷம் அவர்களை நான் பார்க்கநேரிட்டது என் பாக்கியந்தான். நாழிகையாய் விட்டதே; ஐயாவர்கள் பட்டினியா யிருக்கிறாப்போ லிருக்கிறதே; போஜனத்துக்கு ஏற்பாடு செய்யாமல் சும்மா இருக்கிறாயே? எழுந்திரு," என்றான். அவனும் அதற்குத்தான் யோசிக்கிறேனென்றான். சினேகன் சற்றுயோசித்து, "ஓகோ! உன்சம்சாரம் வீட்டுக்காகாதுபோலிருக்கிறதே! உன்தாயாரும் நேற்று ஊருக்குப் போய்விட்டாளே! என்ன செய்கிறது! ஏதாவது ஏற்பாடு செய்வோம்வா," என்றான். அது கேட்ட ஐயரவர்கள் வெட்கப்பட்டு, "இல்லை; நான் போஜனம்செய்தாய் விட்டது," என்றார். என்றவுடன் இராமசுப்பு, "அப்படி நினைத்துத்தான் யோசித்தேன். ஆனால் சரி; இதுவும் நம்ம வீடுதான். இங்கேயிருங்கள்; இதோ வருகிறேன்," என்று எழுந்து போய்ச் சத்திரத்துக்குட் சாப்பாட்டு வேலையில் புகுந்து மண்டிக்கொண்டிருந்தான். ஐயர் பசியால்மெத்த வருந்திப் பஞ்சநதீசரர் கோவிலுட்புகுந்து பசிக்களையால் மெலிந்து

ஒரு தனியிடத்தில் படுத்து அயர்ந்து தூங்கிவிட்டார். எழுந்திருந்து பார்க்கும்போது மணி மூன்ருயிற்று. ஏற்கெனவே வியாதியால் மெலிந்தவர்க்குப் பசிக்களையும் மேலிட்டால் என் செய்வார் பாவம்; மெத்த வருந்திக் களைத்து என்னசெய்வதென்று தெரியாமல் மயங்கினர். கீழ்தேசத்துப் பந்துக்கள், சிநேகர்களுடைய தன்மையை நினைத்து நினைத்து மனங்கசந்து, இப்படியு மிருப்பார்களா! என்று பல பல எண்ணமிட்டுப் புரண்டுகொண்டிருக்கையில் தமது இடுப்பிலிருந்த விபூதி சம்புடம் சத்தப்பட்டது கேட்டு, உடனே யதை யெடுத்துத் திறந்து பார்க்க அதில் கால்ரூபா யிருக்கக்கண்டு மகிழ்ந்து, அரை அணவுக்கு வாழைப்பழம் வாங்கிப் புசித்துவிட்டுப் பசி தணித்துக் கொண்டார். இனி ஒருவர் வீட்டுக்குப் போவதில்லை: இரவு சுவாமி தரிசனஞ் செய்து காலையிலெழுந்திருந்து கும்பகோணம் போய்ச் சேர்வோமென்று தீர்மானித்துக்கொண்டார். அப்படியே மறுநாள் அதிகாலையில் எழுந்திருந்து கும்பகோணம் நோக்கி மெதுவாக நடந்தார். நடக்கமுடியாமையால் மத்தியான்னம் ஒன்றரைமணிக்குக் கபிஸ்தலம் போனர். அங்கே காவேரிக்கரையி லிருக்கும் மூப்பனர் சத்திரத்தில் வெயிலுக்காகச் சற்று ஒதுங்கினர். கோவிந்தனென்ருெரு பிராமணப்பிள்ளை மூப்பனர் பண்ணையில் வேலைபார்த்து வந்தான். அவன் மழநாட்டாரைச் சேர்ந்தவன். மழநாட்டாருக்கு வஞ்சனைகள் கிடையாது. ஈவு இரக்க முள்ளவர்கள். பிறர் பசித்திருக்கத் தாமுண்ண மாட்டார்கள். அந்நியரைக் கண்டால் வெகு விசுவாசமாய் உபசரிப்பார்கள். இது ஜாதியாரின் இயற்கைக் குணம். நிற்க, அந்தக் கோவிந்தன் பண்ணைவேலை பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிப் போகிருன். கையில் இரண்டு வாழையிலைகளையும் ஒரு சிறிய கத்தியையும் பிடித்துக்கொண்டு வந்த

வன், ஐயரைக்கண்டு சற்று யோசித்துச் “ சுவாமீ! தாங்கள் எவ்விடமிருந்து வந்தீர்கள்? நான் தங்களை யெங்கேயோ பார்த்திருக்கிறேன். அது நிற்கட்டும்; ஸ்நானமாய்விட்டதா? போஜனத்துக்கு வாருங்கள்; அப்புறம் மற்றதை பேசிக்கொள்வோம்” என்று வருந்தி யழைத்துக்கொண்டு வீடுபோய் உபசரித்துப் போஜனஞ் செய்வித்தான். பிறகு இருவரும் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் ஐயரவர்களை யின்னாரென்று நன்றாய்த் தெரிந்துகொண்டு, “ சுவாமி! நான் ஒரு முறை சிதம்பரம் போனேன்; அப்பொழுது சீர்காழிவந்து தமது கிருகத்தில் போஜனஞ் செய்தேன். அதிக நாளாய் விட்டபடியால் ஞாபகமில்லாமற் போய்விட்டது; என்னை மன்னித்தருள வேண்டும்,” என்று வணக்கமாய்ச் சொன்னான். இவனது மரியாதைகளையும் இனிய மொழிகளையுங்கண்டு, “நமது பந்துக்களும் சிநேகர்களும் செய்த செய்கை யென்ன! ஏதோ ஒருநாள் கண்ட இவ்வாலிபனது செயலென்ன! இவ்விரண்டு செயல்களுக்கும் எவ்வளவு பேதமிருக்கின்றது. “உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றெண்ணவேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா, மாமலையினுள்ள மருந்தே பிணி தீர்க்கும், அம்மருந்து போல் வாருமுண்டு,” என்ற மூதுரை வாக்யத்தின் பயனை யிப்பொழுது கண்டறிந்தோம்” என்று நினைந்து, பிறகு கோவிந்தனிடத்தில் திருவையாற்றில் தமக்கு நேரிட்ட அவமரியாதைகளைக் கூறி, “ இன்று தினம் நீ செய்த இந்த உதவி எழுபிறப்பிலும் மறக்கத்தக்கதல்ல; நல்ல சமயத்தில் நான் பதிலுபகாரம் செய்வேன். நீ யென்னை யொரு சிநேகனாகக் கருதி அடிக்கடி கடிதமெழுதிக்கொண்டிரு,” என்றார். கோவிந்தன், “நானென்ன செய்துவிட்டேன்; ஆண்டவன் விதித்திருக்கும் விதிப்படி செய்யவேண்

டிய எனது கடமையைச் செய்தேனே யொழிய மற்றென்றுஞ் செய்யவில்லை. இந்தக் கடமைகளைச் செய்யா விட்டால் அவர்கள் மிருகங்களுக்கு ஒப்பாவார்களேயன்றி மனிதர்களாக மேலோரால் கருதப்பட மாட்டார்கள். இந்த வாழ்வை மாத்திரம் கருதி நடப்பது மிருக பட்சிகளின் இயற்கை; இகபரம் இரண்டையுங் கருதி நடப்பது மனித இயற்கை. இது தான் பசு பட்சிகளுக்கும் மனிதருக்குமுள்ள பேதம், பெரும்பாலார் பரலோகத்தைக் கருதுவதேயில்லை. அது நிற்கட்டும். திருவையாற்றில் தமக்கு அவமானம் நேர்ந்ததாகக் கருதி வருந்தவேண்டாம்; இந்தச் சீமையிலுள்ளவர்கள் அப்படித்தான் நடப்பார்கள். அதற்குக் காரணம் அவர்கள் மிக ஏழைகளா யிருப்பதே. தாங்கள் ஏழையாக இருக்கிறோ மென்பதைப் பிறரறியாதபடி பணக்காரர்களைப்போலப் பாசாங்குசெய்துகொண்டு திரிவார்கள். அந்த வகுப்புத் தனவான்கள்கூட அநேகம்பேர் பரோபகாரத்தைக் கருதமாட்டார்கள்; நாமொன்று சொல்லுகிறேன் கேளுங்கள்.

நான் சிதம்பரம் வந்து ஊருக்குத் திரும்புகையில் மாயூரத்தில் தங்கினேன். அன்று தினம் அந்த ஊரிலுள்ள ஒரு பிரபு வீட்டில் விவாகம் நடந்தது. விவாகத்தினன்று வந்தவர்களுக்கெல்லாம் அன்ன மிடுவது நமது தேசத்தவருக்கு வழக்கமல்லவா? அதை நினைத்து இன்று இந்தப் பிரபுவின் வீட்டில் போஜனம் செய்து போவோமென்று வீட்டுக்குள் நுழைந்தேன். அது திருமங்கல்யதாரண சமையமாதலால் என்னை யொருவருங் கவனிப்பாரில்லை. விவாகம் முடிந்த பிறகு போஜனத்துக்கு இலைபோட்டார்கள்; நான் வாசற்படிக்குச் சமீபத்தில் போட்டிருந்த ஒரு இலையில் உட்கார்ந்துகொண்டேன். வாசல் வாசற்படிக்கிட்ட ஒரு பலமான

மனிதன் நின்றுகொண்டு குறிப்பிட்ட சிலரை மாத்திரம் உள்ளே வரவிட்டு, மற்றவர்களை யெல்லாம் வாசலிலேயே நிறுத்திவிட்டுக் கதவைப் படீரென்று சாத்திக் கொண்டு வந்து விட்டான். பிரபுக்கள் வீட்டுக் கல்யாணத்தில் இப் படியும் நடப்பதுண்டா வென்று நான் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தேன். அன்னம் பரிமாறி ஆபோஜனம் போடு கிற சமையத்தில் என் பந்திக்கோடியில் ஒரு கிழபிராமணன் உட்கார்ந்துகொண் டிருந்தான். ஆபோஜனம் போடுகிறவன் அவனைப் பார்த்து, "உன்னையார் உள்ளே விட்டார்? நீ எப்படி உள்ளே வந்தாய்?" என்று சொல்லிக்கொண்டே அவன் கை யைப் பிடித்து இழுத்து, முதுகில் ஒரு குத்துக்குத்தி கழுத் தில் கையைக் கொடுத்து நெட்டித் தள்ளினான். அதற்குள் மற்றொருவன் வந்து கீழே விழுந்து கிடக்கும் கிழவன் கை யைப்பிடித்துச் செத்த பிணத்தை இழுப்பதுபோலக் கரகர வென்று இழுத்துக்கொண்டு வந்து வாசல் கதவைத்திறந்து வாசற்படியிற் போட்டு வாயில் வந்தபடி திட்டினான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த நான் நமக்கு இந்தக்கதி தான் வரு மென்று எண்ணிக்கொண்டு தந்திரமா யெழுந்து வெளியே வந்து விட்டேன். பசியோ தாங்கமுடியவில்லை; சோற்றுக் கடை யிருக்குமிட மெனக்குத் தெரியாது. அது எங்கே யிருக்கிறதென்று விசாரித்துக்கொண்டே வீதியில் போகும் போது என்னுடைய சினேகனொருவன் வந்து என் க்ஷேமம் விசாரித்து, "நான் இருக்கும்போது நீ சோற்றுக்கடைக்குப் போகலாமா? என் வீட்டுக்கு வா," என்று அழைத்துகொண்டு போய், என்னைத் திண்ணையில் உட்காரவைத்து விட்டுத் தான்மட்டு முள்ளேபோய்த் தன் மனைவியோடு சற்று நேரம் பேசிவிட்டு, மகாகோபம் வந்து விட்டதுபோல் அவளை வாயில் வந்தபடி திட்டி, நாலடி அடித்துவிட்டு வெளியே

வந்து என்னோடு திண்ணையின்மேல் உட்கார்ந்துகொண்டு மௌனமா யிருந்தான். கொஞ்சநேரம் நான் சும்மாயிருந்து பின்பு அவனைப் பார்த்துச் சாயந்திரம் வந்து பார்க்கிறேன் என்று சொல்லிப் புறப்பட்டுப்போய் ஒரு சோற்றுக்காரி வீட்டில் அரைவயிறு சாப்பிட்டு அப்புறம் ஊர்சுற்றிப் பார்க்கப்போனேன். முன் சொன்ன விவாக வீட்டின் வழியே போகும்போது என் சிநேகன் அந்த வீட்டில் சாப்பிடுவதற் காகக் காத்துக்கொண் டிருப்பதை பார்த்தேன். இது என்ன வாகிறது பார்ப்போமென்று எதிர் வீட்டுத் திண்ணையில் ஒரு பெரிய தூண் மறைவிலுட்கார்ந்தேன். சற்று நேரத்துக்கெல்லாம் கதவைத் திறந்துகொண்டு ஒரு மனிதன் வந்தான். அவன் கதவைத் திறப்பதற்கு முன்னமே வெளியிலிருந்த வர்[illegible] திடீரென்று உள்ளே நுழைந்தார்கள். அந்த மனிதன் அவர்களிற் சிலரை பிடித்துத் தள்ளச் சிலர் உள்ளே போய்விட்டார்கள். அந்த மனிதன் வாசலில் நின்றுக்கொண் டிருப்பவர்களைப் பார்த்து, ‘அறிவுகெட்ட மூடர்களே! உங்களுக்கு வெட்கம் இல்லையா? மானமில்லையா? ரோஷமில்லையா? உங்களை யார் அழைத்தார்கள்? வெட்க மில்லாமல் ஏன் வந்தீர்கள்? திறந்த வீட்டில் நாய் நுழைகிறதுபோல நுழைகின்றீர்கள். எந்த வீட்டில் மேளம் கொட்டுகிறது; எந்த வீட்டில் மந்திரத்தொனிகேட்கிறது என்று பார்த்துக்கொண் டிருந்து அங்கங்கே வயிறு வளர்க்கிறீர்களே. வசவு திட்டுகளை யெல்லாம் ஆசீர்வாத மென்று நினைக்கிறீர்கள்; உங்கள் ஜன்மத்தை நெருப்பிலிட்டுச் சுடவேண்டும். உத்தியோகஞ்செய்து சம்பாதிக்க முடியாவிட்டால் கூலி வேலை செய்தாவது ஜீவிக்கலாகாதா? உங்களுக்கு வெள்ளைவேஷ்டியேன்? சாந்துப் பொட்டென்ன கேடு; இப்படி வயிறு வளர்ப்பதைவிடப் பிராணனை விடுவது மேலாகு மென்று பலபடியாகத்

திட்டி ஓடிப்போங்கள்; இங்கே நில்லாதீர்கள்,' என்று கடிந்து சொன்னான். அப்படியும் அவர்கள் கேளாமல் அவனைக் கெஞ்சாதெல்லாம் கெஞ்ச அவன் இரண்டொருவரை உள்ளே விட்டு மற்றவர்களைத் துரத்திவிட்டான். துரத்தப்பட்டவர்களில் என் சிநேகனு மொருவன். பிறகு நான் நாட்டுக் கோட்டையார் சத்திரத்தில் போஜனம் வைத்துக்கொண்டு மூன்றுநாள் மாயூரத்திலிருந்து சுவாமி தரிசனஞ்செய்துகொண் டிருந்தேன். அப்பொழுது இவர்கள் இரகசியங்களெல்லாம் தெரியவந்தது. அஷ்டஸஹஸ்ர வகுப்பாரில் பெரும்பாலர் யிப்படித்தா னிருப்பார்கள். நெருங்கினபந்துக்கள் வந்தால்கூட ஏதாவதொரு தந்திரஞ்செய்து துரத்திவிடுவார்கள். ஆதலால் அவர்கள் அவமானஞ் செய்தார்களென்று நினைந்து வருந்தவேண்டாம். அவர்கள் சுபாவம்,'' என்று சொல்லிப் பின்னர் இருவரும் சிறிது பேசிக்கொண்டிருந்தார்கள். கோவிந்தன் வேண்டுகோளால் ஐயரவர்கள் அன்றிரவும் அங்கேயே தங்கினார். மறுநாள் உதயத்தில் எழுந்திருந்ததும் ஐயரவர்கள் பிரயாணப்பட்டார்கள். கோவிந்தனுங் கொஞ்சதூரம்கூடத் தொடர்ந்துபோய்த் தன் கையிலிருந்த ஒரு பத்துரூபா நோட்டை ஐயரவர்களிடத்தில் கொடுத்து, "சுவாமி! இதைத் தட்டாமல் ஏற்றுக்கொள்ளுங்கள்? ஒருக்கால் கும்பகோணத்தில் பணம் கிடைக்காவிட்டால் நடந்துபோகவும், கஷ்டப்படவும் நேரிடும்; தங்களுக்குச் சௌகரியமானபோது திரும்பி அனுப்பிவிடலாம்,'' என்று சொன்னான். அது நல்ல சமையமாதலாலும், அவன் சொல்லுகிறபடி கும்பகோணத்தில் பணம் அகப்படாவிட்டால் கஷ்டப்படவேண்டி வருமென்கிற எண்ணத்தினாலும் அதை வாங்கிக்கொண்டு, அவனிடம் செலவுபெற்றுப் போய்விட்டார்கள். போகும்போது தாம் ஊரில் நின்று புறப்

பட்டதுமுதல் இதுவரைக்கும் நடந்தவைகளை நினைத்து மகிழ்ந்தும் வருந்தியும் நடந்தார். கோவிந்தனுடைய நல்ல நடக்கைகளையும் குணங்களையும் பரோபகார சிந்தையும் நினைத்து மகிழ்ந்து புகழ்ந்து, அவனுக்கு மேலான உபகாரம் செய்ய வேண்டுமென்று நினைத்துக்கொண்டே போய் கும்பகோணம் சேர்ந்தார். தமது மச்சினி நாகம்மாள் புருஷன் இராமசாமி ஐயன் எதிர்ப்பட்டுத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான். வீட்டுக்குப் போனவுடன் ஐயரவர்களுக்குக் காப்பியும், ரவை உப்புமாவும் கொண்டுவந்து வைத்தார்கள். சரியாய் ஒரு அவுன்ஸ் காப்பியும், ஒரு தோலா உப்புமாவும் இருக்கும். உப்புமா இலையிலும் கையிலும் ஒட்டிக்கொண்டது போக ஐயரவர்கள் வாயில் விழுந்தது ஒரு கழற்சிக்காயளவிருக்கும். கீழே சிந்தியதுபோக அரை அவுன்ஸ் வயிற்றிற் சென்றிருக்கும். வாயாற்செய்யும் உபசாரத்துக்குமட்டும் குறைவில்லை. இராமசாமி ஐயரும், ஐயரும் காவேரிக்குப் போய் ஸ்நானம்பண்ணிவிட்டு வந்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு, தேவபூஜை செய்து விட்டுப் பனிரண்டுமணிக்குப் பகற் போஜனத்துக்கு உட்கார்ந்தார்கள். இரண்டுமுழ நீளமும் ஒருமுழ அகலமுள்ள தலைவாழை யிலை போட்டிருந்தது. இராமசாமி ஐயருடைய தமக்கை சுப்பம்மாள் பரிமாறவந்தாள். இலையில் இரண்டு சிறிய துண்டு வாழைக்காய் கறியும், கழற்சிக்காய் அளவு கத்தரிக்காய்ப் பொரிச்சக் கூட்டும், ஒரு காசு எடை தயிர்ப் பச்சடியும், சுண்டைக்காயளவு பருப்பு மிடப்பட்டிருந்தன. ஒரு சுப்பல் தட்டில் இரண்டுகொண்டி சாதங் கொண்டுவந்து இருவர் இலையிலும் வைத்தாள். ஒரு பொட்டு நெய் ஊற்றினாள். இலையிற் பரிமாறியவை யெல்லாம் ஐயரவர்களுக்கு ஒரு வாயிக்குப் பற்ருது. என்செய்வார்! பசியோ அதிகம். இராமசாமி ஐயர் ஒரு சுண்டைக்

காய் சாதத்தை வாயில் போட்டுக்கொண்டும், பொரிச்சக் கூட்டை கையால் தொட்டு வாயில்வைத்துச் சப்புக்கொட்டிக் கொண்டும் காலம்போக்கிக்கொண்டிருந்தார். ஐயரும் அவரைப்போல அவ்வாறே காலம்போக்கிக்கொண்டு இருந்தாலும் வயிற்றுப்பசி அடங்கவில்லை. இலையிலெல்லாம் ஆய்விட்டது; அப்பொழுது சுப்பம்மாள் வந்து சுப்பலில் கொஞ்சம் சாதம் கொண்டுவந்து கொஞ்சம் இலையிற்போட்டு இன்னம் போடவா போடவா வென்று கேட்டு நின்ருள். ஐயர் போடு என்பதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு வேண்டாம் என்று சொன்னதும், அந்தம்மாள் மிகுந்த சோற்றைத் தன் தம்பி இலையிற் போட்டுப் போய்விட்டாள். இப்படியாக ஐயர் அவர்கள் வயிற்றுப்பசி அடங்காமல் ஒவ்வொரு பருக்கையாகப் பொறுக்கித் தின்றுகொண்டிருக்கையில், இராமசாமி ஐயர் தமக்கையைக் கூப்பிட்டு, "ஐயரவர்கள் இலையைப் பார்த்துப் பரிமாறு; நான்தான் கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் என்னைப் போலவே யெல்லாரு மிருப்பார்களா?" என்ருர். சுப்பலட்சுமி, "முதலில் வைத்த காய்கறிகளும் சாதமும் அப்படியே யிருக்கே; நீ தான் கொஞ்சமாய்ச் சாப்பிடுகிருயென்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஐயரவர்கள் உன்னைவிட அதிகக் கொஞ்சமாய்ச் சாப்பிடுகிருர்," என்று சொல்லிக்கொண்டு ஒரு கரண்டி சாதத்தைக்கொண்டுவந்து போட்டு மோர் குத்திவிட்டு போனுள். இப்படியாக ஐயரவர்கள் கால் வயிறுகூட நிரம்பாமல் எழுந்திருந்து கைகால் சுத்தி செய்து கொண்டு திண்ணையில் உட்கார்ந்து தாம்பூலந் தரித்துக் கொண்டு பல பல பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஐயரவர்கள் பசி பொறுக்கமாட்டாமல் பேசிக்கொண்டிருந்து நாலுமணியானதும், "இரவு இரயிலில் ஊருக்கு அவசியம் போகவேண்டும், இப்பொழுது கடைத்தெருவுக்குப்போய்

வருகிறேன்,'' என்று உத்தரவு பெற்றுக்கொள்ள, இராம சாமி ஐயர், "இரவு பத்தரைமணிக்குத்தான் ரயில்வரும்; ஆகையால் இரவு இங்கேயே போஜனஞ்செய்துவிட்டு ஒன் பதுமணிக்கு மேல் போகலாம்,'' என்று கட்டாயப்படுத்தி னார். அது தட்டமாட்டாமல் சரியென்று ஒப்புக்கொண்டு, வெளியிலே போய் வருகிறே னென்று விடை பெற்றுக் கொண்டுபோய் ஊரையெல்லாஞ் சுற்றிபார்த்துவிட்டு காப்பி ஹோட்டலிலே புகுந்து பசியாற நிரம்பச் சிற்றுண்டிகளும் காப்பியும் உண்டு சாயங்காலம் ஆறுமணியானதும் வீடு வந்து சேர்ந்தார். எட்டுமணியானதும் போஜனத்துக்கு உட்கார்ந்து மத்தியானம் போலவே கால் வயிறுகூட நிரம்பாமல் புசித்துக் கைகால் சுத்திசெய்து தாம்பூலந்தரித்து இராமசாமி ஐயரிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு, புறப்பட்டு ரயில்வே ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார். சீர்காழிக்கு டிக்கெட்டு வாங்கிக்கொண்டு பிளாட்பாரம்போய் நின்றார். ரயில் வண்டிவந்தது. எல்லா வண்டிகளிலும் ஜனங்கள் நிறைந்திருந்தபடியால் ஐயரவர்கள் வண்டி கிடையாமல் அங்குமிங்கும் ஓடியலைந்துகொண்டிருந் தார். அப்பொழுது பாலசுந்தரத்தின் பண்ணை அதிகாரி சுந்தரமையன் அவரைக் கண்டு தன் வண்டியிலேற்றிக்கொண் டான். அவன் ஐயரவர்களைப் பார்த்து ஏது இவ்வளவு தூரம் வந்தது என்று கேட்கப் பொய் கூற வறியாத ஐயரவர்கள் தமக்கு நேரிட்டவற்றை யெல்லாம் முறையாகக் கூறித் தாம் வக்கீல் விஷயமாகத் தஞ்சாவூர்க்கு வந்து திரும்பிப் போவ தாகவுஞ் சொன்னார். சுந்தரமையன் கேட்டுக்கொண்டே வந்தான். மாயூரம் வந்ததும் தான் இங்கே யிறங்கவேண்டு மென்றும், எல்லாம் ஜகதீசன் எண்ணம்போல நடக்குமென் றும், அதற்காகக் கவலைப்படவேண்டாமென்றும் சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டான். ஐயரவர்கள்

சீர்காழியிலிறங்கி வீடு போய்ச் சேர்ந்து எல்லாச் சமாசாரங் களையும் மனைவிக்கும் ஞானம்பாளுக்கும் சொன்னார். அவர் கள் கேட்டு மனம் வருந்தி ஈசன் செயலென்று கூறி மௌனமா யிருந்தார்கள்.

ஐயரவர்களுக்கு வேலையுமில்லாமல் வரும்படியு மில்லா மல், கையில் ஒரு காசுமில்லாமல் வருந்துகிற நல்ல சமையத் தில் கடன்காரர்கள் அடிக்கடி வந்து தொந்தரவு படுத்தினார் கள். ஐயரவர்கள் சீர்காழியில் தமக்கிருந்த இரண்டு மூன்று வீடுகளையும் ஒற்றிவைத்து ஐயாயிர ரூபா வாங்கிக் கடன் அடைத்துவிட்டுக் கஷ்டப்படுகையில் ஞானம்பாளிட மிருந்த ஐந்நூறும் மிக்க உபகாரஞ் செய்தது. பிறகு நகைகளை ஒன்றின்பின் ஒன்றாக அடகுவைத்தும் விற்றும் காலக்ஷேபம் பண்ணி வந்தார்கள். சிலநாள் ஞானம்பாளுக்கு மாத்திரம் ஆகாரமளித்துவிட்டு தந்தையும் தாயும் பட்டினியிருக்க நேரிட்டது. இதை யறிந்த ஞானம்பாளுக்கு உண்டான வருத்தம் சொல்லுந்தரமில்லை. தன் தகப்பனுக்கு நேரிட்ட ஆபத்துக்களையும், கஷ்டங்களையும் நினைந்து நினைந்து வருந்தி உத்தியோகஸ்தர்களின் பெருமை இவ்வளவு தானென்று அதை வெறுத்து ஒதுக்கினாள். இந்தச் சமையத்தில் தன் நாயகன் கூறிய புத்திகளெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவர் உத்தியோகம் நிலையற்றதென்றும், தன் தொழிலுக்கு ஒருநாளுங் குறைவு வராதென்றும், அதை அலட்சியம் செய் வது தகாதென்றுங் கூறிய வார்த்தை சத்தியவேதமே யென் றுங் கூறிக்கொண்டாள். தான் நாயகனை அலட்சியம் பண்ணா மல் கூடி வாழ்ந்திருந்தால் சுகமாய் வாழ்ந்திருக்கலாமே யென் றும், தன் மாதா பிதாக்களுக்கும் சிறிது உபகாரமுஞ் செய்ய வுந் தகுமே யென்றும் நினைந்து வருந்தினாள். "பால்மரி யம்மாள் பழாப் போவாள்; எங்கிருந்து எனக்குச் சனியனாக

வந்து தோன்றினாள்; அவள் வம்ச நிர்மூலமாகப் போவாள்,'' என்று சபித்தாள். தான் செய்த புத்திகெட்ட செய்கையை நினைத்துத் தன்னைத் தானே நிந்தித்துக்கொண்டாள். இப்பொழுது தானென்ன முழுகிப்போயிற்று; நான் செய்த பெரும்பிழையை மன்னிக்கவேண்டுமென்று கேட்டால் அவர் என்னை அலட்சியம் பண்ணித் தள்ளிவிடுவாரோ? ஒருக்காலும் அப்படிச் செய்யமாட்டார். அவர் நான் செய்த குற்றத்தைக் கவனிக்காமல் மறந்துபோய்விட்டார். அதற்கு மாமாங்கத்தில் அவர் கும்பகோணம் வந்து ஐந்நூறு ரூபா கொடுத்ததும், "புத்திசாலியா யிரு நான் சீக்கிரம் வருகிறேன்'' என்றதும் நம்மை அளவு கடந்து நேசிக்கிறாரென்பதற்குச் சாட்சியல்லவோ? நம்மிடத்தில் வெறுப்பாயிருப்பாரானால் ரூபா ஐந்நூறு கொடுத்ததும் போதாமல் ஐந்நூறு ரூபாய்க்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிக் கொடுப்பாரா? அதிருக்கட்டும். அவர் என்னை வெறுத்தால் இத்தனை நாள் வேறு கல்யாணம் செய்யாமலிருப்பாரா? அவருக்கென்ன குறைச்சல்; அவருக் கொருவரும் பெண் கொடுக்கமாட்டார்களோ! வாயை அசைத்தால் ஆயிரம்பேர் வரதட்சணையோடு கொடுக்கக் காத்திருக்கிறார்களே. நம்பேரில் கொண்ட மெய்யான அன்பினாலல்லவோ இதுவரைக்கும் மறு விவாகம் செய்துகொள்ளாமலிருக்கிறார்; அதுவே நமக்குப் போதுமான சாட்சியாதலால் அதைக் குறித்து நாம் வருந்தவேண்டியதில்லை; நாம் மன்னிப்புக்கேட்டால் கட்டாயம் மன்னித்து நம்மை அங்கீகரியாமல் போகார். "தன் கணவன் குருடனானாலும், மூடவனானாலும், படித்தவனானாலும், படியாதவனானாலும். ஏழையானாலும், பணக்காரனானாலும் அவனை விட்டுப் பிரியாமலிருப்பதே பெண்களுக்குப் பெருமையும் கற்புடைமையுமாம்'' என்று ஸ்மிரிதி வசனம் மிகவும் சத்திய

மானதேயாம். எத்தனை பெண்கள் அயோக்கியனுக்கும், மூடனுக்கும், ஏழைக்கும், நோயாளிக்கும் வாழ்க்கைப்பட்டும் மிக கௌரவமாகவும் பெருமையாகவும் வாழ்கிறார்கள். எவ்வளவு பெருமை பேசிக்கொள்ளுகிறார்கள். யாதொன்றிலுங் குறைவில்லாதவரும், மன்மதனைப்போல வடிவழகும், கரும்புபோன்ற இனிய குணங்களும், மதுர வசனமும், நாயகியினிடத்தில் மெய்யன்புமுள்ள கணவனை நாமடைந்தது பூர்வபுண்ணிய வசமல்லவோ; அப்படிப்பட்ட கணவனை விட்டு நாம் தனியாகச் சிறைபட்டவள்போ லிருக்கவேண்டுவதேன்! இப்பொழுது நானொரு கடித மெழுதினால் என் கணவன் மனமகிழ்ந்து உடனே வந்து அழைத்துக்கொண்டுபோய் விடுவார். இதில் ஐயமேயில்லை,'' என்று உறுதிகொண்டு கடிதமெழுதத் துணிந்தாள். அந்த நினைவு மாறி, ஒருக்கால் ஊராருக்கு கௌரவமாகத் தோன்றும்படியாக இப்படியெல்லாம் நடந்து மனதுக்குள் வருத்தம் வைத்திருப்பாராயின் நமது கடிதம் பயன்படாமற்போமே யென்று துக்கித்தாள். இப்படியாக ஞானம்பாள் மனம் பரிதபித்துக்கொண்டிருந்தது. அவளுக்கு அன்னபானாதிகளிலும் பிரியமொழிந்தது. நித்திரையுமற்றது. தேகம் நாளுக்கு நாள் மெலிந்து நிறங் கறுத்தது. பொன்போலும் ஒளிவிட்ட. சரீரம் சற்று விகாரப்பட்டது. முகத்தில் சதா துக்கக்குறியே விளங்கியது. வியாதிப்பட்டவள்போலானாள். இதைக்குறிப்பாகப் பார்த்துக்கொண்டு தாய்தந்தை யிருவரும் ஏகாந்தமாகக்கூடி நமது குழந்தை திருமேனி நாளுக்கு நாள் மெலிந்துபோகிறது. முகத்தில் பிரகாசமில்லை. வியாதிப்பட்டவள்போ லிருக்கிறாள். ஒருவேளை தன் கணவனைவிட்டுப்பிரிந்திருப்பதே காரணமாயிருந்தாலு மிருக்கலாம். அப்படி யிருந்தால் அவளை அவள் கணவனிடம் அனுப்பிவிடலாம். அந்தக் குழந்தையும்

என் இங்கேயிருந்து நம்மோடு கஷ்டப்பட வேண்டும்? அங்கே போய்ச் சுகமாக வாழட்டும்,'' என்று சொல்லிக்கொண்டு, ஞானம்பாளை அழைத்து, "அம்மா! உனக்கென்ன மன வருத்தம்? எங்களோடு சொன்னால் எவ்வகையிலாவது அதற் கேற்ற வழிதேட மாட்டோமோ? அப்படி யில்லாவிட் டாலும் உன் நாயகன் இருக்கிறானே; உன் சொல்லுக்கு மறுசொல் சொல்வானோ? இப்பொழுது நீ யிருக்கும் நிலை மையை அவன் பார்த்தால் உயிரைவிட்டு விடுவானே? நாங் கள் என்ன செய்வோம். அம்மா! உண்மையைச்சொல்; நீ விரும்பினால் இன்று இரவே உன்னை உன் கணவனிடம் சேர்ப்பித்துவிடுகிறேன்,'' என்று கூறினார். ஞானம்பாள் அதுகேட்டதும் தேம்பித்தேம்பி அழத்தொடங்கினாள். தாய் தந்தையர் சங்கதியின்னதென்று தெரியாமல் பலவாறு சமா தானப்படுத்தவும் அடங்காமல் இரைந்து அழத் தொடங்கி னாள். ஐயரவர்கள் வெகு நேரம் வருந்திக் கேட்டதின்மேல் ருதுசாந்தி தினத்தில் தான் இராஜீநாமா எழுதிக்கொடுத்த சங்கதியைச் சொல்லிக் கோவென்றழுதாள். "பால்மரியம் மாள் என் புத்தியைக் கெடுத்துவிட்டபடியால் அவள் பேச் சைக்கேட்டு இப்படி முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டேன். அதனாலேதான் என் கணவன் இதுவரைக்கும் என்னை அழையாமல் இருக்கிறார்,'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதாள். அதுகேட்ட தாய்தந்தையர் வருந்தி இதற்கென்ன செய்யலாம்; கஷ்டத்துக் கேற்றபடி புத்தியுந் தோன்றுகிறதே யென்று சற்று மௌனமாயிருந்து பின், "ஞானம்பா! நீ அதைக்குறித்து வருந்தவேண்டாம். உன் கணவன் அதை ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை. உன் னைத் தன்னுயிரினும் பெரிய பொருளாகவே கருதியிருக் கிறான் என்பதில் தடையில்லை. நீ புத்தியில்லாமல் செய்து

விட்டா யென்றே நினைத்திருக்கிறான். ஆனாலும் நீ செய்தது மாத்திரம் மன்னிக்கக்கூடாத பெரிய தப்பு. இந்தச் சங்கதியை நீ சொல்லத் தெரிந்து கொண்டேனே தவிர இது வரைக்கும் நான் அறியேன். உன் கணவனும் இதுவரைக்கும் என்னிடஞ் சொல்லவேயில்லை. அதற்குக் காரணம், உன்னை வெறுக்காமல் இருப்பதுதான். அப்படியல்லாமல் உன்னை வெறுத்திருப்பானானால் அப்பொழுதே யென்னிடந் தெரியப்படுத்தி, உன்னைத் தள்ளிவிட்டு வேறு கலியாணஞ் செய்துகொண் டிருப்பான். ஆதலால் அதைக் குறித்து நீ வருத்தப்படவேண்டாம். வேண்டுமானால் கடிதமெழுதி உன் கணவனை யிங்கேவரும்படி செய்கிறேன்," என்றுகூற, அது கேட்ட ஞானம்பாள் சிறிது துக்கமாறி, தான் கணவனை யடைய என்ன உபாயம் பண்ணலாமென்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கவலைமட்டும் மாறவில்லை. கடிதமெழுதுவதும் உசிதமாகாது; எப்படித்தெரிவிக்கிறது என்று மிகவருத்தப்பட்டுக் கடைசியாக ஒரு கடிதமெழுதுவது துணிபென்று நிச்சயித்துக்கொண்டாள். அன்று தினமிரவில் எல்லாரும் படுத்துக்கொண்டபின் ஞானம்பாள் தன்னறையில் உட்கார்ந்துகொண்டு தன் கணவனுக்குக் கடிதமெழுதி முடித்தாள். அது வருமாறு:—

உ

செந்திலாண்டவன் திருவடிதுணை.

என் சித்தம்விட்டகலாததெய்வமாய்த்திகழும், என் பிராணநாதர் திருவடிக்கமலங்களில் அடியேன் தங்களடிமை ஞானம்பாள் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து எழுதிக்கொண்ட விஞ்ஞாபனம்.

நான் இளம்வயதில் உபாத்திச்சி போதனையால் மதிமயங்கிப் பின்வருவது இன்னதென்று யோசியாமல் செய்த பெரும்பிழையைத் திருவுளத்தில் வையாமல் மறந்துவிட்டு, என்னைத் தமது பணிவிடைக்குப் பாத்திரமாக்கிக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன். நான் செய்த

தப்பு என் மனதைப் புண்படுத்துகிறது. நிச்சயமாகவே நான் செய்த மஹா பாதகத்துக்குப் பிராயச்சித்தம் எந்த நூலிலும் விதிக்கப்பட்டிராது. தமது திருவுளமிரங்குவதே அதற்குப் பிராயச்சித்தமாம். எனக்குத் தெய்வமும் குருவும் அன்னை பிதாவும் தேவரீரேயல்லது வேறில்லை. ஆகையால் எந்த முறை பற்றியாவது தேவரீர் ஏழைக்கு இரங்கத்தகும். இதைத்தவிர நாயகி நாயகனுக் கென்ன எழுதவிருக்கிறது! தேவரீர் எனக்குச் சமாதானங்கூறத் தாமதிப்பீராயின், இராஜிநாமா எழுதின கையை நெருப்பிலிட்டுக் கொளுத்தியோ, அல்லது வாளினுல் வெட்டியோ ஒழித்துவிட்டுப் பிராணனையு மாய்த்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். என் தப்பிதத்தை நினைத்து நினைத்து மனம் துடிக்கின்றது. ஜீவன் மரணவஸ்தைப்படுகின்றது. அன்ன பானுதிகளில் பற்றில்லை. தேகம் நாளுக்குநாள் மெலிகின்றது. வேறு என்ன கூறுவது? தமது திருவடிகமலங்களே கதியென்றிருக்கிறேன். என்னை மன்னிக்க விருப்பமில்லாத பட்சத்தில் என் மரண காலத்திலாவது பக்கத்திலிருந்து தரிசனந்தந்து என் ஜன்மத்தைச் சாபல்யமாக்கிக் காப்பாற்றும்படி தமது பெருங் கருணைக்கு நமஸ்கரித்து வேண்டிக்கொள்ளுகிறேன். எப்படியாவது எனக்கு இரங்கிப் பதில் அருள்புரிவீரென்று கருதி திக்கு நோக்கி நமஸ்கரித்துக்கொண்டிருக்கிறேன்.

1884ஞு ஜூன் மீ 24உ } இப்படி தமது அடியாள்,
ஞானம்பாள்.

என்று கடிதமெழுதி, முத்திரையிட்டுத் தபால் பெட்டியில் போடும்படி தன் வீட்டு வேலைக்காரி கையில் கொடுத்தனுப்பிவிட்டாள். வேலைக்காரியும் கொண்டுபோய்த் தபால் பெட்டியில் போட்டு வந்து விட்டாள். இது ஒருவருக்குந் தெரியாது. ஞானம்பாளோ கடிதத்தை யனுப்பினபின் முன்னிருந்ததைவிட மூன்று மடங்கு அதிக துயரத்தை யடைந்தாள். தான் எழுதின கடிதத்தைப்பற்றிப் பல பல எண்ணம் அவளுக்குத் தோன்றியது. இப்படியிருக்கையில் இரத்தினமையர் பட்டணம் வக்கீல் கல்யாணராமையரைப் பார்த்துத் திட்டஞ்செய்யவேண்டிய அவசியம் நேரிட்டபடியால் பட்

டணம்போக தீர்மானித்தார். முன்சீப்தார், இன்ஸ்பெக்டர் இருவரும் சேர்ந்து நூறு ரூபா கொடுத்தார்கள். ஐயரவர்கள் நகையைவிற்று நூறு ரூபா எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

வயலூரில் நாலு ஏக்கர் நிலத்தைப்பற்றி ஒரு தப்பு மைனர் வியாச்சியந் தொடங்கிற்று. அந்த நிலம் பாலசுந்தரத்துக்குச் சொந்தம். திரிச்சிராப்பள்ளிக் கோர்ட்டில் நடத்தப்பட்டது. பாலசுந்தரத்துக்கு விரோதமாக முடிந்தது. யாதொரு காரணமில்லாமல் நிர்நிமித்தமாய் நாலு ஏக்கர் நிலத்தை விட்டுவிடப் பிரியமில்லை. அதற்கு வேண்டிய ஆதரவுகளையெல்லாம் சேகரித்துக்கொண்டு சென்னைபுரிபோய்ச் சேர்ந்து திருவல்லிக்கேணியில் பிரசித்திபெற்றிருந்த இரங்கநாத ஐயர் ஹோட்டலில் ஜாகை வைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது வக்கீல் கல்யாணராமையர் மிகக் கீர்த்தி பெற்றிருந்தார். அதற்கு ஏற்றாப்போல குணங்களும் நிறைந்திருந்தன. பரோபகாரி; ஏழைகள்மேல் எப்பொழுதும் தயவுள்ளவர். அவருக்குக் கீர்த்தியும் பரோபகாரமும் பெரிதேயொழிய காசு பணம் பெரிதல்ல. யாராவது திக்கற்றவர்கள் வியாஜ்யந் தொடங்கினால் வக்கீல் பீஸ் முதலிய இல்லாமலே வியாஜ்யம் நடத்தி உபகரிப்பார். இவருடைய குமாரன் முத்துராமனும் பாலசுந்தரமும் ஒரு கிளாஸில் படித்தவர்கள். அவனு மிவனும் வெகு சிநேகம். அந்த காலத்தில் கல்யாணராமையர் பல தடவை பாலசுந்தரத்தைப் பார்த்தும் பேசியும் பழகியுமிருக்கிறார். பாலசுந்தரமிடத்தில் உண்மையான விசுவாசமும் பிரியமுமுடையவர். ஆதலால் பாலசுந்தரம் அவரிடம் வந்து வக்காலத்துக் கொடுக்க வந்தான். கல்யாணராமையர் அவனுடைய ஆதாவுகளையும் ஜட்ஜ்மெண்டையும் பார்த்து இது அவசியம் அவன்பட்சமே ஜயமாகுமென்றும், தானே

நடத்தி ஜெயித்துத் தருவதாகவுஞ் சொன்னார். அவரிடத்தில் வக்காலத்துக் கொடுத்து வியாஜ்யத்தை நடத்தச் சொல்லி விட்டுப் பட்டணத்து விசேஷங்களை யெல்லாஞ் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஞானம்பாள் இல்லாமல் தான் மட்டுந் தனித்துப் பட்டணத்துக்கு வந்து அங்குள்ள விநோதங்களைப் பார்க்க அவனுக்குப் பிரியமில்லை. தான் ஊருக்குப் போய் மறுபடி பட்டணம் வரும்போது அவளையுங் கூட அழைத்துக்கொண்டு வந்து பட்டணத்திலுள்ள விநோதங்களை யெல்லாம் பார்க்கவேண்டுமென்று கருதினான். ஆதலால் நாளன்று ரயிலில் ஊருக்குப் போகத் தீர்மானித்தான். அன்று இரவு முழுவதும் ஞானம்பாளை நினைத்துக்கொண்டு மனங்கலங்கினான். அவள் மாமாங்கத்துக்கு வந்திருந்தபோது தன்னைக் கடைக்கண்ணால் பார்த்த பார்வையும் தான் பிரிய நேரிட்டகாலத்தில் அவள் முகம்வாடி நின்றுகொண்டிருந்ததையும் நினைத்து வருத்தப்பட்டான். அவளை அப்பொழுது தானே அழைத்து வந்திருக்கவேண்டும்; இத்தனைநாள் தாமதித்தது நமது சொந்தப்பிழையே தவிர அவள்மேல் குற்றமே யில்லை யென்றும், தான் அப்படிச் செய்யாதது தன்மேல் தப்பு என்றும் எண்ணித் துக்கித்தான். அவள் இராஜிநாமா கொடுத்த அன்று தினத்துங்கூடத் தன்மேல் பிரியமுள்ளவளாகவே யிருந்தாளென்றும், வாத்திச்சி உபதேசத்தால் தான் அவள் புத்திகெட்டுப்போனாளென்றும், அதற்கு அவளுடைய மாதா பிதாக்களே காரணமாதலால் அது ஞானம்பாள் பிழையல்ல வென்றும், கிறிஸ்துவ ஸ்கூல்களுக்குப் பெண்களைப் படிக்க அனுப்புவதனால் இவ்விதப் பயனே விளைகிறதென்றும், இவ் விஷயத்தில் நமது தேசத்தாருக்குப் புத்திக்குறைவுதானென்றும் சிந்தித்தான். எவ்வாறானாலும் அவள் இப்பொழுது மனம் திருந்திவிட்டாள். தான் செய்த குற்றத்தை நினைத்து

அவளே மனம் வருந்துவாள். அந்தக் குற்றத்தையெடுத்துப் பேசினால், புண்ணில் தீப்பட்டதுபோல அவள் மனம் அதிகமாய்ப் பதைக்குமாதலால் நாம் அதை முற்றுமறந்திருப்பதே தகுதியென்றும், ஊருக்குப்போய் சீர்காழியில் இறங்கி அவளையொருதரம் பார்த்துப் போகவேண்டுமென்றும், கூடுமானால் கூட அழைத்துக்கொண்டு போய்விடலாமென்றும் எண்ணிக்கொண்டு நேரம் பொறுத்து நித்திரைபோய்விட்டான். மறுநாட்காலையில் கொஞ்சநேரமதிகமாய்த் தூங்கி ஏழுமணிக்கு விழித்துக்கொண்டு பல்தேய்த்துச் சந்தியாவந்தனம் செய்து, வழக்கப்படி காப்பி குடித்துவிட்டு வெளியிலேபோகப் புறப்பட்டான். அப்பொழுது போஸ்ட் பியூன் வந்து ஒரு தபால் கடிதத்தைக் கொடுத்துவிட்டுப்போனான். அதின்மேல் பல முத்திரைகள் விழுந்திருந்தன. நாலுபக்கங்களிலுந் துண்டுக் கடிதமொட்டித் தன் விலாசங்கள் பலவாக எழுதியிருந்தன. அதைப்பார்த்து இதென்ன விநோத கடிதமென்று பிரித்துப் பார்த்துத் தன்னுடைய செல்வமனைவியின் கையெழுத்தென்று கண்டு முற்றும் படித்துப் பார்த்தான். பார்த்தவுடன் அவனுக் குண்டான துக்கத்துக்கு முடிவில்லை. ஏனென்றால் அன்றுதினம் ஜூலை 24-ம் தேதியாதலால் ஞானம்பாள் கடிதம்போட்டுச் சரியாக மாதம் ஒன்று ஆய்விட்டது. அவள் பிடிவாதமுள்ளவளாதலால் தானெழுதினபடி பதில் பெருமையால் பிராணத்தியாகஞ் செய்து கொண்டாளோ வென்கிற அச்சம் அவனுக் குண்டாயிற்று. தான் செய்யத்தக்க தின்னதென்று அவனுக்குத் தோன்றவில்லை. ஐயையோ! நான் என் அருமை மனைவியை இழந்துவிட நேரிட்டதோ! இது என்னுடைய சொந்தத்தப்பிதமே தவிர வேறில்லை. கும்பகோணத்திலே அவளுடைய மனநிலைமையை அறிந்து கொண்டபோதே, என் அவளை அழைக்காமல் விட்டுவிட்டேன்.

அப்பொழுது கூடவாவென்றால் ஆக்ஷேபனையின்றி வந்திருப்பாளே! நான் இலட்சுமி மூலமாகப் பணங்கொடுத்தபொழுது கடைக்கண்ணாலே யென்னைப் பார்த்துக்கொண்டு, வலக்கையிலே வாங்கிக் கண்ணிலொற்றிக்கொண்டதும், அப்பொழுது அவள் முகம்மலர்ந்திருந்ததும் இப்பொழுது என் மனக்கண்ணை விட்டகலாமல் நிற்கின்றதே! நான் பிரியும்பொழுது அவள் முகம்வாடி என்னையே பார்த்துக்கொண்டு நின்றது. தானுங்கூட வருகிறேன் என்பதைக் குறிப்பித்ததேயன்றி வேறென்ன? இதையறிந்தும் சும்மாவிருந்து, இப்பொழுது வருந்துகிறது என்ன மதியீனம்; அவள் தான் செய்த பிழையை நினைத்து வருந்தியல்லவோ அவ்வாறு நின்றாள்; இல்லாவிட்டால் நமக்கு முன்னாலே பிரயாணப்படமாட்டாளா. நம்முடைய துர் அதிர்ஷ்டம் அப்பொழுது பெருங்கூட்டமாயிருந்தபடியால் அவள் தன் மனக்கருத்தை வெளியிடவில்லை. இப்பொழுது கடிதமெழுதித் தெரிவித்தவள் நேரே சொல்வதிலென்னதடை; இப்பொழுது நானென்ன செய்வேன். காரியமிஞ்சி யிருந்தால் அப்புறம் யாது செய்யக்கூடும்; இரயிலுந் தப்பிப்போய்விட்டதே; இனி இராத்திரி இரயிலில்தானே போகவேண்டும்; போனாலும் பிரயோசனமுண்டா? இனி தெய்வந்தான் காப்பாற்றவேண்டும்; இந்தக் கடிதமெழுத எத்தனை நாள் யோசனை செய்திருப்பாள்! அப்பொழுது அவளுடைய மனம் என்ன பாடுபட்டிருக்கும்; சொல்லுக்கடங்காத வருத்தமுண்டாயிருந்தாலன்றி இவ்வாறு கடிதமெழுதத் துணியமாட்டாள்; அவள் மனந்திருந்தினாளென்று தெரிந்தவுடனே நாம் அழைத்துக்கொண்டு போயிருந்தால் இத்தனை துன்பத்துக்கு இடமிராது; நாம் நன்மையென்று செய்ததெல்லாம் தீமையாக முடிந்தது. இப்பொழுது சீர்காழிக்குப்போனால் அவள் உயிரோடிருந்தால்தான்

மனந்திருப்தியாகும். அவ்வாறின்றி யுயிரைமாய்த்துக்கொண் டிருப்பாளானல் அவ்விடம் போய்ப் பிரயோஜனமென்ன? அவள் நிமித்தந்தானே அங்கே போகவேண்டும். இல்லா விட்டால் யாரை பார்க்கும்பொருட்டுச் சீர்காழிக்குப் போகி றது. அவள் பிழைத்திருக்கிருளா அல்லவா என்பதைத் தெரிந்துகொண்டல்லவா பிரயாணப்படவேண்டும், அதுயெப் படித் தெரிந்து கொள்ளுகிறது என்று வெகுநேரம் யோசித் துப் பின்பொருயுக்தி கண்டுபிடித்தான். அதாவது, ஞானம் பாள் பேருக்கு ரூபா நூறு மணியார்டர் செய்வோம். அவ ளுயிரோடிருந்தால் அவள் கையெழுத்திட்ட ரசீதுவரும்; இல்லாதபட்சத்தில் பணமே திரும்பி வந்துவிடும். அதை தெரிந்துகொண்டு பின்பு செய்யவேண்டியதை யோசித்துக் கொள்வோ மென்று உடனே போஸ்டாபீசுக்குப்போய் ரூபா நூறு ஞானம்பாள் பேருக்கு மணியார்டர்செய்து ரசீதுபெற் றுக்கொண்டு ஜாகைக்கு வந்துசேர்ந்தான். ஸ்நானஞ் செய்து போஜன முடித்துப் பின்பு தன் அறைக்குள் போய்க் கதவை யடைத்துப் படுத்துக்கொண்டு பல பல யோசனை செய்தான். தூக்கம் வரவேயில்லை. எங்கே பார்த்தாலும் அவளுடைய சொரூபமாகவே தோன்றியது. யார் பேசினாலும் ஞானம்பாள் குரல் போலவே தோன்றிற்று. அவளைத்தவிர வேறொன்றும் மனதில் நிற்கவில்லை. அவளை யெப்பொழுது கண்ணால் பார்ப் போமென்று மனமும் ஜீவனும் பதைபதைத்தது. கடைசியாக, அவள் புத்திசாலியானதால் தற்கொலைபுரியக் கருதாளென் றும், தனக்கு வேலைமிகுதியா யிருப்பது அவளுக்குத் தெரி யுமாதலாலும், நான் கிராமத்திலிருக்கமாட்டேனென்று அறி வாளானபடியாலும், இன்னும் உயிரோடிருப்பாளே தவிர மரித்திருக்கமாட்டாளென்றும் நிச்சயித்துக்கொண்டு அவ ளுக்கு ஒரு கடிதமெழுதத் தீர்மானித்து, உடனே படுக்

கையை விட்டெழுந்து, மேஜையின் கிட்டப்போய் நாற்காலி யிலுட்கார்ந்துகொண்டு கடிதமெழுதி முடித்தான். மறுபடியு மொருதரம் வாசித்துப்பார்த்துக் கொலுசு அட்சரமாயிருந்த படியால், அவள் படித்துத் தெரிந்துகொள்வாளோ மாட் டாளோ என்று கருதி, மறுபடி வேறுகடிதத்தில் தனித்தனி அட்சரமாக நிறுத்தி நன்றாயெழுதினான். அது கீழ்வருமாறு,

எனது சீவனுமுடலும் செல்வமுமாகி, ஆவிக்கினிக்கும் அம்ப ரத்தமுதே!

நான் இரண்டு மாதமாய் ஊரில் இல்லை. ஊரூராய் அலைந்து கொண்டிருக்கிறேன். ஒரு வியாஜ்யத்துக்காக பட்டணம் வந்து ஒரு மாதமாயிற்று. ஆதலால் உன்கடிதம் இன்று காலமேதான் என் கைக்கு வந்து சேர்ந்தது. அதனாலே தான் உன் மனவிருப்பத்தின்படி உடனே டதில் கிடைக்கவில்லை. அதற்காக நீ வருத்தப்படாதே. நீ செய்த பிழையைப் பிழையென்று நான் நினைக்கவேயில்லை. அதை இளம்பருவச்சிறுவரின் விளையாட்டிலொன்றாகக் கருதி மறந்துவிட் டேன். தம்முடைய அவயவங்கள் தமக்குத் தீமை செய்தனவென்று அவற்றை வெறுத்துக்கழிக்கும் புத்திமானல்லவோ தன்நாயகி செயலை யுங் குற்றமாகக் கருதிப் பகை பாராட்டுவான். என் சித்தமொத் தினிக்கும் செல்வச்செருக்கே! நீ செய்ததை நான் குற்றமாகக்கொண் டாலல்லவோ மன்னிக்கத்தகுவது. நான் ஒருபோதும் அப்படி நினைக் கவுமில்லை. உன்னை வெறுக்கவுமில்லை. எனக்குக் கொஞ்சம் வேலை யிருந்தபடியால் அது தீர்ந்தபின் அழைத்துக்கொள்ளலாமென் றெண்ணி யிருந்தேனே யொழிய வேறு யாதொரு கெட்ட எண்ணமு மில்லை. ஆதலால் நீ வித்தியாசமாக நினைத்து மனம் வருந்தவேண் டாம். என் கண்கள் உனது வதன சௌந்தர்யாமிர்தத்தை யெப்பொ ழுது அருந்திக்களிப்போமென்று பதைக்கின்றன. நின் மழலை கனிந் தூறி அஞ்சுகமென்னக் கொஞ்சுமானந்தச் சொல்லமுதத்தை யுண்டு தெவிட்டுங்கால முண்டோவென்று என்னிருசெவிகளும் ஏக்கமுறு கின்றன. இந்தக் கணமே யுன்னிடஞ்சேரக் கால்கள் பதறுகின்றன. ஒவ்வொரு கணமும் பற்பல யுகங்களாக வளர்ந்து வருந்துகின்றன. என தானந்த வாழ்வே! நெஞ்சிலஞ்சற்க. இன்று நூறு ரூபாய் மணி

யார்டர் அனுப்பியிருக்கின்றேன். அதைச் செலவுக்கு வைத்துக் கொள். வெகுசீக்கிரம் உன்னை வந்து பார்ப்பேன். கவலையற்றிருக்கக் கடவாய்.

சென்னை,
24உ-7-1884ஞ } இப்படிக்கு,
பாலசுந்தரம்.

என்றெழுதி முத்திரித்து அன்று போஸ்டிலேயே சேரும்படி போட்டுவிட்டான். ஆனாலும் அவனுடைய மனதுக்குமட்டும் இன்பமில்லை. வாதைப்பட்டுக் கொண்டேயிருந்தது. நாளனன்றைக்கு எனக்குப் பதில் கிடைத்துவிடும். அதைப் பார்த்துக்கொண்டு பின் பிரயாணப்படலாமென்று நினைத்துச் சும்மா விருந்தான். மறுநாட்காலையில் வழக்கம் போலெழுந்திருந்து நித்திய கர்மானுஷ்டானங்கள் முடித்துக் காப்பியருந்தி, வக்கீல் கல்யாணராமையரைக்கண்டு அவரிடம் பேசவேண்டியவைகளைப் பேசிமுடித்து விட்டு, ஊருக்குப் போகத் தயாராயிருக்கலாமென்று புறப்பட்டுப்போனான். அவர் வீட்டுக்குப்போய் அவரைக்கண்டு பேசிவிட்டு, அவரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியில் வந்தான். வாசல் திண்ணையில் தன் மாமனார் உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்த யோசனையிலிருப்பதைக்கண்டான். கண்டதும் திடுக்கிட்டு அவர் விசனமாக உட்கார்ந்திருப்பதனால் தன் மனைவிக்கு மோசம் வந்துவிட்டதென்றும், அந்தச்சமாசாரந் தெரிவிக்கும் பொருட்டு வயலூர்போய்த் தான் பட்டணம் வந்திருப்பது தெரிந்து இங்கே விசாரித்துக்கொண்டு வந்திருக்கிறாரென்றும் நினைத்து, ஆவியும் உடலும் பதறிப் பிரமித்து பேச நாவெழாமல் மரம்போல ஸ்தம்பித்து நின்றுவிட்டான். சற்று நேரத்துக்கெல்லாம் ஐயரவர்கள் அவன் பக்கந் திரும்பி அவனைப் பார்த்தார். பார்த்ததும் அவருக்குக் கவலையெல்லாமொழிந்தது. மனமகிழ்ந்தது. முகமலர்ந்தது. சந்தோஷத்துடன், "பாலசுந்தரம்! ஏது இவ்வளவு தூரம் வந்தது? எனக்கு மிக

வாச்சரியமாயிருக்கிறது, நான் உன்னைக் காண்பேன் என்கிற எண்ணமேயில்லை. என்ன சமாசாரம்,'' என்றார். மாமனாரது மலர்ந்த முகத்தைக்கண்டதும் அவனுக்குப் போன பிராணன் மீண்டும் வந்தது. இது ஞானம்பாள் உயிரோடிருக்கிறதைத் தெரிவிக்கிறதல்லவா வென்று கருதி, உடனே வந்து மாமனார் பாதத்தில் வணங்கி அவர் ஆசீர்வாதம்பெற்று அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தான் வந்த சமாசாரத்தையவரிடம் கூறி, "தாங்களெதற்காகப் பட்டணம் வந்தது; எப்பொழுது ஊரைவிட்டுப் புறப்பட்டீர்கள்,'' என்று கேட்டான்? அவர் தமக்கு நேரிட்டவற்றையெல்லாம் சொல்லி நேற்று இரவுதான் ஊரிலிருந்து புறப்பட்டு வருகிறேனென்றும், அது விஷயமாகக் கல்யாணராமையரிடம் வந்ததாயும், அவர் தமக்குப் பழக்கமில்லாதவராகையால் அவரைக்கண்டு பேசுவதெப்படி யென்று யோசித்துக்கொண்டிருக்கிறதாகவும் சொன்னார். பாலசுந்தரம் அப்படியானால் உள்ளே வாருங்களென்று அழைத்துக்கொண்டுபோய் வக்கீலிடம் விட்டான். ஐயரவர்கள் வக்கீலிடம் கடிதத்தைக் கொடுத்தார். வக்கீல் கடிதத்தைப் பார்த்துவிட்டு, இரத்தினமையரவர்களைப் பார்த்து, "ஐயா! தாங்கள் கொண்டுவந்த ஆதாரவுகளையும், ஜட்ஜ்மெண்டையும் கொடுங்கள் பார்ப்போம்," என்று கேட்டு வாங்கிப் படித்துப்பார்த்து, "ஐயா! தமது பட்சம் ஜெயிக்கும்! ஆனால் கஷ்டசாத்தியமான விஷயமானது, எப்படியிருந்தாலும் தாங்கள் யோசிக்கவேண்டியதில்லை. எப்படியும் ஜெயித்துத்தருகிறேன்," என்று உறுதி கூறினார். ஐயரவர்கள் அவர் பேச்சினால் சற்றுத் திருப்தியடைந்து பேசவேண்டியவைகளைப் பேசிமுடித்தார். வக்கீல்பீஸ் விஷயமாய்ப் பேசினபோது, பாலசுந்தரம், "அதெல்லாம் பின்பு பேசிக்கொள்ளலாம்; வக்கீல் அவர்கள் கேஸை நடத்தட்டும்,

என்று கூறி அவரை யழைத்துக்கொண்டு தன் ஜாகைவந்து சேர்ந்தான். அவ்விடம் வந்து ஸ்நானஞ்செய்து சாப்பிட்டானபின் இருவரும் அறைக்குள் உட்கார்ந்து சந்தோஷமாய்ப் பேசிக்கொண் டிருக்கையில், "அப்பா பாலசுந்தரம்! குழந்தை ஞானம்பாள் உன் விஷயத்தில் ஏதோ பெரிய அபராதஞ் செய்துவிட்டதாயும், அதனால் நீ அவள்மேல் கோபங்கொண்டிருப்பதாயும் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டாள். உண்மையில் அவள் செய்த பிழை மன்னிக்கத் தகாததேயாம். ஆனாலும் சிறுவயதில் அறியாப் புத்தியால் செய்த பிழையானதால் உன்னைப்போன்ற புத்திமான்கள் அதைக் கவனிக்காமல் மன்னிப்பது நியாயம். எனக்கு அவளைத்தவிர வேறு குழந்தைகளில்லை. ஆகையால் அவள் படுகிற துன்பம் பார்க்கமுடியவில்லை. அன்னபானாதிகளைக் கூட வெறுத்துவிட்டாள். சரீரத்தில் எலும்புதான் இருக்கிறது. இரண்டு வாரத்துக்குமுன் அவள் பிழைப்பாளென்கிற எண்ணமே யெனக்கு இல்லை. தெய்வந்தான் காப்பாற்றியது. அநேகமான புத்திகளைச்சொல்லிச் சமாதானப்படுத்திவைத்தேன். அதனால் சற்று மனந்தேறிப் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறாள். இருந்தாலும் சதா துக்கமாகவே யிருக்கிறாள். அதைப்பார்த்து உன் மாமியாருக்கும் எனக்கும் மனவருத்தமா யிருக்கிறது. உன்னைப்போன்ற மேதாவிகளுக்கு நான் சொல்லத்தக்கதொன்றுமில்லை" என்றவுடன், பாலசுந்தரம், "மாமா! நீங்கள்கூட அப்படி நினைக்கலாமா? நான் அவளை வெறுத்து ஒழிப்பேனா? என் வேலைத் தொந்தரவு தங்களுக்குத் தெரியுமே; அதனால் தான் இந்நாள் அளவும் அவளை அழைத்துக்கொள்ளாமலிருந்தேன். ஒருமாதத்துக்கு முன் ஞானம்பாள் எனக்கு எழுதிய கடிதம் எங்கெல்லாமோ சுற்றியலைந்து நேற்றையதினந்தான் என்னிடம் வந்தது.

நேற்றையதினமே அவளுக்குப் பதிலெழுதினதும் தவிர நூறுரூபாய் மணியார்டருஞ் செய்திருக்கிறேன். நாளையதினம் புறப்பட்டுச் சீர்காழிவா விருந்தேன். இன்று தங்களைப் பார்த்ததனால் இங்கே தங்க நேரிட்டது. இன்னம் ஒரு வாரம் இங்கேயிருந்துதான் வரவேண்டும். தாங்கள் இன்று சாயந் திரமே ஊருக்குப்போய் அவளைச் சமாதானப்படுத்துங்கள். நானிங்கேயிருந்து எல்லா வேலைகளையும் பார்த்துக்கொண்டு வருகிறேன்,'' என்றான். ஐயரவர்களுக்கும் அதுவே யுக்த மாகத் தோன்றினபடியால் சரியென் றொத்துக்கொண்டார். பட்டணம் வந்து சும்மாபோக அவருக்கு இஷ்டமில்லை. ஆத லால் அன்று முழுமையும் பட்டணத்திலுள்ள புதுமைகளைப் பார்த்துவிட்டு மறுநாள் புறப்படுவதாகத் தீர்மானித்தார்கள்.

ஞானம்பாள் இன்றுதினம் காலையில் "தெய்வந்தொழா அள் கொழுநற் றொழு தெழுவாள்'' என்றபடி தன் நாயகன் திருவடியைத் தியானித்துக்கொண் டெழுந்திருந்து, பல் தேய்த்துக் கைகால் சுத்திசெய்துகொண்டு, நெற்றில் குங்கு மம் திருநீறு தரித்து, தன் வழிபடுகடவுளை வணங்கித் துதித் தாள். வழக்கம்போலத் தன் அறையில்வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏக்கம் பிடித்தவள்போ விருந்தாள். அவளுடைய தாயார் வந்து "அம்மா! காபி வைத்திருக் கிறதே! அது ஆறிப்போகும் முன் சாப்பிடக் கூடாதா?'' என்று சொல்லிக்கொண்டே காப்பியைக் கொண்டுவந்து மேஜையின் மேல் வைத்துவிட்டு அவளுக்குப் பலவகையான தேறுதல்களைச் சொல்லிக்கொண்டிருந்தாள். ஞானம்பாள் காதில் தன் தாய் பேச்சொன்றும் ஏறவில்லை. தாயின் அலட் டுக்காகக் காப்பியைக் குடித்துவிட்டு, "அம்மா! நான் என் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். எழுதி ஒரு மாத மாய்விட்டது. அதற்கு இன்றுவரைக்கும் பதில் வரவே

யில்லை ; அவர் என் மேல் கோபமில்லாமலிருந்தால் உடனே பதில் வந்திருக்காதா ? ஆதலால் என் துக்கத்துக்கு முடிவு காலமேயில்லைபோலிருக்கிறதே ! இந்த விதிக்கு நான் என்ன செய்கிறது ? எனக்குச் சந்தோஷ மெப்படியிருக்கும் ; அன்னந் தண்ணீரெப்படிச் செல்லும் ; நான் துன்பத் துக்கென்றே பிறந்துவிட்டேன், ஈசுவரன் கருணை செய்தா லன்றி மனிதப்பிரயத்தினத்தினு லொன்றுமாகாதென்று தோன்றுகிறது,'' என்று கூறி வருத்தப்பட்டுக் கொண்டிருக் கையில், அவள் தோழி மீனுட்சி வந்து, "ஞானம்பா ! என்ன செய்கிறுய் ? ஏதாவது புஸ்தகமிருந்தால் எடு ; படிப்போம்,'' என்று சொல்லிக்கொண்டே மேஜையின்மேல் வைத்திருந்த ஸ்காந்தபுராணத்தை யெடுத்துப் பிரித்தாள். மயேந்திரகாண் டத்தில் ஜயந்தன் கனுவில் சுப்பிரமண்யகடவுள் தோன்றியருள் புரிந்த அத்தியாயம் அகப்பட்டது. அதை மீனுட்சி வாசிக்க ஞானம்பாள் கேட்டுக்கொண்டேயிருந்து, முருகா ! செந்தி லாண்டவா ! பக்தஜன பரிபாலகா ! சிற்சுகானந்த சொரூபா ! வள்ளிபங்காளா ! குஞ்சரி மணுளா ! கருணைக்கடலே ! ஆபத் பாந்தவா ! ஜயந்தனைக் காப்பாற்றியதுபோல என்னையும் நினது கருணையால் காத்தருளவேண்டும்,'' என்று பிரார்த்தனை செய்தாள். அப்பொழுது ஞானம்பாளுக்கு அவளை யறியா மலே மனதுக்குள் ஆனந்தம் பொங்கியது. இடது கண்ணும் புயமுந் துடித்தன. என்ன காலத்துக்கு இப்படிப்பட்ட குறி கள் தோன்றுகின்றன ! பெண்களுக்கு இடப்புறந் துடித்தால் அதிர்ஷ்டம் வருமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன ? ஜனங்களெல்லாரு மப்படியே சொல்லுகிருர்கள். இன்று என்னிடம் அந்தக்குறிகள் நிகழ்கின்றனவே ! இதற்கு யாது பலன் நேருமோ தெரியவில்லை. எப்படியிருந்தாலு மிருக் கட்டும் ; தெய்வத்தைத் தியானித்துக்கொண்டிருந்தால் நடப்

பது தானே நடக்கும் என்று தன் மனக்கருத்தைப் பிறர் அறியாதபடி மறைத்துத் தன் தோழியோடு பேசிக்கொண்டிருக்கையில் போஸ்ட் பியூன் சடுதியில் உள்ளே நுழைந்து, "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான். யாரென்று பார்க்கும்பொருட்டு ஞானம்பாள் வெளியில் வந்தாள். அதற்குள் அவள் தாயாரும் கூப்பிடுகிறவர்கள் யாரென்று பார்க்கும் பொருட்டு வெளியில் வந்தாள். போஸ்ட் பியூன், "ஞானம்பாள் என்பவர் யார்? அவருக்கு மணியார்டர் வந்திருக்கிறது," என்றான். ஞானம்பாள், "எனக்கு மணியார்டர் செய்கிறவர் யார்? நமது நாயகனாகவே யிருக்கவேண்டும்," என்று நினைத்துக்கொண்டிருக்கையில், அவளுடைய தாயார், "இதோ நிற்கிறவள் தான் ஞானம்பாள்; யார் மணியார்டர் அனுப்பியது?" என்று கேட்க, அவன், "பட்டணத்திலிருந்து பாலசுந்தரம் என்பவர் அனுப்பியிருக்கிறார்," என்று மணியார்டர் பாரத்தையும், ஒரு போஸ்ட் கவரையும் எடுத்து அவளிடங்கொடுத்து மணியார்டர் பாரத்தில் கையெழுத்திட்டுத் தரும்படி கேட்டான். கையெழுத்திட்டதும் அவன் நூறு ரூபாய்களை யெண்ணிக் கொடுத்துவிட்டுப் போனான். அப்பொழுது ஞானம்பாளுக்கு ஆனந்தம் கரை கடந்து பெருகியது. உடனே பணத்தையும் கடிதத்தையுமெடுத்துக்கொண்டு தன் அறையில் புகுந்து, பணத்தைப் பெட்டியில் வைத்துவிட்டு, கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். தன் கணவனது அன்பான வசனங்களைப் படித்ததும் உள்ளம் தளிர்த்தது, மகிழ்ச்சி பெருகியது. சந்தோஷத்தினால் வாயில் பேச்சுவரவில்லை. ஆனந்தபாஷ்பம் ஆறாய்ப் பெருகியது. அரைமணிநேரம் சும்மா நின்று காகிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தாயார், "அம்மா ஞானம்பா! கடிதம் யார் அனுப்பியது? சங்கதி யென்ன?" என்று கேட்

டாள். ஞானம்பாள் சிரித்துக்கொண்டு கடிதத்தைக்கொண்டு வந்து தாயார் கையில் கொடுத்துவிட்டு, அவள் தோள்மேல் சாய்ந்துகொண்டு நின்றாள். தாயார் படித்துப்பார்க்கையில், மீனாட்சி, "அவளுடைய ஆம்படையான் எழுதியிருக்கிறானாக்கும்; அவளுக்கென்ன குறைச்சல்; செலவுக்கு நூறுரூபாயாச்சு; கடிதமும் வந்தது," என்று சொல்லிவிட்டுச் சற்றுநேரம் இருந்து தான் சாயந்திரம் வருவதாகச் சொல்லி வீட்டுக்குப் போய்விட்டாள். பிறகு தாயாரும் பெண்ணுமாகக் கடிதத்தைப் பார்த்துப்பார்த்து இது தன் தெய்வத்தின் அனுக்கிரகமென்று கருதி மனதுக்குள் மகிழ்ந்தார்கள். ஞானம்பாள் தன்னைவிடப் பாக்கியசாலி யில்லையென்றும், இது தன் தெய்வத்தின் அனுக்கிரகமென்றுங் கருதி மனதுக்குள் மகிழ்ந்தாள். தன் இன்பநாயகனது அன்புடைமைக்குப் பல தரம் கசிந்துருகினாள். கவலை யெல்லாமொழிந்தது; சித்தம்களித்தது; சரீரம் தளிர்த்தது; முகம் மலர்ந்து ஒளிவீசலாயிற்று. வாயினின்றுங் கலகலவென்று மதுரமொழிகளுதிர்ந்து அன்னை செவிகட் கின்பம்பயந்தன. அவள் மனது நாயகன் வருகை யொன்றையே யெதிர்ப்பார்த்திருந்தது. அப்பொழுது தாயார் அவளை நோக்கி, "அம்மா! நீ தான் இத்தனைநாளும் கஷ்டமுந் துக்கமும் கலந்து அனுபவித்தாய். அன்னங்கூட இரங்காமலிருந்தாய்; திருமேனி இளைத்து வாடிப்போயிற்று. இனி நன்றாய்ச் சாப்பிடு. உன் நாயகன் வருவதற்குள் பழையமேனி வந்துவிட்டால் நன்றாயிருக்கும்; எழுந்திரு வேலைக்காரியைக் கடைக்கு அனுப்பிச் சாமான்கள் வாங்கிவரச் சொல்லுவோம்," என்றாள். வீட்டில் சமையலுக்கு வேண்டிய பதார்த்தங்களொன்றுமில்லை யென்பது ஞானம்பாளுக்கு நன்றாய்த் தெரியு மாகையால் தாயார் கையில் இருபது ரூபாய் கொடுத்தாள்; அரிசி முதல்

சகல சாமான்களும் அன்று தான் வாங்கினார்கள். சீக்கிரம் சமையலாயிற்று. ஞானம்பாள் இன்று தான் வயிறாரப் போஜனம் செய்து மகிழ்ந்தாள். பின்னர் கைகால் சுத்தி செய்துகொண்டு தன்னறையில் வந்து உட்கார்ந்தாள். நாற் காலியில் சாய்ந்து கொண்டு தன் கணவனின் கல்யாண குணங்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள். தான் எழு தின கடிதத்தினால் பாலசுந்தரம் மிக வருத்தப்பட்டு இன் னும் கவலையொழியா திருப்பாரென்றும், அந்தக் கவலையால் தான் பட்ட துக்கம் அவரும் படும்படி நேருமென்றும் கரு தித் தன்னாயகனுக்கு ஒருகடிதம் எழுத உத்தேசித்தாள். அப்படியே ஒரு கடிதமெழுதினாள். அது பின் வருமாறு,

என்னுயிர்க்காரண, மின்னுயிர்க்காதலா, பொன்னடிபணிந்து அடி யேன் ஞானம்பாள் வணக்கமாய் எழுதிக்கொண்ட விஞ்ஞாபனம்.

தமது கடிதமும் பணமும் வாடிய பயிர்க்கு நீடிய மழைபோல இன்று காலையில் வந்துதவி, என்னுயிர்க்கு அபயப்பிரதான மளித் துக் காத்தருளின. உள்ளமும் உயிரும் உடலும் தழைத்தன. தமது திருக்கரமலரினால் எழுதிய கடிதமே எனதாருயிர்தழைக்கும் அமிர்த மாயிற்று. மனதிற் கவலையின்றி ஆகவேண்டிய வேலைகளைப் பார்த்துக் கொண்டு சீக்கிரம் சீர்காழிக்கு வந்து எனக்குத் தரிசனம் அருள்வீ ரென்று கருதி என்மனம் குதூகலிக்கின்றது. எப்பொழுது கிடைக்கு மோவென்று ஒரு வேளை கவல்கின்றது. நான் வேறென்ன எழுது கிறது. சீக்கிரத்தில் தரிசனமருளப் பிரார்த்திக்கிறேன்.

சீர்காழி,
1884ஞு ஜுலைமீ 25உ } இப்படித்தமது திருவடிமறவா அடிமை,
ஞானம்பாள்.

என்று சில சிறு வசனங்களை யெழுதி அன்று தபாலி லேயே சேரும்படி அனுப்பிவிட்டாள். நிற்க, பட்டணத்தில் இரத்தினமையர் அவர்கள் அன்று பகல்முழுமையும் பட்ட ணத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு, மறுநாள் காலையில் எழுந் திருந்து திருஒற்றியூர் போய்த் தியாகராஜப்பெருமாளைத் தரி

சித்துத் திரும்பிவந்து, திருவல்லிக்கேணி பார்த்தசாரதியை வணங்கிச் சாயந்திரம் 6-மணிக்கு ரயிலேறி ஊர்போய்விட்டார். பாலசந்தரம் கல்யாணராமையரிடத்தில் இரத்தினமையரவர்கள் தன் மாமனுரென்றும். அதற்கு வேண்டிய பீஸ் முதலிய செலவுகளைத் தானே கொடுப்பதாகவும் சொல்லி மேலே நடவடிக்கை நடத்தச்சொன்னுன். அவர் தாம் கபடமில்லாமல் உண்மையாக உழைத்து ஜயம் செய்து தருவதில் தடையில்லை யென்று உறுதிமொழி கூறினர். பாலசுந்தரம் தான் ஊருக்குப் போனதும் ரூபா ஐந்நூறு அனுப்புகிறேனென்றும், அதை வைத்துக்கொண்டு அப்பீலை நடத்தும்படியாகவும், வேண்டிய சமையத்துக்கு எழுதினுல் செல்லுமான தொகை யனுப்புகிறதாகவுங் கூறி அவரிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு ஜாகை வந்து சேர்ந்தான். ஜாகைக்கு வந்ததும், தன் அறைக்குட் புகுந்தான். உள்ளுக்குள்ளே மணியார்டர் ரசீதும் ஒரு கடிதமும் கீழே கிடக்கக் கண்டான். போஸ்ட் பியூன் ஜன்னல் வழியாக உள்ளே போட்டுவிட்டுப் போயிருந்தான். அதை யெடுத்ததும் தன் பிராணநாயகி எழுதிய அன்புள்ள கடிதமென்று கண்டு உள்ளே மகிழ்ந்து அதைப் பிரித்துப்பார்த்து ஞானம்பாளை நேரில் கண்டதுபோலவே மனங்களித்தான். அவள் உயிரை இதுவரையுங் காப்பாற்றி வைத்திருந்த தன் வழிபடு கடவுளுக்குத் தோத்திரஞ் செய்தான். அவள் இவ்வளவு தூரம் நல்வழிப்பட்டது தெய்வானுகூலத்தினுலேதானென்று கருதிக் களித்தான். இனிக் கவலையற்றுக் களித்திருக்கலாமென்று கருதிச் சாயங்காலமானதும் கடற்கரைபோய்ச் சுகமாய்க் காலங்கழித்தான். மறுநாள் கடைத்தெருவுக்குப்போய் ஞானம்பாளுக்கு வெகுமதி யளிப்பதற்காகச் சில ரவிக்கைகளும், வஸ்திரங்களும் தெய்வப் படங்களும் வாங்கி வைத்துக்கொண்டான். தன் ஊரில் அகப்

படாத விநோத வஸ்துக்கள் பலவற்றையும் வாங்கினான். இரண்டுநாள் பொறுத்து ஒருமுறை வக்கீல் வீட்டுக்குப் போய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது வக்கீல் பாலசுந்தரத்தைநோக்கி, "அப்பா! நேற்று ஒரு சமாசாரம் கேள்விப்பட்டேன்; அதென்னவென்றால் உன் மாமனாருக்கு எதிரியாக ஞானக்கண்ணு என்பவன் இவ்வூரில் வந்திருக்கிறான். அவன் நார்ட்டனை வக்கீலாக அமர்த்தப்போகிறானாம். அவர் வெள்ளைக்காரராக இருப்பதால் அவர் பேச்சுக்கு மதிப்புண்டு. ஆதலால் அவரை நம்பக்கஞ் சேர்த்துக்கொண்டால் நல்லது. நமக்கே ஜயம் வருமென்பதில் தடையேயில்லை. அவருக்கு ஒரு நாள் பீஸ் ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டால் நன்று. இந்தச் சமையத்தில் செட்டுப்பிடிக்க வேண்டாம். உனக்குச் சம்மதமிருந்தால் இப்பொழுதே அவர் வீட்டுக்குப் போக வேண்டும். எதிரிகள் போய்ப் பேசுவதற்கு முன்னாலே நாம் பேசிமுடிக்கவேண்டும்," என்றார். பாலசுந்தரம், "ஐயா! நான் காசைப் பெரிதாகக் கருதுவேனோ! உமது இஷ்டம் போல இப்பொழுதே போவோம், வக்கீல் பீஸ் எத்தனையானாலும் ஆகட்டும்," என்று கூற, வக்கீல் வண்டிபோடச் சொல்லி, அப்பொழுதே பாலசுந்தரத்தையும் அழைத்துக்கொண்டு நார்ட்டன் வீட்டுக்குப்போய் அவரைக்கண்டு பேசினார். நார்ட்டன் என்பவர் மதிராஸ் பாரிஸ்டர்களில் ஒருவர். பேச்சில் மஹா வல்லவர்; சட்டங்களில் பூரண பாண்டித்தியமுண்டு. உண்மைக்குழைப்பவர்; சில ஏழைகளுக்கு அநுகூலமாகவிருந்து உண்மையாகப் பாடுபட்டு உழைத்துக் காரிய சித்தி செய்து கொடுத்து உபகரித்தாரென்று எல்லாரும் அவரைப் புகழ்வதுண்டு. உண்மையில் அவருக்குக் கீர்த்தி உண்டு. இந்தியர்களிடத்தில் உண்மையாகவே அவர் அன்பு உடையவர். அக்காலத்திலிருந்த பாரிஸ்டர்களுக்குள் கீர்த்தி

பெற்றவர்; தயாளகுணமுள்ளவர்; காசையே பெரிதாக நினையாமல் காரியத்தையே பொருளெனக் கருதுபவர். அவர் கலியாணராமையரை அன்பாக வரவேற்று, பாலசுந்தரத்தையும்உபசரித்து வந்த காரியம் யாதென்று வினவினர்; கல்யாணராமையர் நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் விவரமாகக்கூறி, இதை அப்பீலில் ஜயித்துத் தரவேண்டுமென்றார். அவரும் மகிழ்ச்சியோடு ஒத்துக்கொண்டபடியால் அவருக்குத் தரவேண்டிய பீஸ் ரூபாய் ஆயிரமும், தன் செலவுக்கு இரண்டாயிரமும் உடனே அனுப்பும்படி வயலூருக்கு அவசரத் தந்திகொடுத்துவிட்டு வீடுவந்து சேர்ந்தார்.

பாலசுந்தரத்தின் தாயாருக்கு இளைய சகோதரி கல்பகம் என்பவள் சிதம்பரத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவளுடைய கணவன் நீலகண்ட ஐயர் வியாபாரத்தில் அதிகப் பிரியமுள்ளவர். சித்தூரில் அவருடைய சிநேகனொருவன் தனவந்தனாயிருந்தமையால் அவனோடு கூட்டுச்சேர்ந்து பல வியாபாரங்கள் நடத்திவந்தார். அதனால் சித்தூரிலேயே தங்கிவிட்டார். அவருக்குத் திரண்ட ஆஸ்தியிருந்தது. அந்தத் தம்பதிக்குப் புத்திர சந்ததியில்லை. அந்நிய வம்சத்தில் தத்து எடுத்துக்கொள்வதைவிடப் பாலசுந்தரத்தையே அபிமான புத்திரனாக எடுத்துக்கொண்டால், தங்கள் அபரகிரியைகளைச் சரியாய் நடத்தித் தங்களுக்கு மேலான பதவியை அளிப்பானென்று நினைத்து அவனையே புத்திரனாகப்பாவித்து வந்தார்கள். பாலசுந்தரம் பட்டணம் வரும்போது அங்கேவந்து அவர்களிடத்தில் இரண்டு மூன்று நாள் தங்கியிருந்தான். அப்பொழுது அவனுடைய குணாதிசயங்களையும், கல்விச் சிறப்பையும், ஆசாரங்களையும், நேமநிஷ்டைகளையும் நேரில் பார்த்தறிந்த நீலகண்ட ஐயர் அப்பொழுதே தமக்குச்சொர்க்க வாழ்வுகிடைத்துவிட்டாற்போல மகிழ்ந்திருந்தார். அவன்

பட்டணம் வரும்போது தன்னுடைய விலாசமுங் கொடுத்திருந்தான். வயலூருக்குத் திரும்பிப்போகும்போது சித்தூரிலிறங்கிப் பத்துநாள் தங்கிப் போவதாக வாக்களித்திருந்தான். இவன் பட்டணம் வந்தபின் நீலகண்ட ஐயர் அவர்கள் தன்னுடைய ஆஸ்திகளை இரண்டு பங்காகப் பிரித்து ஒரு பங்கை பாலசுந்தரத்துக்கும், மற்றொருபங்கை யிரண்டு பாகஞ் செய்து தன்னுடைய மூத்தமனைவியின் குமாரத்திகளிருவருக்குமாகப் பாகித்து ஒயில் (Will) எழுதி ரிஜிஸ்டர் செய்துவிட்டார். நாலைந்து நாட்களுக்கு முன் நீலகண்ட ஐயருக்குச் சுரங்கண்டு எந்த வைத்தியத்துக்கும் அடங்காமல் ஜந்நிகண்டு அபாயநிலைமையிலிருந்தார். இதையறிந்த கல்பகம் அம்மாள் உடனே வந்து சேரும்படியாக பாலசுந்தரத்துக்கு தந்தி கொடுத்தாள். அது பாலசுந்தரம் ஜாகை வந்ததும் வந்து சேர்ந்தது. அதைப்பார்த்ததும் அவனுக்கொன்றுந் தோன்றாமல் உடனே ஸ்நானம் செய்து போஜனம் பண்ணிவிட்டுப் பன்னிரண்டுமணி ரயிலேறிச் சித்தூர்போய்ச் சேர்ந்தான். நீலகண்ட ஐயர் தன்னைச் சூழவிருந்த ஜனங்களை நோக்கி, பாலசுந்தரத்தைத் தாம் அபிமான புத்திரனாக அடைந்திருப்பதனால் அவனே தனக்கும், தன் பத்தினிக்கும் அபரகிரியை செய்ய உரியவனென்றும் தன்னுடைய ஆஸ்திக்கும் அவனே பாத்தியஸ்தனென்றுங் கூறி அதற்குவேண்டிய தஸ்தாவேஜுகளையெல்லாம் அவனிடம் ஒப்புவித்தார். எல்லோரும் ததாஸ்து என்றார்கள். நீலகண்ட ஐயர் அன்றிரவு முழுமையும் பாலசுந்தரத்தினிடம் பேசிக்கொண்டிருந்து, அவனுக்கு இலௌகிக வைதிக விஷயங்களில் தமக்குத் தெரிந்த வரைக்கும் புத்தி கூறினார். மறுநாள் பகல் இரண்டு மணிக்கு நீலகண்டஐயர் சிவபதமடைந்தார். பாலசுந்தரம் அவருக்குச் செய்யவேண்டிய கிருத்தியங்களையெல்லாம் செய்து முடித்தான். இதில் இரண்டு

வாரங்கள் கழிந்துபோயின. பிறகு தன் சிறியதாயாரை வய லூருக்கு அனுப்பிவிட்டு, தன் பண்ணைக்காரர் மூலமாகச் சித்தூரிலிருந்த பொருள்களை யெல்லாம் வயலூர் கொண்டு போய்ச்சேர்க்கத் திட்டஞ்செய்துவிட்டுத் தான் புறப்பட்டுப் பட்டணம் வந்து சேர்ந்தான். உடனே கல்யாணராமையரி டம்போய் விசாரித்ததில் நாளனன்று மைனர் வியாஜ்யம் விசாரித்துத் தீர்ப்புச்சொல்லப்படும் என்றும், அதற்குவேண் டிய செலவுக்கு பணந்தேவையென்றுங் கூறினர். வேண்டிய பணத்தை யவரிடங்கொடுத்துக் காரியத்தை நடத்தச் சொன் ஞன். பாலசுந்தரத்தின் அதிர்ஷ்டவசத்தால் அன்று தினமே நம்பர் விசாரிக்கப்பட்டுப் பாலசுந்தரம் பட்சமே தீர்ப்புச் சொல்லப்பட்டபடியால் அவனுக்கு மிகச் சந்தோஷமுண்டா யிற்று. மற்றக்கேசுகளு மிப்படித்தான் நமக்கு அநுகூல மாக முடியுமென்று கருதினன். இந்தத் தொல்லைகளினல் ஞானம்பாளை மறந்துவிட்டான். இன்றுதினம் ஒரு பெரிய கவலையொழிந்தபடியால் அவனுக்கு ஞானம்பாள் ஞாபக முண்டாயிற்று. மறுநாட்காலையில் எழுந்திருந்ததும் வக்கீலி டம்போய் மேலே ஆகவேண்டிய விஷயங்களுக்குத் திட்டஞ் செய்துவிட்டு, அன்று தினம் ஒன்பதுமணி ரயிலில் புறப்பட் டுப்போனன். ஞானம்பாள் இன்று தினம் காலையில் எழுந் திருந்து வழக்கம்போலத் தெய்வந் தொழுது காப்பி யருந் தித் தன் அறையில் வந்துட்கார்ந்து படிப்பதற்காகப் புஸ்த கத்தை யெடுத்தாள். அதிலிருந்து பாலசுந்தரத்தின் கடிதம் கீழே விழுந்தது. அதை யெடுத்துப் பார்த்துவிட்டுக் கடிதம் வந்து நெடுநாளாயிற்று ; இதுவரைக்கும் யாதொரு சமாசார மும் தெரியவில்லை ; அநேகம் தொல்லையிலகப்பட்டு வேலை செய்துவரும் அவருக்கு நமக்குக் கடிதமெழுத நேரமிரா தென்பதற்குத் தடையில்லை ; ஆனலு மொருகடித மனுப்பி

யிருக்கலாம். இருக்கட்டும், நாளையதினம் நாமொரு கடிதமெழுதுவோமென்று தீர்மானித்திருந்தாள். அப்பொழுது போஸ்ட்பியூன் வந்து இரத்தினமையரவர்களிடத்தில் இரண்டு கடிதங்களைக்கொடுத்துவிட்டுப் போனான். அதிலொன்று பாலசுந்தரத்துக்கு, மற்றொன்று இரத்தினமையருக்கு. அதை பார்த்த ஐயரவர்கள் சற்றுநேரம் யோசித்து, "மாப்பிள்ளை பேருக்குக் கடிதம் வந்திருக்கிறதே! இதற்குக் காரணம் என்ன" வென்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, ஞானம்பாள் வந்து கடிதத்தைப் பார்த்து அவளும் யோசித்துக்கொண்டிருந்தாள். ஐயரவர்கள் கடிதத்தைப் பார்த்துவிட்டு மிகுந்த யோசனையாக இருந்ததைப் பார்த்து, "அப்பா! அது என்ன கடிதம்! என்ன யோசனை?" என்றாள். அதற்கு ஐயரவர்கள், "ஒன்றுமில்லை, கணபதி அக்கிரகாரத்தில் உன்னுடைய சிறிய அத்தையிருக்கிறாள் அல்லவா; அவளுடைய கனிஷ்ட குமாரத்திக்கு ஆவணிமீ 1வ வெள்ளிக்கிழமை விவாகம்; திருப்பூந்துருத்தி சுப்பிரமணிய ஐயரவர்கள் ஜேஷ்டபுத்திரன் சிவசாமிக்கு இரண்டாந்தாரமாய்க் கொடுக்கிறார்களாம். அதைப் பற்றி யோசிக்கிறேன்," என்றார். ஞானம்பாள், "அப்பா! அதைப் பற்றி யோசிப்பானேன்," என்றாள். அதற்கு ஐயர் அம்மாளைக்கூப்பிடு என்பதன்முன், "என்ன கடிதாசு? மாப்பிள்ளை அனுப்பினாரா?" என்று கேட்டுக் கொண்டு அவள் தாயார் வந்து விட்டாள். ஐயர் அவளை நோக்கி, "உன் சிறிய நாத்தனாருடைய பெண்ணுக்குக் கல்யாணமாம், அதற்குக் கடிதம் வந்திருக்கிறது. மாப்பிள்ளை பேருக்கு மற்றொரு கடிதம் வந்திருக்கிறது. கல்யாணத்துக்கு நம்முடைய செலவு கொஞ்சம் உண்டல்லவா? அதற்குக் கடிதம் வந்திருக்கிறது. கல்யாணத்துக்கென்ன செய்வதென்று யோசிக்கிறேன்," என்றார். "ஆமா! கல்யாணத்துக்கு நாம் போகாவிட்டாலும் பெண்

ணுக்குக்காலாழி, மோதிரம், புடவை முதலிய சில சிலவு நாம் செய்யவேண்டும். குறைந்த பட்சம் பத்துவராகன் செல்லும்; நம்மைத் தெய்வந்தான் சோதித்துவிட்டதே! என்ன செய்கிறது. கிரமத்துக்கு அந்தக் கல்யாணமே நாம் செய்துவைக்க வேண்டியதாயிருக்க இதுகூடச் செய்யாவிட்டால் ஊரார் ஏசுவார்கள்! உற்றூர் பலபல பேசுவார்கள்! மானம் கெட்டு அவமானம் வரலாயிற்று. வெளியில் எப்படிப் புறப்படுவேன்? கண்டபேரெல்லாரும் நாத்தனூர் பெண்ணுக்கு என்ன செய்தாயென்று கேட்பார்களே! அதற்குப் பதிலென்ன சொல்வேன். நம்முடைய நிலைமை ஊராருக்குத் தெரியுமா? நாங்கள் சக்தியற்றவர்களா யிருக்கிறோமென்று நாம் தான் சொல்லிக் கொள்ளக்கூடுமா! சொன்னாலும் நம்புவார்களா! என்னவோ தெய்வம் விட்டவழி விடுகிறது,'' என்று சொல்லிக்கொண்டு தாரை தாரையாகக் கண்ணீர்விட் டழுதாள். ஐயரவர்கள் அவள் அழுவதைப்பார்த்துச் சகிக்காமல் அவரும் கண்ணீர் விட்டார். அதைக்கண்ட ஞானம்பாளுக்கு மனதும் உயிரும் பதைத்தன; உடனே எழுந்திருந்து அம்மாளிடம் போய் அவளுடைய கண்ணீரைத் துடைத்து, "அம்மா! நீ யிப்படி முட்டாள்தனமாக அழுது அப்பாவுடைய மனதையுங் கலக்கி விட்டாயே! நீங்களிருவரும் அழுதால் நான் என்ன செய்வேனென்று கவனித்தீர்களா! இப்பொழுதென்ன குறை நேர்ந்து விட்டது. என் கணவன் அனுப்பினபணத்தில் இருபத்தைந்து ரூபா பாக்கி வைத்திருக்கிறேன். போதாத செலவுக்கு என் முருகை அடகுவைத்து இருபது ரூபா வாங்கிக் கொண்டால் என் கணவன் வந்ததும் நகையை மீட்டுக்கொள்ளலாம். இப்படி ஏன் செய்தாயென்று என் நாயகன் கோபிக்க மாட்டார்,'' என்று கூறிய இனிய வசனங்களால் இருவரும் மனமகிழ்ந்து வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்

கள். "அப்பா! கல்யாணம் இன்னம் எத்தனைநாள் இருக்கின்றன," என, அவர், "இன்னம் பன்னிரண்டுநாட்களிருக்கின்றன," என்றார். "ஆனால் நாம் அவசியம் கல்யாணத்துக்குப் போகவேண்டும்; அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள், நான் பணந்தருகிறேன்," என்று சொல்லி, இருபத்தைந்து ரூபாயை அவரிடங்கொடுத்தாள். "அம்மா! இது சரிதான்; நாம் கல்யாணத்துக்குப் போய் வருகிறதென்றால் நூறு ரூபா செல்லும்; ஆகையால் இந்த இருபத்தைந்து ரூபாயை மணியார்டர் மூலமாக அனுப்பிவிட்டால் நல்லது; உன் நகையை அடகுவைக்க எனக்கு இஷ்டமில்லை," என்றார். "அப்பா! நீர் அதைக் கவனிக்கவேண்டாம். நகையை அடகுவைக்கவும் வேண்டாம்; பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்," என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குட் போய்த் தன் நாயகனுக்கு ஒரு கடிதமெழுதி, இந்தக் கல்யாணத்துக்கு அவசியம் போகவேண்டு மென்றும், அதற்காக நூறு ரூபா வேண்டுமென்றும், தங்களைவிட்டுத் தனித்துப் போகத் தனக்குப் பிரியமில்லையாதலால் ஒரு முறை யிவ்விடம் வந்து போகவேண்டு மென்றும், தமது வரவைச் சதா எதிர்பார்த்துக் கொண்டே யிருப்பேனென்றும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டிருந்தாள். இராத்திரி ஒரு மணி போஸ்டில் சேரும்படி அனுப்பலா மென்றிருந்தாள். தன் கடிதம் கண்டவுடன் தன் பர்த்தா புறப்பட்டு வந்துவிடுவார். இந்தக் கடிதம் நாளையதினம் காலையில் அவர்கையிற்சேரும்; நாளைய தினமே புறப்பட்டு வந்தாலும் வருவார்; இல்லாத பட்சத்தில் அவசியம் பதில் வருமென்று மகிழ்ந்திருந்தாள். சாயந்திரம் ஐயரவர்கள் வெளியிற் போய்விட்டார். அஸ்தமித்ததும் ஞானம்பாளும் அவளுடைய தாயாரும் வழக்கம்போலக் கோயிலுக்குப்போனார்கள். இரண்டாங்கால பூசையில் சுவாமி

தரிசனஞ்செய்துகொண்டு இரவு எட்டுமணி சுமாருக்கு இருவரும் வீட்டுக்கு வந்தார்கள். தெருத்திண்ணையில் விளக்கு வைத்திருந்தது! "யாரோ இருவர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறுபோ லிருக்கிறது; ஆகையால் சீக்கிரம் போவோம்" என்று சொல்லிக்கொண்டே வந்து வேகமாய் உள்ளே புகுந்தார்கள். சற்றுநேரத்துக்கெல்லாம் ஐயரவர்கள் விருந்தாளியையும் அழைத்துக்கொண்டு உள்ளே வந்தார். விருந்தாளியைப் பார்த்தவுடன் ஞானம்பாளுக்கும் அவள் தாயாருக்கும் உண்டான ஆச்சரியத்துக்கும், சந்தோஷத்துக்கும் அளவில்லை. ஏனென்றால், அந்த விருந்தாளி தான் பாலசுந்தரம். பாலசுந்தரம் மந்தகாசமுகத்துடன் வந்து தன் மாமியாரை நமஸ்கரித்தான். அந்தம்மாள் மனப்பூர்வமாக அவனை ஆசிர்வதித்தாள். பின் மிகமகிழ்ச்சியோடு ஞானம்பாளுடைய வதனமதியைப் பார்த்துப் புன்னகைகொண்டான். அதைக் கண்டவுடன் ஞானம்பாளுக்கு ஆசையும் நாணமும் சேர்ந்து பெருகுதலால் சற்றே தலைகுனிந்து புன்முறுவலரும்ப நின்றுள். அந்நிலைமையில் அவர்களிருக்கையில், ஐயரவர்கள் தம்மனைவியை யழைத்துக்கொண்டுபோய், "என்ன சமையல் செய்திருக்கிறுய்? மாப்பிள்ளை வந்திருக்கிறுரே!" என்று சொல்ல, அந்தம்மாள், "நான் என்ன செய்வது, வீட்டி விருந்ததைக்கொண்டு சமையல் செய்திருக்கிறேன். கொஞ்சம் எண்ணெய் இருந்தால் வற்றல் அப்பளம் பொரித்து மருமகனுக்கு அன்னமிடலாம்; மற்ற விஷயத்திற்கு விடிந்ததும் யோசித்துக்கொள்ளலாம்," என்றுள். ஐயரவர்கள், "இப்பொழுது எட்டுமணியாயிற்று. கடை திறந்திருக்குமோ என்னமோ தெரியவில்லை; போய்ப்பார்த்து வருகிறேன்," என்று வெளியே புறப்பட்டார். அம்மாள் அடுப்புமூட்டிக்கொண்டிருந்தாள். இந்தச்சமயத்தில் பாலசுந்தரம், "ஞானம்பா!

இங்கேவா!'' என்று கையைப்பிடித்து அழைத்து மடியில் உட்காரவைத்துக்கொண்டு மார்போடிருகத்தழுவிப் பவள வாய்முத்தமுண்டு கொஞ்சி மகிழ்ந்தான். ஐயரவர்கள் வெளி யிற்போவதைக் கண்டு, “ ஞானம்பா! இனிமேல் சமைய லுக்கு எத்தனம் செய்கிறாப்போலிருக்கிறதே. ஏன் வீணிற் கஷ்டப்படவேண்டும்; இருக்கிறதைப் புசித்தால் விடிந்தபின் யோசித்துக் கொள்ளக்கூடாதா? பழைய அமுதிருந்தாலும் போதுமென்று அம்மாளுக்குச் சொல்லி சமையலை நிறுத்து; நானென்ன புதிதா?'' என்று சொல்லிக்கொண்டே வெளி யில் வந்துட்கார்ந்தான். ஞானம்பாள் தன் நாயகன் சொன்னதைத் தாயாருக்குச் சொல்லி, “ஒன்றுஞ் செய்ய வேண்டாம். காலமே செய்து கொள்ளலாம்,” என்பதன் முன், ஐயர் அவர்கள் எண்ணெயை வாங்கிக் கொண்டுவந்து மனைவியிடங் கொடுத்துவிட்டு, மருமகனையழைத்துக்கொண்டு இரண்டாங்கட்டிலிருக்குங் கிணற்றின் அருகேபோய்ச் சந்தியாவந்தனாதி மாலைக்கடனை முடித்துக்கொண்டிருந்தார் கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உள்ளேவரவும், கூடத் தில் போட்டிருந்த இலையில் இருவரும் உட்கார்ந்து போஜ னஞ்செய்து கைகால் சுத்திசெய்தபின் தாம்பூலமருந்திப் பேசிக்கொண்டிருந்தார்கள். மணி பத்தானதும் பாலசுந்தரம் பள்ளியறையிற் சென்று படுத்திருந்தான். சற்று நேரத்துக் கெல்லாம் ஞானம்பாள் ஒரு பாத்திரத்தில் பாலும் மற்றொரு பாத்திரத்தில் சில சிற்றுண்டிகளும் தாம்பூலமு மெடுத்துக் கொண்டு பள்ளியறைக்கு வந்தாள். பாலசுந்தரம் படுக்கையை விட்டு எழுந்திருந்து எதிர்கொண்டு வந்து அவள் கையில் இருப்பனவற்றை வாங்கிக் கீழே வைத்துவிட்டு, அவளைத் தழுவியெடுத்து மடியில் வைத்துக் கொஞ்சி விளையாடிக்கொண் டிருந்தான். தன் நாயகன் நிஷ்களங்கமான சித்தத்துடன் தன்னை யன்பாய் அங்கீகாரம் பண்ணினதை நினைத்து ஆநந்தக்

கடலில் முழுகியிருந்தாள். பின் தாம்பூலமருந்திப் பேசிக்கொண்டிருக்கையில் ஞானம்பாள் தான் எழுதிவைத்திருக்குங் கடிதத்தை யெடுத்துக்கொண்டு வந்து கணவன் கையில் கொடுத்தாள். பாலசுந்தரம், "இது என்ன இரண்டாவது இராஜீநாமாவோ?" என்றான். அந்தச் சொல் காதில் பட்டதும் ஞானம்பாள் முகம் வெளுத்தது; கண்களில் நீர் பெருகியது. தான் செய்த பிழையை நினைந்து தலையைக் குனிந்து வருந்தி நின்றாள். அதுகண்ட பாலசுந்தரம், "என் கண்ணே! நான் விளையாட்டுக்காகச் சொன்னால் நீ வருத்தப் படலாமா? நீ செய்த குற்றத்தை நான் நினைப்பேனோ, நிச்சயமாகவே வேடிக்கைக்காகச் சொன்னேன். நீ வருந்ாதே," என்று சொல்லி, அவள் கண்ணீரைத் துடைத்துச் சமாதானஞ்செய்து பின் கடிதத்தைப் படித்துப்பார்த்துச் சற்று யோசித்துப் பின் ஞானம்பாளைப்பார்த்து, "என் செல்வமே! உனக்கென்ன குறைவு வேண்டிய பணந்தருகிறேன்; என் ரயில்வே பையை எடுத்துக்கொண்டுவா," என்றான். அவள் கொண்டுவந்ததும், சாவியை அவள் கையில் கொடுத்துத் திறக்கச் சொல்லி அதற்குள்ளிருந்த பணப்பையை யெடுத்து அவள் கையில் கொடுத்து, "என் தங்கமே! இதில் ஐந்நூறு ரூபா இருக்கிறது. இதை உன் பெட்டியில் வைத்துக்கொண்டு உன்னிஷ்டம்போலச் செலவுசெய்துகொள்," என்றுசொல்லிக் கையில்கொடுத்தான். அவள் அளவுக்கடங்கா மகிழ்ச்சிகொண்டு அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டி, அவனுக்கு வந்திருக்குங் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதைப் பார்த்து, "ஓ! இந்தக் கல்யாணத்துக்கு நானும் அவசியம் போகவேண்டும்; மாப்பிள்ளை சுப்பிரமண்யன் எனக்கு ஒன்றுவிட்ட மாமன் மகன். நாங்களிருவரும் மிக்க நேசமுடையவர்கள். ஆதலால் நானும் வருகிறேன் போவோம்,"

என்றது கேட்டு ஞானம்பாள் உள்ளம்பூரித்தாள். அந்த க்ஷணம் முதல் நாயகனும் நாயகியும் உடலுமுயிரும்போல மன மொத்துக் கூடியிருந்தார்கள். இப்பொழுது ஞானம்பாளுக்கு ஒரு கணப்போதாவது கணவனை விட்டுப் பிரிந்திருக்க மன மில்லை. தன் கணவன் முகமலர்ந்து சந்தோஷமாயிருக்கும் சமையத்தில் அவள் எழுந்திருந்து தன் கணவனை வணங்கி, "நான்செய்த குற்றத்தை மன்னித்தருளவேண்டும். உண்மை யாகவே நான் கிறிஸ்துவ உபாத்திச்சி பேச்சால் புத்தி கெட்டுச் செய்து விட்டேன். அதை மனதில் வையாமல் என்னைப் பரிபாலித்தருளவேண்டும்," என்று மிகுந்த வருத் தத்துடன் பிரார்த்தித்தாள். பாலசுந்தரம், "என் செல் வமே! கண்ணே! நான் உனக்கு என்ன சொல்வது! பலபல பேச்சென்னத்துக்கு? அதை நீ மறந்துவிடு, நான் அதை ஒரு போதும் குற்றமாக நினைக்கவேயில்லை. நீயே னதை நினைத்துக்கொண்டு மனது வருந்துகிறாய்," என்று கூறி முத்தமிட்டு அவளை மகிழச்செய்தான். அவள் மகிழ்ந்திருக் கும் சமையத்தில், "ஞானம்பா! கிறிஸ்துவப் பாடசாலையில் படிப்பதே பிசகு. ஒரு சிறிய கதை சொல்கிறேன் கேள்.

நான் மூன்றும் கிளாவில் படிக்கிறபோது எனக்கு ஒரு சிநேகனிருந்தான். அவன் பி. ஏ. கிளாவில் படித்தான். அவன் எளியவனாதலால் பாதிரிகள் மனப்படி யெல்லாம் நடந்து அவர்கள் தயவு சம்பாதித்துச் சம்பளமில்லாமற் படித்துவந்தான். அவன்பெயர் இராமையன்; கிறிஸ்துவரிடத் தில் அதிகப் பழக்கமாதலால் அவர்களுடைய நடை உடை பாவனைகளே அவனுக்குப் படிந்தது. பி. ஏ. பாஸ் பண்ணின பிறகு ஸ்கூல் வாத்தியார் வேலையில் அமர்ந்து சொற்ப சம்பளம் பெற்றுச் ஜீவித்து வந்தான். வெகுநாள் சம்பளம் உயராமலே யிருந்தபடியால் கஷ்டப்பட்டுப் பிறகு ஒரு

யோசனை செய்தான். அதாவது திருநெல்வேலி பிராமண ெனாருவன் கிறிஸ்துவனாய்விட்டான். அவனுக்கு ஒருபெண் ணிருந்தாள். அவள் கிறிஸ்துவ போர்டிங் ஸ்கூலில் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருந்தாள். வீணை முதலிய வாத்தியங்கள் வாசிப்பாள். பரதசாஸ்திரத்திலுஞ் சிறிது பயின்றிருந்தாள். தையல் வேலை நன்றாய்த் தெரியும். ஒரு லோயர் செகண்டரி பெண்பாடசாலைக்கு ஹெட்மிஸ்டர்ஸ் உத்தியோகத்தி லமர்ந்திருந்தாள். அவளை யாராவது ஓர் பிராமணன் விவாகம் செய்துகொண்டால் நாலாயிர ரூபாய் கொடுப்பதாக அவளுடைய தகப்பன் சொன்னான். அந்தப் பெண்ணை விவாகஞ்செய்து கொண்டால் நாலாயிர ரூபாய் கிடைப்பது மின்றி அவள் உத்தியோகஞ் செய்ததாலும் தனக்குச் சம்பளம் உயருமாதலாலும் மகாராஜனைப்போ லாய்விடலாமென்றே கருதினான். அப்படியே விவாகஞ் செய்துகொண்டு அவளோடு கூடியிருந்தான். அவனுக்கு இப்பொழுது நூறுரூபாய் சம்பளம். அந்தப் பெண்ணுக்கு முப்பத்தைந்து ரூபாய் சம்பளம். அந்தப் பெண் வீட்டிலே தங்குவதில்லை. ஐரோப்பிய ஸ்திரீகளைப்போலக் காலையி லெழுந்திருந்து, பல்தேய்த்து முகங்கழுவிக் காப்பி குடித்து விட்டுப் புஸ்தகங்களை யெடுத்துக்கொண்டு படிக்கிறதும், தனக்கு வேண்டியவர்கள் வீட்டுக்குப்போகிறதும், ஒன்ப தரை மணிக்கு வீட்டுக்கு வந்து உண்டு உடுத்து ஸ்கூலுக்குப் போகிறதுமாக இருந்தாள். அவள் உபாத்திச்சியாயிருந்த பள்ளிக்கூடத்து மானேஜர் அந்தப் பெண்ணுடைய திறமை முதலியவற்றால் அவளிடத்துப் பிரியமாயிருந்தார். அந்தப் பிரபு சுதேச ராஜரிடம் மந்திரியாயிருந்தவர். அவ்வூரில் அவருக்குச் செல்வாக்கு மிகுதி. அந்தப் பிரபுவின் வீட்டில் ஒரு குழந்தைக்குக் காதுக்குத்துக் கல்யாணம் நடந்தது.

கல்யாணத்துக்கு வந்த ஜனங்களுங்களுக்கு மனக்களிப் புண்டாகும்படி பாட்டு கச்சேரி வைத்து நடத்தினர். அந்தக் கச்சேரியில் யார் பாடினதென்று நீ கேட்க விரும்புவாய்! நாம் கூறிவந்த கிறிஸ்துவப் பெண்தான். என்சிநேகிதன் கிறிஸ்துவனைய் விட்டபோதிலும் அவனுக்கு இவ்விஷயங்களில் சிறிதும் விருப்பம் இல்லை. வந்த பிரபுக்களுக்குச் சந்தணம் பாக்கு வெற்றிலை கொடுக்கும் உத்தியோகத்தில் அவனை நியமித்தார்கள். தன் மனைவி பாடிக்கொண்டிருக்கும் போது தான் இந்த வேலை செய்வது அவனுக்கு மிகக்குறைவாகத் தோன்றியதனல் மனதுக்குள் வருத்தம் மிகுதியாகவிருந்தது. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் மனதுக்குள் அடக்கிக்கொண்டு வேலை செய்துகொண் டிருந்தான். அந்தப் பெண் வீணையைவைத்து மீட்டிப் பாடினதினல் அந்தப் பிரபு பரமசந்தோஷம் அடைந்து, அவள் கழுத்தில் ஒரு பூமாலையைத் தமது கையினலேபோட்டுத் தாமணிந்திருந்த ஒரு மோதிரத்தையும் அவள் கைவிரலில் இட்டுச் சபாஷ் என்று முதுகில் தட்டிக்கொடுத்தார். அதனல் அவள் மஹா உற்சாகம் அடைந்து பின்னும் அதிக கெம்பீரத்தோடு பாடினள். அவர் தன் மனைவி கழுத்தில் மாலைபோட்டதும், மோதிரமிட்டதும் என் நேசனுக்கு மகாவருத்தத்தை உண்டாக்கிற்று. அது சகிக்கமாட்டாமல் அவன் தனக்குத் தலைநோயுண்டாயிற்றென்று சொல்லிவிட்டு, வீடுபோய் ஒரு ஈவிசேரில் சாய்ந்துகொண்டு மிக துக்கத்தோடிருந்தான். ஒரு பெண்ணுக்கு அவளுடைய நாயகனைத் தவிர மற்றொருவரும் மாலையிடக் கூடாதென்பது நமது தேசவழக்கமல்லவா? அதனல் அவனுக்குண்டான துக்கம் எவ்வளவு பெரிதாயிருந்திருக்குமென்று நீ யோசித்துப்பார். இந்த அவமானத்தை எப்படி நிவர்த்தி செய்து கொள்வதென்று பலவாறு சிந்தித்

துக்கொண்டிருந்தான். இரவு ஏழுமணிக்குப் பாட்டுக் கச்சேரி முடிந்ததும் அவள் வீட்டுக்கு வந்து தன் கணவனைத் தட்டி யெழுந்திருக்கும்படி சொன்னாள். துக்காகிராந்தனாயிருக்கிற அவன் அவளைக் கவனியாமலிருந்தான். அவள் ஏன் என்னோடு பேசவில்லை யென்று கேட்டாள். "நீ இன்று தினம் நடந்து கொண்டவை யெல்லாம் எனக்குச் சம்மதமில்லை. எனக்கெதிரில் உன் கழுத்தில் பிறன் ஒருவன் மாலையிட்டதைப் பார்த்த எனக்கு மனம் சகிக்குமா? நீ தான் மனமொத்திருந்தாய்; நானுமதற்கு உடன்பட நேரிட்டதைக் குறித்து மனம் வருந்துகிறேன். இனிமேலாவது இவ்விதமான அவமானச் செய்கைகளுக்கு நீ உடன்படாதிருந்தால் தான் நான் உன்னோடு கூடிவாழ முடியும்; இல்லாவிட்டால் நீ உனக்கு மாலையிட்டவனோடு கூடிவாழ்; நான் எங்காவது போய் ஜீவிக்கிறேன்; இந்த அவமான செய்கைகளை என் கண்ணாலே பார்த்துக்கொண்டிருக்க என் மனமொப்பவில்லை," என்றான். அன்று தினங் கல்யாண வீட்டிலே தனக்கு நடந்த மரியாதைகளினாலே கரைகடந்து ஆநந்த ஸமுத்திரத்திலே முழுகிக் கிடக்கிற அவளுக்குத் தன் நாயகன் கூறிய வசனங்கள் ஆலகால விஷம்போலிருந்தது. அதனால் அவள் தன் கணவன் வார்த்தையைச் சட்டைப் பண்ணாமல் அலட்சியமாய்ப் போனபடியால் அவனுக்குக் கோபமுண்டாய் அவளைத் தன் காலாலுதைத்தான். அவள் ஒன்றும் பேசாமலெழுந்திருந்து உள்ளே போய்விட்டாள். பிறகு அவன் நாற்காலியின் கைகளிலே யிரண்டு கால்களையும் விரித்துப் போட்டுக்கொண்டு யாது செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தான். அரைமணி நேரத்துக்கெல்லாம் உள்ளே போன பெண்ணானவள் ஒரு இருப்புக் கரண்டியை அடுப்பிற் போட்டுப் பழுக்கக்காச்சி யெடுத்துக் கொண்டு வந்து அவனுடைய

இரண்டு துடைகளிலும் சுறுசுறுவென்று தொனியுண்டாம் படி யிழுத்து விட்டாள். அதனால் அவன் துடிதுடித்து நாற் காலியினின்றும் கீழே விழுந்து கால்மணி நேரம் பதைபதைத் துப் பின்னர் தன் மனைவியை பார்த்து, "அபாதகி! என் இப்படிச் செய்தாய்?" என்றான். "என்னை உதைத்த கால்கள் உதவாமற் போகவேண்டுமென்றுதான் செய்தேன். நாளைய தினம் திவானிடத்தில் நீ சொன்னவற்றைக் கூறித் தகுந்த சிட்சை விதிக்கிறேன் பார்," என்று சொல்லிப்போய் விட் டாள். வெகு நேரம் வரைக்கும் அவன் உபத்திரவப்பட்டுக் கொண்டிருந்து, சற்றுத்தேறி இனியென்ன செய்வது; அவ ளுக்கோ திவான் தயவு பூரணமாயிருக்கிறபடியால் அவசியம் அபாயம் நேரிடுமென்று கருதிப் பயந்து, தப்பித்துக் கொள் ளும்படியான உபாயம் யாதென்று யோசித்துத் தன் வஸ் திரம் புஸ்தகம் பெட்டி எல்லாவற்றையும் அங்கேயே வைத்து விட்டுத் தன்கையிலிருந்த பத்துரூபாயை மாத்திரமெடுத்துக் கொண்டு விடியற்காலம் மூன்றரைமணிக்கு ரயிலிலேறித் திரிசிரபுரம் வந்து சேர்ந்துவிட்டான். உற்றார் உறன் முறை யார் அவனைச் சேர்க்காமல் தள்ளிவிட்டார்கள். கொஞ்ச நாள் ஆஸ்பத்திரியிலிருந்து காயத்தை யாற்றிக்கொண்டு பள்ளிக் கூட வாத்தியார் வேலையில் அமர்ந்துவிட்டான். இன்றளவும் கல்யாணம் செய்யாமலே காலங்கழிக்கிறான்" என்று கூறி னன். அது கேட்ட ஞானம்பாள் சிரிப்பும் வருத்தமு முடைய வளாய் நானும் அப்படிச் செய்து விடுவேனென்று நினைக் கின்றீர்களோ வென்றாள். பாலசுந்தரம் அவளைப்பார்த்து, "ஞானம்பா! உன்குண மெனக்குத் தெரியாதோ? நான் அப்படி நினைக்கவில்லை. கிறிஸ்துவ பாடசாலையில் படிப்பதனு லுண்டாகும் தீமையை உனக்குத் தெரிவித்தேனே யொழிய வேறில்லை. பெண்களை யானாலும் பிள்ளைகளை யானாலும்

கிறிஸ்துவ பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிக் கல்வி கற்பிப்பது கூடாது என்று கூறி அவளை மகிழ்வித்தான். நெடுநேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்து விடிவதன் முன்னே எழுந்திருந்து பல்தேய்த்து முகம் கழுவிக் காலைக்கடனை முடித்துக் காப்பி யருந்திய பின், பாலசுந்தரம் ஞானம்பாளை அழைத்து, "வீட்டுக்குவேண்டிய பண்டங்களைக் குறைவற வாங்கிப் போடு. உன் மாதா பிதாக்கள் சற்று யோசிப்பார்கள். நீயே யாவற்றையுஞ் செய்துவிடு. நான் உங்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு கல்யாணத்துக்குப்போய்ப் பின்னர் ஊருக்குப்போகவேண்டும். அங்கே நாமெல்லோரும் வசித்துக் கொண்டிருந்தால் உன் மாதா பிதாக்களுக்குச் சற்று மன வருத்தமொழியும். அதற்குள் நல்லகாலமும் வந்து ஒத்துக் கொள்ளும்," என்று சொல்ல, அவளும் தன் கணவன் கட்டளைப்படியே பத்து நாட்களுக்கு வேண்டிய பதார்த்தங்களைக் குறைவற வாங்கி வரச்செய்து சுகமாய்க் காலங்கழித்துக் கொண்டிருந்தார்கள். தன் கணவனுடன் கூடியிருக்கிற மகிழ்ச்சியால் ஞானம்பாளுடைய திருமேனி நாளுக்கு நாள் அழகிட்டு மஹாலட்சுமியைப்போல விளங்கினாள்.

கல்யாணம் சமீபித்தவுடனே எல்லாரும் பிரயாணப்பட்டுக் கணபதி அக்கிரகாரம் போய்ச் சேர்ந்தார்கள். கணபதி அக்கிரகாரமென்பது திருவையாற்றுக்குக் கிழக்கே நாலு மைல் தூரத்திலுள்ள ஒரு சிறு கிராமம். அது காவேரியாற்றின் வடகரையிலிருக்கிறபடியால் நீர்ப்பாச்சல் குறைவின்றி வெகு சிலாக்கியமானது. அநேகமாய் அங்குள்ளவர்கள் தனவந்தர்கள். யோக்கியதையும் கண்ணியமுமுள்ளவர்கள். அந்தக் கிராமத்தில் ஞானம்பாளுக்குத் தனிஜாகை யொன்று சித்தப்படுத்தி வைத்திருந்தது. அதில் அவர்கள் வந்திறங்கினார்கள். கல்யாணம் வெகு கெம்பீரமாய் நடந்தது. ஞானம்

பாள் தன் அத்தை மகளுக்குத் தன்பிதா செய்யவேண்டிய வரிசைகளைக் குறைவின்றி நடத்தி மகிழ்ந்தாள். அவளுடைய மாதா பிதாக்களும் தங்களுடைய புத்திரியின் சற்குணத்தால் தங்கள் மானம் காக்கப்பட்டமைக்கு மகிழ்ந்தார்கள். ஐந் தாம் நாள் சேஷ ஓமம் நடந்தபின் சம்பந்திகளுக்கு விருந்து நடந்தது. இன்று யாவரும் போஜனம் செய்தானபின் பால சுந்தரம் மாமனுரை நோக்கி "மாமா! நான் ஊரைவிட்டுவந்து நெடுநாளாயிற்று. சீக்கிரம் ஊருக்குப்போக வேண்டும். இப் பொழுது ஞானம்பாளையும் அழைத்துப்போக விரும்பு கிறேன். அவள் இதுவரைக்கும் உங்களை விட்டுப் பிரியாம லிருந்தபடியால் தனித்து வசிப்பது சற்றுக் கஷ்டமாகவே யிருக்கும். ஆதலால் நீங்களும் அம்மாமி அவர்களும் கூட வந்து அங்கே சிலநாளிருந்து பின்பு ஊருக்குப் போகலாம். என்பேச்சைத்தட்டாமல் அவசியம் வரவேண்டுகிறே"னென, ஐயரவர்கள் அவனுடைய விநயமொழிகளுக்கு மகிழ்ந்து உடன்பட்டதனுல் எல்லாரும் வயலூர் போய்ச் சேர்ந்தார்கள். ஞானம்பாளுக்கு இப்பொழுது குடும்பபாரம் பொறுத்துப் பார்க்கவேண்டிய காலம் வந்து விட்டது. தன் நாயகனுடைய கட்டளைப்பிரகாரம் யாதொரு தவறுதலும் வாராமல் நடத்தி வந்தாள். வேலைக்காரர்கள் வேலைக்காரிகள் யாவரையும் மிக அன்பாய்ப் பரிபாலித்ததனுல் அவர்கள் எல்லாரும் அவளைத் தங்களுடைய மாதாவாகவே கருதி அவளுடைய கட்டளை யைச் சிரசின்மேற்றாங்கி நடந்து வந்தார்கள். பாலசுந்தரமும் ஐயரவர்களும் ஞானம்பாளுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். பாலசுந்தரம் தன் மாதாபிதாக்கள் இறந்துபோன துக்கத்தைக்கூட மறந்துபோனுன். கவலைகள் எல்லாம் ஓடிப்போயின. தன் நாயகியை முன்னிலும் நூறு மடங் கதிகமாக நேசித்து நடத்தினுன். இப்பொழுது அவர்

களுடைய வாழ்வு சொர்க்க வாழ் வென்று கருதலாயிற்று. எல்லாரும் பேரானந்தமாய்க் காலங்கழித்து வந்தார்கள்.

இப்படியிருக்கையில், சீர்காழி தாலூகாவுக்கு அதிகாரியாகிய கலெக்டர் **தாமஸ்** துரையவர்கள் சீர்காழி நோக்கிக் குதிரைமேல் வந்தார். இந்தத் **தாமஸ்** துரையவர்கள் வெகு தயாள குணமுள்ளவர். தமது பிரஜைகளிடத்தில் மிகவும் அன்புள்ளவர்; தமது மனச்சாட்சிக்கு விரோதமாக யாதொன்றுஞ் செய்யமாட்டார். பிறர்பேச்சை நம்பமாட்டார். இராக்காலங்களில் மறைந்திருந்து உண்மையையுணர்ந்து நியாயந்தீர்க்கும் உத்தமபுருஷரென்று குடிகளால் கொண்டாடப்பட்டவர். இவர்தான் சந்தோஷம் பிள்ளை கொலைக்கேசை விசாரித்தவர். இவர் சாயந்திரவேளையில் குதிரைமே லேறிக்கொண்டு சீர்காழி நோக்கி வருகையில் சந்தோஷம் பிள்ளை யிறந்துபோன குளத்திற்குச் சமீபமாக வருகையில் சாயந்திரம் ஐந்தரை மணியாயிற்று. அப்பொழுது நல்லமழை பொழிந்தது. அதனால் சமீபத்திலுள்ள முசாபரி சத்திரத்தில் சற்றுத்தங்க நேரிட்டது. மழைக்காகச் சில மாடுமேய்க்கிற பிள்ளைகளும் வந்து ஒண்டினார்கள். கலெக்டர் வந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களுள் ஒருவன் மற்றவர்களைப்பார்த்துக் கொஞ்சநாளைக்கு முன்னே யிந்நேரத்துக்கு இதுபோல மழைபெய்தது. சந்தோஷம் பிள்ளை யென்றொருவன் குளத்திலிறங்கி முகங்கழுவிக் கொண்டிருந்தான். பெருமழை பிடித்ததும் அவசரமாகக் கரையேறுகிறபொழுது படியிடறிக் குளத்தில் விழுந்திறந்து போனான். ஒருவரும் அவனையெடுப்பாரில்லை. அப்பா! இந்தக் குளம் பொல்லாது என்றான். மற்றொருவன் இது ஒன்றுதானா எத்தனையோ பேரை யிக்குளம் விழுங்கிவிட்டது என்றான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கலெக்டர் துரை

யவர்கள் தாம் செய்த காரியத்துக்கு நிச்சயமாகவே மனம் வருந்தினூர். தாம் செய்த தவறினூல் இரண்டு மூன்று பெரிய குடும்பங்கள் கஷ்டப்படுவதை நினைத்துப் பதறினூர். பிறகு ஊருக்குப்போய் மறுநாள் காரியம் பார்த்துக்கொண்டிருக்கையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணபிள்ளை வந்து தன்னுடைய துர்பாக்கியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது கலெக்டர் தாம் கேட்டவற்றை அவனுக்குச் சொல்லித் தாம் செய்தது உண்மையாகவே தவறென்றும், அதுவிஷயத்தைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தி நன்மை செய்வதாகவும் கூறி யவனை சமாதானப்படுத்தி அனுப்பினூர். இப்பொழுது இந்தக்கேஸ் பட்டணம் அப்பீல் கோர்ட்டில் விசாரணையாய்க்கொண்டிருந்தது. கலெக்டரவர்களும் தாம் கேட்டுத் தெரிந்துகொண்ட உண்மையைக் கவர்மெண்டாருக்குத் தெரியப்படுத்தினூர். இதனூல் அப்பீல் கோர்ட்டார் அந்த மூன்றுபேர்கள்மேலுந் தப்பில்லையென்றும் அவர்களுக்கு மறுபடியும் வேலை கொடுக்கும்படியாகவும் கீழ்கோர்ட்டாருக்கு உத்தரவு அனுப்பிவிட்டார்கள். வக்கீல் கல்யாணராமையரவர்கள் இதை விபரமாக ஒரு கடிதத்தில் எழுதிப் பாலசுந்தரத்துக்கு அனுப்பினூர். அந்தக் கடிதம் கண்டபோது ஐயரவர்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. மறுநாள் கீழ் கோர்ட்டார் உத்தரவை அனுசரித்துச் சரவணபிள்ளைக்கும், சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும் அவரவர்களுடைய உத்தியோகமளிக்கப்பட்டது. இரத்தினமையரவர்களுக்கும் வக்கீல் சந்நது அனுப்பப்பட்டது. அதுவும் வயலூர் வந்து சேர்ந்தது. அது எல்லாருக்கும் அடங்காமகிழ்ச்சிக்கிடமாயிருந்தது. சிலநாள் கழித்து ஐயரவர்கள் பாலசுந்தரத்தினிடம் விடைபெற்றுக்கொண்டு தமது மனைவியோடு சீர்காழிக்குப் பிரயாணமானூர். அவர் ஈடு வைத்திருந்த நிலங்

களுக்கும் வீடுகளுக்கும் கொடுக்கவேண்டிய தொகையைப் பாலசுந்தரம் கொடுத்துமீட்டு அவைகளை ஞானம்பாள்பேரு க்கு எழுதிக்கொண்டான். அது ஐயர்வர்களுக்கு மிக மகிழ்ச்சி யாகவே யிருந்தது. இப்பொழுது ஐயரவர்களுக்குக் கஷ்டங்க ளொழிந்து முன்போலச் சுகவாழ்வுண்டாயிற்று. முன்சீப் முதலியவர்கள் பாலசுந்தரம் தங்களுக் குபகாரம் செய்ததற் காக அவனை மனமாறப் புகழ்ந்து வாயார வாழ்த்தினார்கள். ஞானம்பாளுக்குத் தன்கணவன் பட்டணத்தில் அப்பீல் கேசு நடத்தின விஷயங்களையெல்லாம் இலட்சுமி அம்மாள் சொல்ல அதைக்கேட்டதும் அவள் தன் கணவனுடைய பெருந்தன் மையையும், பரோபகார சிந்தையையும் வியந்து இவ்வளவு உபகாரமும் நம்பொருட்டாகச் செய்ததேயன்றி வேறு எதற் காகச் செய்தனர் என்றும், அவ்வாறு செய்த உபகாரச் செயல் களைத்தன்னிடத்திலாவது தன் மாதா பிதாக்களிடத்திலாவது இதுவரைக்கும் சொல்லாமலிருந்ததையுங் கருதித் தற்புகழ் ச்சி யில்லாமைக்கும் பலபடியாகத் தன் கணவனைப் புகழ்ந்து அவனுடைய நிழலைப்போல அவனை விட்டுப் பிரியாமல் அவனுக்கு உபசாரஞ்செய்து மனமொத்துக் கூடிவாழ்ந்தாள். இரண்டு வருஷங்களுக்குப்பின் ஞானம்பாள் கர்ப்பந்தரித் தாள். அப்பொழுது பாலசுந்தரம் அவளை மிகவும் அன்பாக வும் ஜாக்கிரதையாகவும் பாதுகாத்துவந்தான். இது தெரி ந்த ஐயரவர்கள் வயலூருக்கு வந்து அவ்விருவரையும் சீர்காழி க்கு அழைத்துக் கொண்டுபோய்த் தேசாசாரம், மதாசாரம், குலாசாரங்களுக் கொத்தபடி வளைகாப்பு சீமந்தம் முதலிய வற்றைச் செய்து தன் மகளையும் மருமகனையும் இருகண்களா கப் பரிபாலித்து வந்தார். இப்படியாகப் பத்தாம் மாதத்தில் ஞானம்பாள் சுபமுகூர்த்தத்தில் வம்சத்தை விளக்குந் தீப மெனக் கருதுமாறு ஒரு சற்புத்திரனைப் பெற்றெடுத்தாள்.

ஐயரவர்களும் பாலசுந்தரமும் முறைப்படி செய்யவேண்டிய ஜாதகர்மாதிகளைச்செய்து மகிழ்ந்தார்கள். பதினோராம் நாள் ஞானம்பாளுக்கு நீராட்டிப் புண்ணியாகவசனஞ் செய்து பிள்ளைக்குத் தங்கள் குலதெய்வத்தின் திருநாமமாகிய பால சுப்பிரமணிய னென்று திருநாமகரணஞ் செய்து, பல தானங் கள் வழங்கி, ஏழைகளுக்கும் வேதியர்க்கும் அன்னதானம் செய்து தாங்களும் புசித்து மகிழ்ந்திருக்கும்போது ஒரு கடி தம் வந்தது. அதை ஐயரவர்கள் படித்துப் பார்த்தவுடன் அவருக்குண்டான பேரானந்தத்தை யார்தான் அளவிட்டுச் சொல்லக்கூடும். அதென்னவென்றால், ஐயரவர்களுடைய கப் பல் திசை தப்பிப் போயிற்றென்று முன்னே கூறினோமல் லவா ? அது இரண்டு இலட்சரூபாய் இலாபத்துடன் மீண்டு நாகப்பட்டணம் வந்து சேர்ந்தது என்பதே. நமது தேசத் தாருட் பெரும்பாலார் கருதுவதுபோலவே ஐயரவர்களும் குழந்தை பாலசுப்பிரமணியனுடைய அதிர்ஷ்டந்தான் காணா மற்போன கப்பல் மீண்டுவந்து சேர்ந்ததென்று கருதி யானந் தத்தில் மூழ்கி யாவருக்கும் இதைக்கூறி மகிழ்ந்தார். அது குழ ந்தையின் அதிர்ஷ்டமென்பானேனென்றால் ஐயாவர்களுக்கு ஞானம்பாளைத்தவிர வேறு பெண்ணாவது பிள்ளையாவது இல் லாமையால் தௌஹித்திரனாகிய இந்தக் குழந்தையையே தமக்குப் புத்திரனாகக் கருதினா ராதலாலேயாம். இவ்வாறு சீர்காழியில் யாவரும் புத்திரோற்சவங்கொண்டாடி மகிழ்ந் திருக்கையிலொருநாள் யாரோ ஒரு ஸ்திரீ ஞானம்பாளைப் பார்த்துப்போக வந்திருப்பதாக வாசற் காப்போன் கூற அவளை உள்ளே வரவழைத்தார்கள். அவளுடைய சரீரம் கறுத்து வியாதியால் மெலிந்து நடக்கக்கூடச் சக்தியற்றவள் போலத் தோன்றினள். அவளை யின்னாளென்று ஒருவரும் அறியவில்லை. ஞானம்பாளோ வந்தவளை யாரென்று கேட்க

வெட்கி வாருமென்று கூறிச் சும்மா இருந்தாள். வந்தவள் ஞானம்பாளைப் பார்த்து, "நீ யென்னை யறியவில்லையா! நான் உபாத்திச்சி பால்மரியம்மாளல்லவா?" என்றாள். ஞானம்பாள் வாத்திச்சியின் ஸ்திதியைப்பார்த்துப் பரிதபித்து அவளை நோக்கி, "அம்மா! உமக்கு ஏன் இப்படிப்பட்ட கஷ்டம்நேரிட்டது" என்றாள். வாத்திச்சி, "ஞானம்பா! அந்த வயிற்றெரிச்சலை யென்ன சொல்கிறது, நான் போனவருஷம் நெம்மேலி கிராமத்தில் ஸ்கூல் வைத்துக்கொண்டிருக்கிறபோது வியாதிப்பட்டுப் போனேன். அதனால் கையிலிருந்த பணமெல்லாம் செலவாய்ப்போயிற்று. என் கணவனுக்கு வரும்சொற்பச்சம்பளம் செலவுக்குப் போதாமல் மிகக் கஷ்டப்பட்டோம். இப்படி யிருக்கையி லொருநாள் இரவில் அகஸ்மாத்தாய் நானிருந்த வீடு தீப்பற்றியெரிந்தது. என் கணவன் வியாதியாகவிருந்த என்னைத் தூக்கிக்கொண்டு வந்து வாசலில் விட்டு விட்டு, மறுபடியும் உள்ளே நுழைந்து முக்கியமான சில சாமான்களை யெடுத்துவர முயன்றதனால் சரீரம் வெந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சையிலிருந்துவந்தார். எந்தச் சிகிச்சையிலுந் தீராமல் சில நாளைக்கெல்லா மிறந்துபோனார். ஏற்கனவே வியாதியால் நொந்திருந்த நான் இந்தத் துக்கத்தினாலே மிகவும் நொந்து மெலிந்துபோய் நடக்கவும் சக்தியற்றிருந்தேன். பாதிரிமார்கள் என்னையும் தர்ம ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். ஒருவருஷம் ஆஸ்பத்திரியிலிருந்து வியாதி குணப்படவில்லை[illegible]னாலே டாக்டர் இனிப் பிரயோசனமில்லை, [illegible]ல் வைத்தியம் செய்துகொள் என்று அனு[illegible] நான் என்ன செய்கிறது? கையில் [illegible] பாதிரிமார்களோ வேலை செய்தாலன்றி [illegible]யமாட்டார்கள். கொஞ்சநாள் பூவர் [illegible] என்கிற சேமநிதியிலிருந்து தினம்

ஒரு அணு கொடுத்துவந்தார்கள். எத்தனை நாள் கொடுப்பார்கள், ஆறுமாதங்களுக்குப்பின் அதையும் நிறுத்தி விட்டார்கள். மனத்துக்கத்தினலும் ஆகாரமின்மையாலும் வியாதி மேலிட்டுப் பிச்சை யெடுத்துண்ணப் புறப்பட்டேன். இன்று வரைக்கும் பிச்சையெடுத்து உண்டு காலங் கழித்து வருகிறேன். நீ வந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டு உன்னைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன்" என்றாள். அதுகேட்ட ஞானம்பாள் "விதிவசம் யாரைவிட்டது; உமது பேச்சை நம்பி நானும் கிறிஸ்துவச்சியாயிருந்தால் எனக்குப் இப்படிப்பட்ட கதிதானே கிடைத்திருக்கும். நான் அப்படி யாகாமல் தப்பினது தெய்வானுக்கிரகந்தான். போனது போகட்டும். இனிமேலாவது நல்வழிப்பட்டுக் கொஞ்சம் சௌக்கியப்படுங்கள். நான் என் நாயகனைக் கேட்டுத்தெரிந்து கொண்டு உமக்கு ஏதாவது உபகாரஞ் செய்கிறேனெ[illegible] சொல்லி அவள் கையில் மூன்று ரூபாய் கொடுத்து ந[illegible] வாருமென்று சொல்லி அனுப்பினாள். வாத்திச்சி தான் செ[illegible] குற்றத்தைக்கூடக் கவனிக்காமல் தனக்கு ஞானம்பாள் [illegible] செய்வதாக வாக்களித்ததையும் கேட்டு இந்த உபகா[illegible] கூடப் பாதிரிமார்களால் செய்யமுடியாமல் போன[illegible]ம, தான் அந்தச் சங்கத்தாருக்கு வீணாக பாடுபட்டு உ[illegible]த்ததையும் நினைத்து வருந்தி நாளைக்கு வருகிறேனென்று கூறி வெளியே போய்விட்டாள். அன்றுதினம் [illegible]சிரம் ஞானம்பாள் தன் கணவனோடு வேடிக்கையாகப் பே[illegible]ருந்தபொழுது தன் உபாத்திச்சியின் பரிதாப நி[illegible] அவளுக்கு ஏதாவது உபகாரஞ் செய்யவேவ[illegible] தரம் அதற்கிசைந்து வாத்திச்சி[illegible] தானல் அவளுக்குண்டான வியாதி[illegible] அவள் உயிரோடிருக்கும் அளவும் [illegible]

ரம் அளித்துக் காப்பாற்றுவதாகச் சொன்னன். மறுநாள் வர்த்திச்சி வந்ததும் தன் கணவன் கருத்தை அவளுக்குத் தெரிவித்தபோது அவள் ஞானப்பாளுக்கும் அவள் கணவ னுக்கும் மனப்பூர்வமாக வந்தனமளித்துத் தன் ஆயுள் கால மெல்லாம் அவர்களுடன் இருந்து நன்னெறிப்பட்டு ஒழுகுவ தாக ஒப்புக்கொண்டு அன்றுமுதல் ஞானம்பாளிடத்திலேயே இருந்து மெய்ந்நெறியை யுணர்ந்து வாழ்ந்து வந்தாள்.

இப்படியாகச் சீர்காழியில் இரத்தினமையர் முதலான வர்கள் இந்திரபோகத்தை அனுபவித்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கையில் கப்பல் வியாபாரத்திஞல் கிடைத்த இலட்ச ரூபாயும் ஐயரவர்கள் கைக்கெட்டியது. இப்பொழுது ஐயரவர்களுக்கு வக்கீல் உத்தியோகத்தில் பிரியமில்லை. எல் லாத் தொல்லைகளையும் விட்டொழித்துத் தவநெறியில் ஒழுகி ...மைக்கு நல்வழி தேடவேண்டுமென்கிற அபிப்பிராய ...ாயிற்று. இவ்வெண்ணம் அவருக்கு வெகு நாளாக ...லும், இப்பொழுது முதிர்ந்துதோன்றிற்று. ஒருநாள் ...பிப்பிராயத்தைப் பாலசுந்தரத்துக்குத் தெரிவித்தார். ...நரம் அது நல்ல யோசனைதானென்றும், அப்படிச் செய்வது ... தனக்கும் விருப்ப மென்றும், வக்கீல் வேலையை விட்டு விட்... வயலூர் வந்து சேர்ந்தால் அவ்வெண்ணம் நன் ருய் நிறைவே...று மென்றுங் கூறினன். அதுவே ஐயரவர் கள் கருத்துமாதலால் சந்தோஷித்து அதைப்பற்றி முயற்சி களைச் செய்யத்தொடா... தர்க்காஸ்து எடுத்திருந்த ...லங்களை இராஜி... அ...டுத்தொழித்தார். வியாபாரத் ...தையும் நிறுத்திவ்வறு வகைய... ...ர்காழியிலுள்ள வீடு மனைகளை ...பிவிட்டார்கள் ...கிக்கொண்டார். அவ்விடத்தி ஒருகாசு கூட இல்லை. ...ம் தீர்த்துக் கொண்டார். பின் றிப் பணஉதவி ...ருந்தார். இது தெரிந்த முன்சீப் பண்ட் (Poor ... ...ளும் பென்ஷன் பெற்றுக்கொண்டு

ஐயாவர்களோடுகூட வயலூர் போய்ச் சுகமாய்க் காலங்கழ
நிச்சயித்துக் கொண்டார். எல்லாரும் நல்ல சுப முகூர்த்
தில் பிரயாணப்பட்டு வயலூர் போய் இணையற்ற சுக போ
களை யனுபவித்துக்கொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.
ஞானம்பாளும் பாலசுந்தரமும் தங்களோடு கூட வந்
களுக்கெல்லாம் தகுந்த ஏற்பாடு செய்து கொடுத்துவி
யாதொரு குறைவுமில்லாமல் இன்றள தவே
போகங்களை யனுபவித்துக்கொண்டு வாழ்ந்துவருகின்றார்
நாம் இந்த அற்புத தம்பதிகளின் ஊர் பேர்களை மா
கதையை யெழுதிப் பூர்த்தி செய்தாலும் இந்தப் புஸ்
அவர்கள் கைக்கு எட்டுமாயின் உண்மையாகவே அவர்க
குப் பேரானந்த முண்டா மென்பதில் ஐயமேயில்லை. இக்க
அவர்களைப் பற்றிய தென்ப அவர்களுக்குக் குறி
கும் பொருட்டு அவர்கள் பழனியாத்திரை போகும்
நடுக்காவேரி கிராமத்தில் ஒரு நாள் தங்கி என்னை
ஷித்தார்கள் என்பதையும், இச்சரித்திரத்தை யெ
விடுமாறெனக்கு உத்தரவளித்ததையும் அவர்களு
மூட்டி; ஆண்டவன் திருவருளை முன்னிட்டுக் க
பூர்த்திசெய்கிறோம். இந்தச் சற்குண தம்பதி
பௌத்திரவர்க்கங்களோடு நெடுங்காலம்
சிறப்பை அனுபவித்து வாழும்படி
துதிக்கின்றோம்.

THE TATA PRINTING WORKS ... CHETTY ST., MADRAS.